தேவனுடைய செயல்களை இங்கே பாருங்கள்



REV. Y.S. DEVA SUNDARAM

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணையதளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Glory to God

A PERSON OF SELF - REALISATION IN INDIA

By

Rev. Y. S. Deva Sundaram

Contact :

Rev.Y.S.Deva Sundaram
Jehovah Salvation Church
369 C, Mathias Nagar
Nagercoil - 629 001
K.K.Dt, India.
Phone : 06452-25210

Rev.Y.S.Deva Sundaram
Jehovah Nissi Theological Institute
Promised Land, Gurukulam Rd
Ananthan Nagar, Asaripallam P.O.,
K.K.Dt , - 629 201, India.
Phone : 04652 - 33185, 27145.
Email : ngl_jnti@sancharnet.in

Praise the Lord

A PERSON OF SELF - REALISATION IN INDIA

Rev.Y.S.Deva Sundaram

என்னுடைய அனுபவத்தில் தேவனுடைய செயல்கள்.

Rev. Y. S. தேவசுந்தரம்

பிள்ளைகளைப் பற்றிய பெற்றோரின் தீர்மானங்களை தேவன் கனம் பண்ணுகிறார் :

அப்போது நான் பதினெட்டு வயதுள்ளவன். என் தகப்பனார், "மகனே நீ எங்களுக்கு ஏழாவது பிறந்தவன், ஆக 10 பிள்ளைகள். உன் தமையன் இறந்து போனான். உன் தாயாரும் நானுமாக இனி பிறக்கும் ஆண் மகனை ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் ஊழியத்துக்காக விட்டு விட வேண்டும் என்று தீர்மானம் செய்து கொண்டோம், ஆனபடி-யால் தேவனுடைய ஊழியத்துக்காகவே நீ படிக்க வேண்டும் என்றார்.

அன்று முதல் நான் தேவ சந்திப்பைப் பெறாமல் அவருடைய ஊழியக்காரனாக மாறமாட்டேன் என தீர்மானம் செய்து கொண்டேன். இப்போது ஐம்பத்து மூன்று வருடங்களாக நான் தேவனுடைய ஊழியக்காரனாக இருக்கிறேன்.

தேவபக்தியுள்ள குடும்பம் :

1930 மே மாதம் 5-ம் தேதியில் நான் லண்டன் மிஷன் கிறிஸ்தவர்களான என் பொற்றோருக்குப் பிறந்தேன். 1948-ம் வருடம் வரை, நெல்லை, குமரி மாவட்டங்களில் கிறிஸ்தவர்கள் மத்தியில் ஆவிக்குரிய அனல் காணப்பட்ட காலம்.

என் பாட்டனார் இந்து மார்க்கத்திலிருந்து தோமாஸ் என்னும் பெயருடன் கிறிஸ்தவரானார். அவர் குமரி மாவட்டத்திலிருக்கின்ற மணவாளபுரம் என்னும் சிற்றூரில் ஆசிரியராகவும் போதகராகவும் இருந்தார். அவருடைய மகனான யோவான் ஆகிய என்னுடைய

When I was ninteen years old, I heard the sound of my name being called out, "son, my son Deva Sundaram, behold your sins are forgiven. I cleansed you with my blood which I had spilt for you. Now I thank God that I am running in the 50 th year of my ministry.

The Lord inspired me to conduct meetings to teach the believers about the word of God and pray for the sick.

தந்தை மணவாளபுரம் கிறிஸ்தவ சபையில் டீக்கனாராகவும், பொருளாளராகவும் இருந்தார். கட்டடம் கட்டும் தொழிலாளியான என் தகப்பனார் தன் குடும்பத்தை கிறிஸ்துவுக்குள்ளாகக் கட்டி எழுப்பி இயேசு கிறிஸ்துவினாலுள்ள இரட்சிப்பைப் பெற்று, தேவனுடைய வேத வசனங்களை விசுவாசித்து வாழ்ந்தார். ஆலயத்தில் உபதேசியாராகவும், பாடகராகவும் பணிவிடை செய்துவந்தார். என் தாயார் விவசாய குடும்பத்திலுள்ளவர். என் தந்தை அவருடைய பெற்றோருக்கு ஒரே மகன். எனவே செல்லமாக வளர்ந்து வந்தார். என் தாய் அவருடைய பெற்றோருக்கு ஒரே பெண் பிள்ளை. அவருடைய உடன் பிறப்புகள் 3 ஆண்கள். எனவே என் தாயாரும் மிகவும் செல்லமாக வளர்ந்து வந்தார்கள்.

என் பெற்றோருக்கு மொத்தம் 10 பிள்ளைகள். நான் 1930 ஆம் ஆண்டு மே மாதம் 5–ம் தேதி ஏழாவது பிள்ளையாகப் பிறந்தேன். எனக்கு முன் பிறந்தவர்களில் 3 பேர் இறந்துபோனார்கள். எனக்கு முன்னால் இரண்டு ஆண்களும், ஒரு பெண்ணும் எனக்கு பின்னால் இரண்டு ஆண்களும் ஒரு பெண்ணும், நடுவில் நானும் ஆக ஏழு பேர் உயிருடனிருந்தோம். என் பெற்றோர் வயல் மற்றும் புரயிடங்களையுடைய வசதியிலிருந்தார்கள்.

தேவ பக்தியின் ஆரம்பம்

என் தந்தை ஆலய ஆராதனை விஷயங்களில் ஞாயிறுதினங்களில் தேவாராதனைக்காக காலைநேரம் தேவாலயம் சென்று, மாலை ஆராதனை முடிந்தபின்பு தான் வீட்டுக்கு வருவார். அதுவரை வேத வாசிப்பிலும் ஜெபத்திலும் தரித்திருப்பார். ஆண் மக்களாகிய எங்களையும் ஆலயத்திலேயே வைத்துக்கொள்ளுவார். கிறிஸ்தவ அனுபவங்கள் எனக்கு இல்லாவிட்டாலும், பக்திமானாக என் பதினெட்டு வயது வரை வாழ்ந்து வந்தேன். உங்களிலொருவன் தன் வாழ்க்கையில் பரிசுத்தமில்லாமல், தன் இருதயத்தை வஞ்சித்து, தன்னைத் தேவ பக்தியுள்ளவனென்னு எண்ணினால் அவனுடைய தேவ பக்தி வீணாயிருக்கும். திக்கற்றப்பிள்ளைகளும் விதவைகளும்

படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைபடாதபடிக்கு தன்னைக் காத்துக் கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது. யாக் 1:27. என்று பரிசுத்த வேதாகமம் கூறுகிறது.

என் தந்தை ஆலய ஆராதனை விஷயங்களில் மிகவும் கவனமாக இருந்தார். பிள்ளைகளை பக்தியின் பாதையில் நடத்தி வந்தார். வேதாகமம் வாசிக்கவும், வேத வசனங்களை மனப்பாடம் செய்து ஒப்புவிக்கவும், பாடல்களைப் பாடவும் பழக்குவிக்கப்பட்டோம். விளையாடவோ, வீணாகச் சமயங்களை பிறர் மக்களுடன் செலவிடவோ எங்கள் பெற்றோர் எங்களை சம்மதித்ததில்லை. பள்ளிநேரங்கள் தவிர மற்ற நேரங்களில் வீட்டிலுள்ள வேலைகளையும் செய்வதில் சமயங்களைச் செலவிட்டுவந்தோம். எங்களிடம் மீன்களைப் பிடிக்கிற வலை இருந்தது. அதனால் எங்கள் ஊர் பக்கம் உள்ள காயலில் சென்று மீன்பிடித்து அவைகளையும் உணவாக உண்டு வளர்ந்தோம். எங்களுக்கு ஒரு வள்ளம் இருந்தது. அதை காயலில் ஓட்டி ஜனங்களை மறுகரைக்குக் கடத்தி அதனாலும் பணம் சம்பாதித்தோம். வயலில் உள்ள நெல் வருமானமும், பனைமரங்களினாலுள்ள கருப்புக்கட்டி வருமானமும், தேங்காய், புளி, மாங்காய் மூலமாக வருமானமும் மழைக் காலங்களில் பயிறு, உளுந்து, காணம் முதலான இளம்பயிர் வருமானமும் எங்களுக்குச் செழிப்பாக இருந்தது. என் தாயார் மிகவும் சிக்கனமாகச் செலவு செய்வார்கள். கடினமாக உழைப்பார்கள். என் தந்தையும் அப்படியே. எங்களையும் அதுபோல உழைப்பாளிகளாகவும் பழக்கினார்கள். இதனால் வீண் செலவும், வீண் பழக்க வளக்கங்களும் கெட்ட பழக்க வழக்கங்களும் இல்லாதிருந்தது. எங்கெங்கே ஆவிக்குரிய கிறிஸ்தவ விசேஷக்கூட்டங்கள் வந்தாலும் எங்கள் தந்தை எங்களை அழைத்துச் செல்லுவார்கள். நாங்கள் லண்டன் மிஷன் கிறிஸ்தவர்களாயிருந்தோம். எங்கள் சபையில் கிறிஸ்தவ நிகழ்ச்சிகளை நாங்களே முன் நின்று நடத்தி வந்தோம்.

அந்நாட்களில் சுயாதீனமாக சுவிசேஷ ஊழியம் செய்கிற தேவ ஊழியக்காரர்கள் எங்கள் வீட்டில் வந்து தங்கியிருந்து எங்கள் வீட்டிலும்,

ஆலயத்திலும், பலர் வீடுகளிலும் ஜெபக்கூட்டங்களை நடத்தி வந்தார்கள். இதனால் எங்கள் தேவபக்தி விருத்தியடைந்தது. என் பெற்றோர் தேவனை அதிகமாக விசுவாசிக்கிறவர்கள். எந்தக் கஷ்டங்கள், எப்பேர்ப்பட்ட வியாதிகள், சுகவீனங்கள் வந்தாலும் மருந்து, வைத்தியம் பார்க்க மாட்டார்கள். நமது பாவங்களுக்காகவும், நமது நோய்களுகக்காகவும், நமது துக்கங்களுக்காகவும், நமது பலவீனங்களுக்காகவும் இயேசுகிறிஸ்து சிலுவையிலறையப்பட்டு, பாடுகள் பல பட்டு இரத்தம் சிந்தி மரித்து, அவைகள் எல்லாவற்றிலும் வெற்றி பெற்று உயிர்த்தெழுந்திருக்கிறார், அவர் நம்மை முற்றிலும் குணமாக்குவார். விசுவாசிகளின் ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும் என்னும் விசுவாசத்தில் உறுதியாயிருந்தார்கள். பிள்ளைகளான எங்களையும் அந்த விசுவாசத்துக்குள் வழி நடத்தினார்கள். எங்கள் வீட்டில் ஒரு அறையை ஜெபத்துக்காக ஒதுக்கிவைத்து அவ்வறையில் சென்று ஜெபிப்பது எங்கள் வழக்கமாயிருந்தது. தினமும் காலை மாலை குடும்பமாகக் கூடி, பாடி, வேதாகமம் வாசித்து ஜெபிப்போம். சில சமயங்களில் என் தந்தை அதில் ஒரு குட்டிப் பிரசங்கமும் செய்வார். தேவஊழியக்காரர்களை உபசரிப்பதில் என் தாயார் மிகவும் உற்சாகமாக இருப்பார்கள். இதனால் தேவ உழியர்களின் சந்திப்பு எங்கள் வீட்டில் அதிகமாகவே இருந்தது.

என் தந்தை குடும்பத்தினர் இந்துக்களாக இருந்தாலும், அவர்கள் எங்கள் வீட்டில் வருவார்கள், சந்தோஷமாகவும் சமாதானமாகவும் எங்களோடு நன்றாயிருக்கிறார்கள். அவர்கள் வீடுகளிலும் நாங்கள் செல்லுவோம். குடும்ப ஐக்கியம் இவ்விதமாகப் பாதுகாக்கப்பட்டு வருகிறது. என் தாயார் குடும்பத்தினர் சிலர் பெந்தெகோஸ்தே கிறிஸ்தவர்கள். அவர்கள் வீடுகளில் நாங்கள் சென்று சந்தோஷமாகவும் சமாதானமாகயிருக்கி!றோம். அவர்களும் எங்கள் வீட்டுக்கு வந்து நன்றாயிருக்கிறார்கள். இவ்விதமாகக் குடும்ப ஐக்கியம் நன்றாகவே இருக்கிறது. நாங்கள் எங்கள் குடும்பங்களின் மக்களுக்காகவும், சபைமக்களுக்காகவும், தேவ ஊழியர்களுக்காகவும் தேசத்தின் நலன்களுக்காகவும் ஜெபித்து வந்தோம்.

பள்ளிப்பருவம் தேவ பக்தியின் வளர்ச்சி :-

என் முதல் 4 வகுப்புகளை என் சொந்த ஊரான கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மணவாளபுரம் என்னும் சிற்றூரிலுள்ள லண்டன் மிஷன் பள்ளிக்கூடத்தில் படித்தேன். ஞாயிறுபள்ளி வேதாகமப் பாடங்களில் அதிக உற்சாகமாகப் பங்கெடுத்து வந்தேன். இங்கு படிப்பை முடித்துவிட்டு புத்தளம் என்ற ஊரில் உள்ள லண்டன் மிஷன் பள்ளிக்கூடத்தில் தமிழில் Middle School படிப்பான 5 முதல் 7 வகுப்புவரைப் படித்தேன். இந்நாட்களில் (Scripture Class) வேதாகம வகுப்புகளிலும் ஒழுங்காகப் பங்கெடுத்தேன். வேதபுஸ்தகத்தில் உள்ள சரித்திரங்களை சிறு கதைகளாகப் படித்துக்கொண்டேன். பின்பு நாகர்கோவிலிலுள்ள St.Francis High School ல் தமிழில் 8-ம் 9-ம் வகுப்புகளைப் படித்தேன். இந்நாட்களில் மற்றும் பாடங்களோடு தமிழ் இலக்கியங்களையும், தமிழ் இலக்கணங்களையும் ஓரளவு கற்றுக்கொள்ள முடிந்தது. தமிழ் புலவர்களையும், தமிழ் இலக்கண வல்லுனர்களையும் பற்றிப் படிக்கும்போது, நானும் புலமையடையவேண்டும் என்று எண்ணினேன். இந்த பாடசாலை ரோமன் கத்தோலிக்க ஸ்தாபனமாக இருந்தபடியாலும், தினமும் காலை மாலை 12 கி.மீட்டர் வீதம் நடந்து போய் வந்து கொண்டிருந்தபடியாலும் இந்த இரண்டு வருடங்களும் எனக்கு வேதபாடங்களில் படித்துப் பங்கு பெற முடியவில்லை. ஆனாலும் ஞாயிறு, மற்றம் விடுமுறை நாட்களில் ஆலய ஆராதனைகளுக்கும், மற்றும் ஆவிக்குரியக் கூட்டங்களுக்கும் போய் வந்து கொண்டிருந்தேன். தமிழ் பாடசாலையில் படிப்பை முடித்தபின்பு நாகர்கோவிலிலுள்ள Scot Christian English High School ல் IV th Formல் (9 வது வகுப்பில்) சேர்ந்து தொடர்ந்து மூன்று வருடங்கள் படித்து English School leaving Certificate பெற்றேன். முதல் வருடம் நாகர்கோவிலிலுள்ள நண்பர்களும் குடும்பத்தாருமான சொந்தக்காரர் வீட்டில் தங்கி படித்தேன். இரண்டு வருடங்கள் அப்பள்ளிக்கூடத்தைச் சேர்ந்த மிஷன் ஹாஸ்டலில் தங்கி படித்தேன். பள்ளிக்கூடத்தில் வேதபாட வகுப்புகளில் முதல் மார்க் வாங்கி னேன். அதற்கானச் சிறப்புப் பரிசுகளையும் பெற்றேன். என்னுடைய தெய்வ

பக்தியின் காரணமாகப் பள்ளிக்கூடத்தில் நல்ல பெயர் வாங்கினேன். ஹாஸ்டலில் தங்கியிருந்த காலத்தில் கனத்துக்குரிய சத்தியநேசன் ஆசிரியர், ஹாஸ்டலில் வார்டனாக இருந்தார். அவர் தெய்வபக்தியும் வேதாகம அறிவும் நிறைந்தவர். விடுமுறை காலங்களில் அவர் கிறிஸ்தவ உபதேச செய்திகளைப் பல ஊர்களுக்கும் ஆலயங்களிலும், விசேஷ இடங்களிலும் பிரசங்கிக்கும்படி செல்லுவார். என்னை அவர் நன்கு கவனித்து வந்தார். எனக்கு ஹாஸ்டலில் யேசுதாஸ் என்ற மாணவ நண்பன் உண்டு. நாங்கள் சேர்ந்து ஜெபிப்போம், சேர்ந்து வேதபுஸ்தகம் வாசிப்போம். இதை அவர் கவனித்து எங்களை ஹாஸ்டல் ஸ்டோர் ரூமில் உள்ள பாதுகாப்பு வேலையைத் தந்து, நாங்கள் அங்கேயே தங்கும்படி இடம் கொடுத்தார். எங்கள் தேவபக்தியும் ஜெப ஜீவியமும் வளர்ந்து வந்தது. கனம் சத்தியநேசன் ஆசிரியர் அவர்களின் உள்ளத்தில், "தேவ இராஜ்ய இயக்கம்" ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என்னும் எண்ணம் இருந்து வந்தது. அதை தான் ஆரம்பிக்க இருப்பதாகவும், அதற்கான சில வேலைகள் செய்யவேண்டும் என்றும் கூறினார். இது எங்களுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. அதற்காகப் புத்தகங்களையும் அதில் கேள்விகள் எழுதுவதையும், அதன் பதில்களைச் சரிபார்ப்பதும், அது சம்மந்தமான ஜெபகூட்டங்களை ஆயத்தப்படுத்துவதும், பங்கெடுப்பதுமான வேலைகளைச் செய்து வந்தோம். எங்கள் படிப்போடே இந்த நல்ல வேலையிலும் உற்சாகமாயிருந்தோம். இதுவும் என் தேவபக்தி வளர்ச்சியடைய உதவியாயிருந்தது. நான் படித்துக்கொண்டிருந்த E.S.L.C யின் கடைசிப் பரிட்சை வாரத்தில் பாடசாலையின் பக்கத்துக் காம்பவுண்டில் ஒரு ஆவிக்குரிய கூட்டம் நடந்து வந்தது. பரீட்சைக்காகப் படித்துக்கொண்டிருக்கும்போதே அந்த கூட்டங்களின் மாலைக் கூட்டங்களிலும் போய் பங்கு பெற்றேன். அது என்னுடைய பரீட்சையைப் பாதிக்கும் என்று நண்பர்கள் சொன்னபோதிலும் என் ஆர்வத்தின் மிகுதியினால் ஆவிக்குரியக் கூட்டங்களுக்குப் போய் வந்து, பின்பு படித்துப் பரீட்சை எழுதினேன். இவ்வருடமே வெற்றி பெற்றேன். நான்

படித்துக்கொண்டிருக்கும் காலத்தில் காஞ்சிரக்கோட்டில் ஒரு சுவாமியார் இருக்கிறார், அவர் ஞானதிருஷ்டி வரமுடையவர். திரளான மக்கள் அவருடைய ஞானதிருஷ்டியினால் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர் பார்வைக்கு இயேசுவானவரைப் போலிருக்கிறார் என்று கேள்விப்பட்டேன். இதை என் உடன் மாணவர்களிடம் சொல்லி, சிலமாணவர்களைச் சேர்த்துக்கொண்டு, காஞ்சிரக்கோடு போய் சுவாமியாராகிய சாது.யேசுதாஸ் அவர்களைக் கண்டோம். அவர் எங்களுக்காக ஸ்தோத்திரத்துடன் ஜெபித்து எங்களை அனுப்பி வைத்தார். பிறகு அங்கு நடக்கும் கூட்டங்களுக்கு இடையிடையே போயிருக்கிறேன்.

இரட்சிப்பின் அனுபவம் :

நான் தேவனுடைய ஊழியத்துக்காக என் பிறப்புக்கும் முன்னே ஒப்புவிக்கப்பட்டிருக்கிறேன் என்பதை அறிந்த பின்பு அதை மறுத்துவிட என்னால் முடியவில்லை. ஆனபடியால் மிகக் கருத்தாக தேவனுடைய சந்திப்பைத் தேடினேன். ஆவிக்குரிய எழுப்புதல் கூட்டங்களுக்கும், கன்வென்ஷன் கூட்டங்களுக்கும் என் தந்தையுடன் நானும் செல்ல ஆரம்பித்தேன். ஒருநாள் ஒரு தேவ ஊழியர் நான் இரட்சிக்கப்பட்டேன் என்று கூறினார். அவரிடம் போய், நான் இரட்சிக்கப்பட என்ன செய்யவேண்டும் என கேட்டேன். அவரோ, இயேசுகிறிஸ்துவிடம் உன் பாவங்களை அறிக்கை செய்து ஜெபி என்று சொல்லிவிட்டு விரைவாகப் போய்விட்டார். பின்பு எனக்கு அதன் பொருள் புரியவில்லை. ஆனாலும், என்னை மன்னிக்கும்படி ஜெபத்தில் என்பாவங்களை ஒவ்வொன்றாக சொல்ல ஆரம்பித்தேன். ஆனால் சொன்னவைகளே திரும்ப வந்தன.

என் மனதில் ஒரே குளப்பமாக இருந்தது. துக்கமும் கவலையும் அதிகரித்தது. பாவமன்னிப்புப் பெற வேண்டுமே என ஆத்திரப்பட்டேன். ஒரு காகிதத்தை எடுத்து என் நினைவில் வந்த எல்லா தப்பிதங்களையும் எழுதினேன். அந்த காகிதத்தை என் தனி ஜெபத்தில் தேவனுக்கு முன்பாக விரித்து, ஆ! தேவனே, இதோ இவைகள் என்பாவங்கள். இவைகளை மன்னித்தீர் என்ற நிச்சயம் கிடைத்தவுடன்

இதைச் சுட்டு சாம்பலாக்கி அழித்துவிடுவேன். ஆண்டவரே, என்னை மன்னியும் என பலநாட்கள் ஜெபித்து வந்தேன். ஒருவேளை கனவில் கர்த்தர் வந்து என் பாவங்களை மன்னித்ததாக பேசுவார் அப்போது அதை எரித்துப்போடவேண்டும் என்று தீர்மானித்து, அந்த பாவக்காகிதத்தை என் படுக்கையில் என் தலையணையின் அடியில் வைத்துப் படுத்துக்கொண்டு பல நாட்கள் நித்திரை செய்தேன். நான் தேவபக்தியுடன் பற்பல காரியங்களைச் செய்தேன். பிறருக்கு நல்ல பிள்ளையாக இருந்தேன். என் கடமைகளில் நான் தவறவில்லை. பெற்றோரின் அன்பைப் பெற்று நல்லமாதிரியாக வளர்ந்தேன். எல்லோரும் என்னை தேவசுந்தரம் ஒரு நல்ல பையன் என்று சொன்னார்கள்.

எழுப்புதலின் காலம் :

1940 முதல் 1950 வரை கன்னியாகுமரி மாவட்டத்தில் பரிசுத்த ஆவியானவரின் எழுப்புதல் காணப்பட்ட காலம். இந்தியா முழுவதிலும் விடுதலையின் சத்தம் முழங்கிக் கொண்டிருந்தது. பிரட்டீஷ்காரர்களிடமிருந்து இந்தியா விடுதலை பெற பற்பல விதமான புரட்சிகள் நடைபெற்ற கடைசிக்கட்ட ஆர்பாட்டங்கள் எங்கும் காணப்பட்டன. அதன்பலனாக 1947 ஆகஸ் 15-ம் நாள் இந்தியா பிரட்டீஷ் ஏகாதிபத்தியத்திலிருந்து விடுதலைபெற்று சுதந்தர நாடானது. பரிசுத்த ஆவியானவரோ தேசம் பாவத்திலிருந்தும், சாபத்திலிருந்தும் பாரம்பரியங்களிலிருந்தும் விடுதலை பெறக் கிரியை செய்துகொண்டிருந்தார். இக்காலத்தில் சாது யேசுதாசன் என்பவரை தேவன் எழுப்பி வல்லமையான தீர்க்கதரிசியாகவும், ஞானதிருஷ்டிக்காரனாகவும் உபயோகித்துக்கொண்டிருந்தார். கிறிஸ்தவர்களின் நடுவில் மாபெரும் தேவபக்தி உருவானது. பெயர்க்கிறிஸ்தவ சபைகள் என்று எண்ணப்பட்டுவந்த லண்டன் மிஷன் கிறிஸ்தவர்கள் நடுவே புரட்சிகரமான சம்பவங்கள் நடந்தன. "தென் இந்திய கிறிஸ்தவ சபை" என்னும் அமைப்பு ஆரம்பிக்கப்பட்டு அதில்

எல்லா கிறிஸ்தவ அமைப்புகளும் இணைக்கப்படவேண்டும் என்னும் கொள்கை லண்டன் மிஷன் சபையாருக்கு வெறுப்பாயிருந்தது. இதனால் பல கிராமங்களிலிருந்த லண்டன் மிஷன் சபையாருக்குள் பிரிவினைகளும், பகைகளும், விரோதங்களும், வைராக்கியங்களும் உண்டாயின.இது சம்பந்தமாக சில ஊர் சபைகளில் கோர்ட்களில் வழக்குகள் தொடுக்கப்பட்டன. ஆனாலும் பெரும்பான்மையான சபைகள், தென் இந்திய கிறிஸ்தவ சபையின் ஆட்சி முறையை ஏற்றுக் கொண்டு அந்த அமைப்புடனே இணைக்கப்பட்டன. ஆவிக்குரிய எண்ணம் மிகுந்த மக்கள் தேவனை நோக்கி ஜெபிக்க ஆரம்பித்தார் கள். சாது யேசுதாசன் இக்காலத்தில் தேவ ஆவியானவரால் கிரியை செய்ய மக்களை ஆயத்தம் செய்து கொண்டிருந்தார். அவருடன் சாது நேசமணி, சாது தேவநேசன் முதலானவர்களையும் தேவன் உபயோகித்துக் கொண்டிருந்தார். கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கல்க்குளம், விளவங்கோடு, அகஸ்தீஸ்வரம் தாலுகாக்களில் ஆங்காங்கே மக்கள் தேவனைத் தேட ஆரம்பித்தனர் கூட்டம் கூட்டமாக கூடி ஜெபிக்கும் கூட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. மக்கள் தேவனை நோக்கித் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு ஜெபித்தார்கள். குடும்பம் குடும்பமாக ஜனங்கள் இரட்சிப்பின் சந்தோஷத்தைப் பெற்றார்கள். விண்ணப்பத்தின் ஆவியானவர் எங்கும் கிரியை செய்தார். பலகிராமங்களில் தங்கள் நிலங்களை ஜெபாலயங்கள் கட்டுவதற்காகக் காணிக்கையாக கொடுத்தார்கள். பலர் தங்கள் நிலங்களில் தங்களுக்காகக் கட்டும் வீடுகளை ஜெபவீடுகளாகக் கட்டினார்கள். அதிகமான ஜெபவீடுகளும் ஓலையினாலும், மூங்கிலாலும் கட்டப்பட்டன. மின்சாரம் அக்காலத்தில் இவ்வளவு தாராளமாக இல்லை. ஆகவே பெட்ரோமாக்ஸ் லைட்களை உபயோகித்தார்கள். ஒலிப்பெருக்கி வசதி இல்லாவிட்டாலும், மின்சாரம் இல்லாவிட்டாலும் மக்கள் தங்கள் தொண்டையால் சத்தமாகப் பாடி, பிரசங்கித்தார்கள். வேதாகமக் கல்லூரிகளோ, வேதாகமம் கற்பிப்பவர்களோ இல்லாவிட்டாலும், தேவசமூகத்தில் ஜெபத்தில் தரித்திருந்து வேதாகம வசனங்களை வல்லமையாகப் பிரசங்கிக்கும்

பிரசங்கிமார் எழும்பினார்கள். இவர்கள் தற்பிரியராயிராமல் தற்பிரதிஷ்டையுடையவர்களாக எழும்பினார்கள். காவிஉடை அணிந்துகொண்டு ஆண்களும் கன்னிகைகளும் விவாகமில்லாமல் தேவனுக்கு ஊழியர்களாகப் புறப்பட்டார்கள். தேவனைப் பற்றும் விசுவாசத்தோடும், தேவ அன்போடும், ஆத்தும பாரத்தோடும் ஆண்டவருடைய ஊழியத்துக்காக எழும்பினார்கள். படித்தவர்களும், படிக்காதவர்களும், வேதபுஸ்தகம் வாசிக்கத் தெரிந்தவர்களும் வேதபுஸ்தகம் வாசிக்கத் தெரியாதவர்களும் பரிசுத்த ஆவியினால் நிறைந்து தேவ வசனங்களைத் தீர்க்கத்தரிசனத்தின் ஆவியினால் பேசினார்கள். கல்குளம் விளவங்கோடு ஆகிய தாலுகாக்களில் எந்தக் கிராமத்தில் பார்த்தாலும் காவிஉடை அல்லது வெண்ணுடை தரித்துக்கொண்டு கையில் பரிசுத்த வேதாகமத்தை எடுத்துக்கொண்டு அல்லது தோளில் தொங்கவிடப்பபட்ட பைகளில் வேதபுஸ்தகத்தைச் சுமந்து கொண்டு திரியும் தியாகமான ஊழியக்காரர்களையும் ஊழியக்காரிகளையும் காணமுடியும். ஜனங்கள் ஊழியக்காரர்களைக் கனம்பண்ணி அவர்களைத் தேவதூதர்களாக மதித்தார்கள். வினோதமான கீத வாத்தியங்கள் இல்லாவிட்டாலும் எங்கும் பாடல்களோடு தம்புரு அடிக்கும் தொனி கேட்கப்பட்டது. ஜெபக் கூட்டங்களுக்கு ஆட்களை அழைப்பதற்காக தம்புருவை டமார் டமார் என்று அடிப்பார்கள். வாலிபரும் கன்னிகைகளும் முதிர்வயதுள்ளவர்களும் பிள்ளைகளும் ஆவிக்குரிய அனலுடையவர்களாக மாறினார்கள். பெந்தெகொஸ்தே சமுதாயத்திலுள்ள கிறிஸ்தவர்களுக்கும் இக்காரியங்கள் வினோதமாக இருந்தன. ஏனென்றால் இந்த தியாக ஊழியருக்கு உபதேச ஒழுங்கு, சபை ஒழுங்கு, ஊழியத்தின் ஒழுங்கு என எவ்விதமான ஒழுங்குகளும் கிடையாது. கத்தோலிக்கக் கிறிஸ்தவர்களும், லண்டன் மிஷன், இரட்சணிய சேனை, லூத்தரன் சபை, தென் இந்தியத்திருச்சபையிலுள்ள அனேகருக்கும் இக்காரியங்கள் வேண்டா வெறுப்பாயிருந்தன. ஆனபடியால் சிற்சில இடங்களில் இந்த எழுப்புதல் வீரர்கள் அடிக்கப்பட்டார்கள். இதனால் எழுப்புதல் உண்டான

மக்கள் தாங்கள் இருந்த சபைகளிலும் சங்கங்களிலும் உள்ள ஐக்கியங்களை விட்டு வேறுபட்டார்கள். அனேகர் பெந்தெகொஸ்தே கிறிஸ்தவ சபைகளில் ஐக்கியப்பட்டு அங்கமானார்கள். பலர் ஆங்காங்கே புதிய சபையாராகத் தங்களை அமைத்துக்கொண்டார்கள். இக்காலத்தில் தான் கிருபாசனம் கிறிஸ்துவின் சபை, யேகோவாசபை, யேகாவா இரட்சணிய சபை, தெய்வ சபை முதலான சயாதீனமான சுதேச சபைகள் உண்டாயின. சபைகளாக உருவானபோது சபைகளுக்கான உபதேசங்களையும் ஊழியர்களுக்கான ஒழுங்கு முறை உபதேசங்களையும் அமைத்து, பரிசுத்த ஆவியானவருடைய சகாயத்தோடே எங்கும் சபைகளை ஆரம்பிக்கும் ஊழியமும், வேதாகமப் பாடசாலைகளை ஆரம்பிக்கும் ஊழியங்களும், நடந்து வருகின்றன.

கனவீனத்திலும் ஆபத்திலும் ஆண்டவரைத் தேடினோம் :

என் பெற்றோரும் பிள்ளைகளும் வியாதிப்பட்டால் மருந்து வைத்தியம் இவைகளைத் தேடும் பழக்கம் இல்லை. எங்கள் வீட்டிலேயே ஒரு அறையை ஜெபஅறையாக உபயோகித்து வந்தோம். ஒரு சமயம் என் உடன் பிறப்புகளும் பெற்றோருமாக (Jaundice) மஞ்சள் காமாலை நோயினால் அவதிப் பட்டோம். தேவனாலனுப்பப்பட்ட தேவ ஊழியர்கள் எங்கள் வீட்டில் வந்து தங்கியிருந்து எங்களுக்காக ஜெபித்து, தேவையான உதவிசெய்து எங்களைப் பராமரித்தார்கள். கர்த்தர் சுகம் தந்தார். நான் 5 வயது சிறுவனா யிருந்தபோது ஒரு மூன்று சக்கர வண்டியை ஒடுங்கின திண்ணையில் ஓட்டி விளையாடிக் கொண்டி ருந்தேன். அவ்வேளையில் வண்டியுடன் கீழே விழுந்து என் இடது முழங்கை மொழி புரண்டுபோனது. என் பெற்றோருடன் நான் தேவனை விசுவாசித்து அற்புத சுகம் பெற்றேன். என்னுடைய இளைய சகோதரன் பாலர் வாதம் என்ற நோயினால் இரண்டு கால்களும் நடக்க முடியாதவனர்னான். நாங்கள் அவனோடே சேர்ந்து தேவனை நோக்கி விசுவாசத்தோடே ஜெபித்தோம். ஜீவனுள்ள தேவனாகிய இயேசுகிறிஸ்து அவனை குணமாக் கினார். அவன் பிற்காலத்தில்,மண்டலஉடற்கல்வி ஆய்வாளராக அரசாங் கத்தில் வேலை பார்த்துக் கொண்டு, தேவனுடைய சுவிசேஷ ஊழியராக இருக்கிறார்.

இரட்சிப்பின் பாதை :

என் தாயார் நீண்ட நாட்களாக தலை வலியால் கஷ்டப்பட்டார்கள். நீண்ட காலமாக நாங்கள் குடும்பமாக ஜெபித்தோம். பல தேவ ஊழியர்கள் எங்கள் வீட்டுக்கும் வந்து ஜெபித்தார்கள். ஆயினும் குணமடையவில்லை. குமரி மாவட்டத்தில் ஆலன்கோட்டை என்னும் ஒரு சிறு கிராமம் உண்டு, அங்கேயுள்ள லண்டன் மிஷன் கிறிஸ்தவ சபையார் 1946 ஜூலை மாதம் 29-ம் தேதி முதல் பெண்களுக்காக ஒரு ஜெபக்கூட்டம் நடத்தி வந்தார்கள். அப்பெண்கள் பாவ உணர்வடைந்து, இயேசுகிறிஸ்துவினால் பாவமன்னிப்பாகிய மீட்பையும் பரிசுத்த ஆவியின் நிறைவையும், அபிஷேகத்தையும், ஆவியின் வரங்களையும் பெற்றுக் கொண்டார்கள். இதைக் கேள்விப்பட்ட பொது மக்கள் அக்கூட்டங்களில் பங்குபெற்று இரட்சிப்பையும், தெய்வீக சுகத்தையும் பெற்று ஆங்காங்கே சாட்சிகள் கூற ஆரம்பித்தார்கள். இதைக் கேள்விப்பட்ட என் பெற்றோர் என் தாயாரின் சுகவீனம் மாறுவதற்காக ஜெபிக்கும் படி 1949 மார்ச் 19--ம் தேதி அங்கு சென்றார்கள். என்னையும் அவர்களுக்கு உதவியாக அழைத்துச் சென்றார்கள்.

நானோ என் பாவப் பட்டியலையும் என்னோடே கொண்டு சென்றேன். அக்கூட்டத்தில் பரிசுத்த ஆவியினால் நிறைந்து அந்நிய பாஷைகளைப் பேசி வியாக்கியானமாகவும், தீர்க்கதரிசனமாகவும் உபதேசங்களை உரைத்தார்கள். உணர்வடைந்த மக்கள் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு ஜெபித்து இரட்சிப்பின் சந்தோஷத்தைப் பெற்றார்கள். பிசாசுகள் அலறி ஓடின. பைத்தியம் பிடித்தவர்களும், பற்பலவிதமான நோயாளிகளும் குணமானார்கள். நானும் சில நாட்கள் அங்கு என் பொற்றோருடன் தங்கினேன். என் வளக்கத்தின்படியே இரவு வேளை என் படுக்கையிலும் பகல் வேளை ஊருக்கும் வெளியேயுள்ள மரத்தின் நிழலிலும் என் பாவப்பட்டிகையை தேவனுக்கு முன்பாக விரித்துக் காண்பித்து பாவ மன்னிப்புக்காக ஜெபித்து வந்தேன்.

இன்பநாள் :-

அன்று என் பொன் நாள் வந்தது. 1949 மார்ச் 24-ம் தேதி என் இன்பநாள் பிறந்தது. பகல் 2.30 மணிக்கு நான் 60 ஜெபநண்பர்களுடன் ஜெபித்துக்கொண்டிருந்தேன். அப்போது என்னுடைய பெயரைச் சொல்லி, கூப்பிடுகிற ஒரு சத்தத்தைக் கேட்டேன், அந்த சத்தம், "மகனே, என் மகனே, தேவசுந்தரம், இதோ, உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டன. உனக்காகச் சிந்தின என்னுடைய இரத்தத்தால் உன்னைக் கழுவி சுத்திகரிக்கிறேன், உன் பெயர் ஜீவ புஸ்தகத்தில் எழுதப்படுகிறது, என்னுடைய வல்லமையைப் பெற்றுக்கொள்" என்று உரைத்தது. உடனே என் உள்ளம் மகிழ்ந்தது. அடக்கமுடியாத ஆனந்தத்தால் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் பரலோகத்தின் தேவனை ஸ்தோத்தரித்தேன். துதித்தேன். பெரும் முழக்கத்துடன் தேவனுக்கு நன்றி செலுத்தினேன். என் உள்ளம் பேரானந்தத்தால் பொங்கி வழிந்தது. என் புதுவாழ்வு ஆரம்பித்த நேரம் அது.

சோதனைக்காரன் மேல் வெற்றியடைதல் :

நான் உயர்நிலைப்பள்ளியில் படித்துக்கொண்டிருந்தபோது சனிக்கிழமை ஓய்வுநாள் ஆசாரிப்பு கிறிஸ்தவ நண்பர்களும் போதகர்களும் எனக்கு உண்டு. அவர்களது உபதேசங்களைப் படித்து பரீட்சை எழுதி நற்சான்றிதழ் பெற்றிருந்தேன். அந்த நண்பர்களில் ஒருவர் என்னைத் தேடி வந்தார். மிஸ்டர் தேவசுந்தரம், இக்காலத்தில் தவறையின் ஆவிகள் நடமாடுகின்றன. பலர் சாத்தானின் வஞ்சக ஆவிகளால் நிறைந்து அந்நிய பாஷை பேசுகிறார்கள், தீர்க்கத்தரிசனம் என்று உரைக்கிறார்கள். இவைகளை நம்பக்கூடாது, இவைகளால் கெட்டுப் போகக் கூடாது என்று நீண்ட நேரம் உபதேசித்தார்.

எனக்கு ஒரு சந்தேகம் வந்தது. ஆலன்கோட்டையில் அக்கூட்டத்தில் நடப்பதெல்லாம் தவறான ஆவிகளின் செயல்களாக இருக்குமோ, இனி அங்கு போகக்கூடாது. நமது வீட்டிலேயே ஜெபிப்போம்

என தீர்மானம் செய்துகொண்டேன். என் ஆத்துமாவிலோ தைரியமும் இரட்சிப்பின் சந்தோஷமும் நிறைந்து பொங்கிக் கொண்டிருந்தது. இந்த நிச்சயத்தை எவராலும் அசைக்க முடியவில்லை.

அக்கினியின் அபிஷேகம் :-

என் பெற்றோருடன் எங்கள் வீட்டின் தனி அறையில் இரவு 10 மணி முதல் 12 மணி வரை ஜெபித்து வந்தோம். பகல் நேரத்தில் 2.30 மணி முதல் 3.30 மணி வரை, இயேசுகிறிஸ்துவின் கெத்செமெனே முதல் கல்வாரி வரையுள்ள சரித்திர சம்பவங்களை தியானம் செய்து கொள்வேன். தேவனுடைய வல்லமையைப் பெற வேண்டும் என்பதே என் நோக்கமாயிருந்தது. ஜெபிக்கும்போது, இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தால் எனது சகல பாவங்களும் நீங்கி சுத்தீகரிக்கப்பட்டேன் என்னும் நிச்சயத்துடன், "இயேசுவின் இரத்தத்தால் ஜெயம்" என்றும் என்னை இரட்சித்ததற்காக நன்றி செலுத்தி ஸ்தோத்திரம், அல்லேலூயா என்றும் அதிகமாகக் கூறி வந்தேன்.

1949 ஜூன் 25-ம் நாள் இரவு 12 மணிக்கு என் பெற்றோருடன் ஜெபத்தில் இருக்கும்போது,நான் ஒரு பெரிய மைதானத்திலிருப்பதாகவும், எனக்கு மேலாக நீல நிறமாக வானம் பிரகாசத்துடன் இருப்பதாகவும் நான் பார்த்துக் கொண்டிருக்கையில், திறக்கப்பட்ட வானத்திலிருந்த ஒரு அக்கினி உருண்டை சுழன்று சுழன்று இறங்கிவருவதாகவும் கண்டேன். அப்போது நான் என் சரீரத்தில்தான் இருந்தேனோ அல்லது என் சரீரத்துக்கும் புறம்பேதான் இருந்தேனோ அறியேன். என் உள்ளம் உயர்ந்து விரிந்தது. அந்த அக்கினி உருண்டை என் உள்ளே இறங்கிவிட்டது. அவ்வளவுதான். என் மகிழ்ச்சியின் ஆரவாரம் பெரிதாயிருந்தது. அகமகிழ்ந்து ஆடி ஆர்ப்பரித்தேன். என் பெருந்தொனியைக்கேட்ட என் ஊரார் ஓடி வந்தனர். இந்த சம்பவம் அவர்களுக்கு வியப்பாகவும் ஆச்சரியமுமாக இருந்தது.

ஜெப ஆவியானவர் என் மேலிருந்தார். துதியும் ஸ்தோத்திரமும், அந்நிய பாஷையில் தேவனுடைய மகத்துவத்தை உயர்த்துவதும் என்னிடம்

அதிகமாக இருந்தது. எங்கள் வீட்டில் தேவன் இறங்கி வந்திருக்கிறார் என்ற செய்தி ஊரெங்கும் பரவிற்று. எங்கள் வீட்டு ஜெபத்துக்குப் பலர் கூடிவந்தார்கள். பலருடைய இருதயங்களின் இரகசியங்களை தீர்க்கத்தரிசன வார்த்தைகளாக தேவன் வெளிப்படுத்தினார்.தேவனுடைய ஊழியத்துக்காக தேவன் என்னை ஆயத்தப்படுத்துவதை உணர்ந்தேன்.

சந்தேகம் அகன்றது :

நான் பெற்றிருப்பதும் ஆலன்கோட்டையிலுள்ளக் கூட்டத்தார் பெற்றிருப்பதும் ஒரே அனுபவமா! அல்லது ஏழாம் நாள் ஓய்வுநாள் ஆசரிப்பு கிறிஸ்தவ நண்பர் சொல்லுவது உண்மையா என்பதே அந்த சந்தேகம். என் சகோதரன் ஒரு நாள் ஆலன்கோட்டைக் கூட்டத்துக்குப் போகப் புறப்பட்டார். அவரிடம், நானடைந்துள்ள அனுபவம் ஒன்றையும் அங்கே எவரிடமும் கூறக்கூடாது. அவர்கள் ஏதாவது கூறினால் அதை அறிந்து கொண்டு வாருங்கள் என்று சொல்லி அனுப்பினேன். இவர் அங்கு சென்றபோது 1949 ஜூன் மாதம் 25-ம் நாள் என்னிடம் உண்டாயிருந்த அனுபவங்களை அவர்கள் அப்படியே சொல்லி அனுப்பினார்கள். பின்பு நான் அங்கு சென்றேன். அங்கிருந்த தீர்க்கத்தரிசிகள் மூலமாக 1கொரிந்தியர் 2:11-16 வசனங்களையும் எனக்கு எடுத்துக்கூறி என்னை தைரியப்படுத்தினார்கள். என் சந்தேகம் ஓய்ந்தது. பின்பு பல தடவைகள் இக்கூட்டத்தில் சென்று பங்கெடுத்தேன்.

தேவன் வைத்த நுகத்தை ஏற்றுக்கொண்டு அவரிடமே கற்றுக்கொண்டேன் **1949 – ம் வருடம் :**

நான் பரிசுத்தாவியைப் பெற்றபின்பு, நான் ஒரு கிறிஸ்தவ பாதிரியாராக வேண்டும் என்று என் தகப்பனார் விரும்பினார். அதற்காக வேதகலாசாலையில் மனுகொடுத்தேன். சேகரத்துப் பாதிரியாரோ நான் ஒரு உபதேசியாராக இருக்க வேண்டுமென்று, தூரன்குடி சபையில் உபதேசியாராக அமர்த்தினார். அங்கே 70 அங்கத்தினர் உண்டு.

Mrs. MARIAMMAL YOVAN
MOTHER



BROTHERS

OUT DOOR MINISTRY

OUT DOOR MINISTRY

WITH BRO. BENNIE, SIS. GRACE, SIS. JEAN, MOTHER SWARNAM

CHILDREN MINISTRY

CHILD EVANGELISM

SUNDAY CLASS

அவர்களுக்கும் அவ்வூரிலுள்ள மற்ற இந்துக்களுக்கும் சண்டையுண்டாகி மஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் கேஸ் நடந்துகொண்டிருந்தது. ஆனால், நான் அங்கு சென்றபின்பு இங்குள்ள கிறிஸ்தவர்களும் இந்துக்களும் சமாதானமடையும்படி தேவன் கிரியை செய்தார். ஆராதனைக்கு வராதிருந்த மக்கள் ஆலயத்துக்கு வர அரம்பித்தார்கள். வஞ்சிக்கிற ஆவியால் குறி சொல்லிக் கொண்டிருந்த ஒரு ஸ்திரீயிடமாக குறிகேட்டு வந்தவர்களும் ஆலயத்துக்கு வர ஆரம்பித்தார்கள். குறி சொல்லுகிற ஆவி அந்த ஸ்தீரியை விட்டு விலகிவிட்டது. பல வியாதியஸ்தர் குணமடைந்தார்கள். இதனால் அந்த சபையாருக்கு மிகவும் சந்தோஷமாயிருந்தது. இந்த சபையிலிருந்து என் திறமையை மெச்சி சேகரத்துப் போதகர்களுக்கு நல்ல சாட்சிகள் கொடுக்கப்பட்டன. என் வீட்டிலிருந்து 7மைல் தூரம் சைக்கிளில் சென்று இந்த வேலையைச் செய்து வந்தேன். நான் இவ்விதம் வேலை செய்வதை என் தேவன் விரும்பவில்லை. அடிக்கடி ஒரு சத்தம் என் காதில், "நான் அழைத்த என் ஊழியத்தைச் செய்" என்று தொனித்துக்கொண்டிருந்தது. "நான் உன்னை எதற்காக அபிஷேகம் செய்தேனோ அதையே செய்" என்று மறுபடியும் உரைத்தது.

பல தடைகள் எனக்கு வந்தன. சரியான சமயத்துக்கு ஆராதனைக்கு போக முடியாத பல நாட்கள் உண்டு. ஒரு நாள், "இன்னும் மூன்று வாரத்தில் நீ இந்த வேலையை விட்டுவிடு, அல்லது நான் உன்னை பிடிப்பேன்" என்ற சத்தம் உண்டானது. நான் வேலையை விடுவதை என் தகப்பனார் விரும்பவில்லை.

1949 அக்டோபர் 16-ம் தேதி சூரன்குடி சபையில் ஆலய ஆராதனையில் சங்கீதம் வாசிக்க ஆரம்பித்தபோது, வானத்திலிருந்து ஒரு கயிறு என்மேல் விழுந்து என் வயிற்றை இறுகக் கட்டினது. இதனால் என் தொண்டையில் சத்தம் வராமற்போயிற்று. சபையாருக்குப் பின்பு நான் வசனம் வாசிக்க முடியாமல் சபையாருக்கு முன்னால் திண்டாடினேன். தேவன் என்னைப் பிடிக்கிறார் என உணர்ந்தேன். அப்போதே, என் உடைந்த உள்ளத்தோடு, உறுதியான எண்ணத்தோடு

என் மனதின் ஆழத்தில், "ஆ என் தேவனே, நான் உமது சத்தத்துக்கு கீழ்ப்படிவேன்" என பேசி, தேவனுடைய சித்தத்துக்கு ஒப்புவித்தேன். என் வயிற்றின் கட்டு தளர்ந்து சற்று இலகு உண்டானது. மகா கஷ்டத்தோடு ஆராதனையை நடத்தி முடித்துவிட்டு மாலை ஆராதனையை நடத்த முடியாமல் வீட்டுக்குப் போய் விட்டேன்.

மறுநாள் நான் உபதேசியார் வேலையிலிருந்து உயர்த்தப்பட்டு சீயோன்புரம் என்னும் வட்டத்து சபைக்கு **Circle Church** போதகனாக உயர்த்தப்பட்டு நியமிக்கப்பட்டிருப்பதாக உத்தரவு வந்தது. என் தகப்பனாரிடம் ஆலோசித்தேன். அவரோ, இந்த உத்தரவை ஏற்றுக்கொள் என்றார். மிகுந்த மனப் போராட்டத்தோடே என் தகப்பனாருடன் சென்று சபைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டேன். முதல் முதலாவது வீடுகளைச் சந்தித்து ஜெபித்தேன். ஒரு நாள் ஆலயத்தில் ஆராதனையை நடத்தினேன்.

மறுவாரம் ஆலய ஆராதனை நடத்தக் கூடாதபடி என் நாவில் புண்ணும் உடலில் காய்ச்சலும் உண்டானது. சில நிமிடங்களுக்குள் என் காதில் ஒரு சத்தம் கேட்டது. ஆ! என் தாசனே, இந்த நாவின் புண்ணும், உடலின் காய்ச்சலும் ஞாயிற்றுக்கிழமை சபை ஆராதனை முடிவடையும் வேளையாகிய மாலை 4 மணிக்கு உன்னை விட்டு மாறிவிடும். இந்த வேலையை விட்டுவிட்டு நான் அழைத்த ஊழியத்தை நீ செய்யவேண்டும் என்பதற்கு இதுவே அடையாளம் என அந்த சத்தத்திலிருந்து புறப்பட்ட வார்த்தைகளைக் கேட்டேன். இந்த வார்த்தைகளை என் பெற்றோரிடம் கூறி, சபை செக்ரட்டரிக்கு கடிதம் மூலமாக, ஆராதனை நடத்த ஏற்பாடு செய்து விட்டு, வீட்டிலிருந்தேன். 4 மணியளவில் குணமடைந்தேன்.

நான்கு வாரங்களாக என் மூத்த சகோதரன் குடற் காய்ச்சலினால் அவதிப்பட்டு மரண அவஸ்தையிலிருந்தார். தேவனுடைய ஊழியத்துக்காக அவர் ஒப்புவிக்கப்பட்டிருந்தும் தேவ ஊழியம் செய்யவில்லை. நானும் இவ்விதம், மறுபடியும் தேவனுடைய வார்த்தை

எனக்கு உண்டானது "இன்று என் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்தபடி நீ கீழ்ப்படிந்தால் உடனே உன் முழு சரீரத்தை குணமாக்கி அதை ஆலயமாக உனக்குத் தருகிறேன்" என்றார்.

தேவனுடைய வார்த்தை எனக்கு உண்டானபோது வேறு மார்க்கமுமின்றி அந்நேரமே நேராக என்னுடைய மிஷன் அலுவலகத்திற்கு 1949 நவம்பர் 7-ம் தேதி காலை நேரத்தில் போய், "நான் சுயாதீனமாக தேவனுடைய ஊழியத்தைச் செய்ய விரும்புகின்ற காரணத்தினால் இந்த மிஷன் உபதேசியார் வேலையிலிருந்து விலகிக் கொள்ளுகிறேன்" என்று எழுதின கடிதத்தைக் கொடுத்துவிட்டு நேராக வீட்டுக்கு வந்தேன். குடல் ஜுரத்தினால் மரணத் தருவாயிலிருந்த என்னுடைய முழு சரீரமும் குணமடைந்து எழுந்து உட்கார்ந்து இளம் உணவு சாப்பிட்டுக் கொண்டிருப்பதைக் கண்டேன். அது என் உள்ளத்துக்கு அதிசயமாகவும் ஆனந்தமாகவும் ஆறுதலாகவுமிருந்தது. தேவனுக்கு மகிமை உண்டாவதாக. தேவனுக்குக் கீழ்ப்படியும் போது தேவனுடைய அற்புதம் தொடரும்.

1949 நவம்பர் 26-ம் தேதி என் வீட்டின் மேல் மாடியிலுள்ள அறையில் போய் ஜெபத்தில் அமர்ந்தேன். ஒரு மேகம் என் மேல் இறங்கி தங்கினது. அம் மேகம் என்னை விட்டு நீங்கவில்லை. நாற்பது நாட்கள் தொடர்ந்து உபவாச ஜெபத்திலிருந்தேன். மேகத்திலிருந்து உண்டான தேவ சத்தம் வேதாகமத்தின் உண்மைப் பொருள்களை எனக்குக் கற்பிப்பதாக இருந்தது. வேதகலாசாலையில் சேர்ந்து படிக்கும்படி நான் விண்ணப்பித்திருந்த விண்ணப்பத்துக்கு பதில் உத்தரவு வந்தது. அதை தேவசமுகம் வைத்து ஜெபித்தபோது, "என் நுகத்தை ஏற்றுக்கொண்டு என்னிடத்தில் கற்றுக்கொள்" என்று கர்த்தர் சொன்னார்.

ஆகவே தொடர்ந்து தேவ சமுகத்தில் உபவாச ஜெபத்தில் தரித்திருந்து கற்றுக்கொண்டிருந்தேன். மனந்திரும்புதல், பாவம், பாவநிவாரணம், பாவமன்னிப்பு, பரிசுத்தம், ஞானஸ்நானம், பரிசுத்த

ஆவியானவர், பரிசுத்தாவியானவரின் அபிஷேகம், வரங்கள், வேறுபட்ட வாழ்க்கை, சபை, ஊழியம், பழையேற்பாட்டு வேதாகம பங்கில் அடங்கியிருக்கின்ற புதியேற்பாட்டு சத்தியங்கள் முதலானவைகள் எனக்கு கற்பிக்கப்பட்டன. அவைகளை எழுதிவைத்துக் கொண்டேன்.

தேவனுடைய அழைப்பின் ஊழியம் ஆரம்பித்தல் :

நான் மேல் வீட்டில் தேவனோடிருப்பதை அறிந்து பலர் என்னைப் பார்க்க வந்தார்கள். அவர்களுடைய தேவைகளையும், உள்ளத்தின் மறைபொருள்களையும் நான் கூற ஆரம்பித்தேன். இதனால் பலர் மேலும் என்னைத் தேடி வந்தார்கள். ஆனால், இது குறி கேட்க வருவதுபோல இருந்தபடியால் அதை விட்டுவிட்டு, ஜெபக்கூட்டங்களுக்கு போக ஆரம்பித்தேன்.

ஆலன்கோட்டையில் ஆரம்பித்தக் கூட்டங்கள் ஏழு கிராமங்களில் ஆரம்பிக்கப்பட்டன. அக்கூட்டம் யேகோவா ஷம்மா இரட்சணியக் கூட்டம் என்னும் பெயருடனே நடந்து வந்தது. என் சொந்த ஊரான மணவாளபுரத்திலும், அதன் பக்கத்து ஊரான புத்தளத்திலும் இக்கூட்டம் நடத்தப்பட்டது. இக்கூட்டங்களை பெண்களே நடத்திவந்தார்கள். நேரிட்ட பல எதிர்ப்புகளினிமித்தம் சிலர் பின்வாங்கிப் போனாலும் சகோதரி சொற்ணபாக்கியம் அவர்கள் தன் உடன் சகோதரனுடனும் பெற்றோருடனும் விடாமல் இக்கூட்டங்களை நடத்தி வந்தார்கள்.

"இஸ்ரவேலரை வழி நடத்தும்படி ஒரு மோசேயை எழுப்பினது போலவே உங்களை வழிநடத்த ஒருவரை நான் உங்கள் நடுவிலிருந்து எழும்பப்பண்ணுவேன், அவர் சொல்லுவதைக் கேட்டு நடவுங்கள்" என்று அவர்களுக்கு அடிக்கடி தேவன் தம்முடைய பல தீர்க்கத்தரிசிகளைக் கொண்டு சொல்லி வந்தார். இதனால் இக்கூட்டத்தின் மக்கள் இந்த மோசே யாராக இருக்கலாம் என்று ஆராய்ந்து தேடிக்கொண்டிருந்தார்கள். ஏற்ற வேளைக்காகப் பொறுமையுடன் காத்திருந்தார்கள்.

1949 டிசம்பர் 19–ம் தேதி நான் என் மேலறையில் ஜெபித்துக்கொண்டிருக்கும்போது, "புறப்பட்டுப்போ" என்ற ஒரு சத்தம் எனக்குண்டானது. எங்கே, எதற்காக ஆண்டவரே என்றேன். "நீ புறப்பட்டுப் போகும்போது உன்னோடு இன்னும் இரண்டுபேர் சேர்ந்து கொள்ளுவார்கள், நீங்கள் மூவருமாகப் போய் என்னுடைய நீதியை நிறைவேற்றுவீர்கள்" என பதில் கூறினார். அன்று மாலையிலேயே புறப்பட்டேன். கையில் காசு எடுத்துக்கொள்ளவில்லை.

என் வாயை கர்த்தரைத்துதிக்கும் ஸ்தோத்திரத்துக்கும் என் உடலை பரிசுத்தாவியானவரின் ஆட்கொள்ளுதலுக்கு ஒப்புவித்துப் புறப்பட்டேன். பரிசுத்த ஆவியானவர்தான் என் கால்கள் நடக்கும்படி தூக்கிவைத்து நடத்தினார் என்றுதான் சொல்லுவேன். பல மைல்கள் நடந்து அனந்த நாடார் குடியிருப்பு என்ற ஊர் வந்து சேர்ந்தேன். சகோதரன் மாசிலாமணி அவருடைய வீட்டில் யேகோவா ஷம்மா இரட்சணியக் கூட்டம் நடந்து கொண்டிருந்தது.அங்கே சகோதரன் தாசையா என்னோடே சேர்ந்துகொண்டார். காட்டுப்புறங்களில் உள்ள ஓடை அருகான மரங்களின் நிழலில் தங்கி ஜெபித்தோம். புசிப்பைப் பற்றியோ குடிப்பைப் பற்றியோ எண்ணம் இல்லை. கர்த்தர் என்ன சொல்லு கிறாரோ அதைச் செய்ய வேண்டும் என்ற ஏக்கமே எங்களை ஜெபத்தில் அமர்த்தி வைத்தது.

மறுநாள், மறுபடியும் "புறப்படு" என்னும் சத்தம் உண்டானது. சகோதரன் தாசையா நான் உங்களோடு வர ஏவப்படுகிறேன் என்றார்.மறுபடியும் ஆவியானவருக்கு ஒப்புக்கொடுத்துக் கொண்டு ஸ்தோத்திரம் சொல்லிக்கொண்டே நடக்க ஆரம்பித்தோம். ஏறக்குறைய மூன்று மைல்கள் நடந்து வர்த்தக நாடார் குடியிருப்பைச் சென்றடைந்தோம். அங்கே சகோதரன் A. ஞான சிகாமணி வீட்டில் ஆவிக்குரிய கூட்டம் நடந்துகொண்டிருந்தது. அதில் பங்கெடுத்தோம்.

மறுபடியும் அன்று மாலை 5.30 மணிக்கு "புறப்படு" என்னும் சத்தம் உண்டானது. எங்கே செல்லுவதென்பது தெரியவில்லை. அவ்வூரிலுள்ள S. யேசுநேசன் என்பவர், நானும் உங்களோடு வர

ஏவப்படுகிறேன் என்றார். எனக்கோ எங்கு செல்வது என்னும் திகைப்புடன் வானத்தைப் பார்த்து, ஆ! என் தேவனே என்றேன். இரணியல் பாதைக்குப் போ" என அசரீரியாக ஒரு சத்தம் பிறந்தது. இரணியல் தெரியுமா அதற்குப் பாதை தெரியுமா என்று சகோதரர்களைக் கேட்டேன். அவர்கள் வழிகாட்ட இரணியலை அடைந்தோம். ஆனாலும் கால்கள் நிற்கவில்லை.தொடர்ந்து மறுபடியும் 15 மைல்கள் நடந்து காஞ்சிரக்கோடு வந்தோம். அங்கே ஒரு ஜெபவீடு, இருந்தது. அங்கே போகும்படி பரிசுத்த ஆவியானவர் ஏவினார். அங்கேதான் நீங்கள் செய்ய வேண்டியது உங்களுக்குச் சொல்லப்படும் என்று பரிசுத்த ஆவியானவர் பேசினார். அங்கே சாது ஐசக் கிறிஸ்டியான ஞானஸ்நானம் என்ற பொருளில் பிரசங்கித்துக் கொண்டிருந்தார். அவர் யாரிடம் ஞானஸ்நானம் பெறவேண்டும் என்று விளக்கவில்லை. அவரிடம் தனியாகப் போய் கேட்டவர்களிடம் திருவனந்தபுரத்திலுள்ள ஆறாமடையில் இருக்கின்ற சாதுகொச்சுகுஞ்ஞு ஞானஸ்நானம் கொடுக்க தகுதியுடையவர் என்று சொல்லிக்கொண்டிருந்ததை, மறுபக்கத்து அறையிலிருந்து கேட்டுக்கொண்டிருந்தோம். இதை அறிந்து அகமகிழ்ந்தோம். அதை தேவன் கொடுக்கும் வார்த்தையாக ஏற்றுக்கொண்டு அங்கேயே தங்கினோம்.

மறுநாள் அதிகாலையில் நாங்கள் இருந்த அறைக்கு சாது ஐசக் கிறிஸ்டியான் வந்து, "நீங்கள் ஞானஸ்நானம் பெற ஆறாமடைக்குப் போக யாத்திரைக்கு பணமில்லாமலிருக்கிறீர்களாம், அதற்காக இந்த ரூ 5/= உங்களிடம் தரும்படி கர்த்தர் என்னிடம் சொன்னார் என்று அந்த ரூபாயை என்னிடம் தந்தார். இது எனக்கு பயமாகவும் வியப்பாகவுமிருந்தது. ஆயினும் சந்தோஷமாக அதைப்பெற்றுக்கொண்டோம். அதை திரும்பத் தரவேண்டாம் என்று கூறி எங்களை அனுப்பிவைத்தார். இதுவே பிறரிடம் தேவ காரியமாக பணம் பெற்ற முதலாம் அனுபவம்.

ஞானஸ்நானம் பெற மழை வந்தது :

திருவனந்தபுரத்திலுள்ள ஆறாமடைக்கு வந்தோம். நாங்கள் எதிர்

பார்த்துச் சென்ற சாது அங்கே இல்லை. விசாரித்ததில் அவர் வெளியூருக்குப் போயிருக்கிறார். திரும்பிவர 3 நாட்கள் ஆகும் என்றார்கள். திகைத்தோம். அங்கே ஒரு குன்று. அதில் ஒரு சிறு அறை. அதிலிருந்து ஜெபித்தோம். அவர் இப்போது வருவார் என த. யேசுநேசன் தரிசனம் கண்டு சொன்னார். அவர் பேசிக்கொண்டிருக்கும்போது, குன்றின் அடிவாரத்திலிருந்து ஒரு நபர் வந்து, நீங்கள் தேடுகிற சாது வந்து விட்டார், உங்களை அழைக்கிறார் என்றார்.

கர்த்தருடைய ஆவியானவர் எங்களோடிருந்தார். சாதுவைக் கண்டு சந்தோஷப்பட்டு, உங்களிடம் ஞானஸ்நானம் பெற வந்திருக்கிறோம் என்று கூறினோம். காவி உடையுடன் தாடியுடன் வயதானவராக இருந்த அவர் எங்களைக்கண்டு வியப்படைந்தார்.

நான் போய்க்கொண்டிருந்தபோது எனக்கு, என் தாசனே, என் பிள்ளைகளை அனுப்பியிருக்கிறேன், அவர்கள் உன்னைத் தேடுகிறார்கள். நீ திரும்பி போ" என்ற தேவ சத்தம் கேட்டு நான் திரும்ப வந்திருக்கிறேன் எனக் கூறி அவர் எங்களை யார்? எவ்விடத்தார். என்றெல்லாம் விசாரித்து, ஞானஸ்நானம் கொடுக்க இப்போது தண்ணீர் இல்லையே. மழை பெய்து நீண்ட நாட்களாகிவிட்டது. கரமனை ஆறு வற்றிப்போனதே என்றார்.

நாங்களோ, ஜெபித்தோம். அன்று இரவு பெருமழை பெய்தது. கரமனை ஆறு கரை புரண்டு தண்ணீர் ஓடினது. காலையில் பலர் எங்களை வந்து அதிசயமாகப் பார்த்தார்கள். ஒருகூட்டம் ஆயத்தப்படுத்தினார்கள். அதில் தீர்க்கதரிசியான ஒரு சகோதரி மூலமாக, "சாத்ராக் மேஷாக் ஆபெத்நேகோ போல இங்கே மூவவராக வந்திருக்கிற உங்களை நானே வழிநடத்தி உங்கள் தேவையை வழியில் சந்தித்தேன், நான் உங்களோடிருக்கிறேன். நீங்கள் என்னுடைய ஊழியத்தைச் செய்யுங்கள். என்று கர்த்தர் பேசினார். 1950 மே 28-ம் தேதி கரமனை ஆற்றில் சாது கொச்சுகுஞ்ஞு என்னும் தேவதாசனால்

ஞானஸ்நானம் பெற்றோம். எங்கள் சந்தோஷம் அதிகரித்தது. புது பெலனடைந்தோம். சாது அவர்கள் எங்கள் தலையின்மேல் தமது கைகளை வைத்து தேவனுடைய ஊழியத்துக்காக ஜெபித்து அபிஷேகம் செய்து அனுப்பிவைத்தார்கள்.

நாங்கள் திரும்பி ஊருக்கு வந்தபோது இரட்சணியக் கூட்டத்திலுள்ள அனைவரும் பரிசுத்தாவியின் வெளிப்படுத்தலினால் நாங்கள் ஞானஸ்நானம் பெற்ற விவரத்தை அறிந்து கொண்டார்கள். பலர் ஞானஸ்நானம் பெற ஏவப்பட்டார்கள். நான் ஞானஸ்நானம் பெற்றதை என் பெற்றோர் அறிந்தபோது என் தகப்பனார் என்னோடு கோபித்துககொண்டார். நான் ஞானஸ்நானம் பெற்றதை அவர் விரும்பவில்லை. என்னோடு பேசவும் மறுத்தார். "சிறு மறி குழை அறியாது" என்னும் பழமொழியை சொல்லி இரட்சணியக் கூட்டத்திலும் சிலர் எங்களை வெறுத்தார்கள். நாங்கள் சிறுபிள்ளைத்தனமாக ஞானஸ்நானம் பெற்றுவிட்டோம் என்று எங்களை வெறுத்து பேசினார்கள். ஆனாலும் இரட்சணியக் கூட்டத்திலுள்ள வேறு சிலர் என்னிடம் வந்து ஞானஸ்நானம் கேட்டார்கள். அவர்களை ஆறாமடை சாது கொச்சுகுஞ்ஞுவிடம் அனுப்பிவைத்தேன். அத்தருணத்தில் இரட்சணிய கூட்டத்தை நடத்தி வந்த சகோதரி சொற்ணபாக்கியமும் அங்கேபோய் ஞானஸ்நானம் பெற்றுவந்தார்கள்.

உறுதிபெறுதல் :

என் தகப்பனார் என்னோடு பேசாமலிருப்பது என் மனதுக்குப் பாரமாக இருந்தது. ஒருநாள் நான் மாடி அறையில் ஜெபித்துக் கொண்டிருந்தேன். ஒரு சிறுவன் ஓடிவந்து சுவாமியார் வந்திருக்கிறார் என்றான். சென்று பார்த்தேன். அவர் காஞ்சிரக்கோடு என்ற இடத்தைத் தலைமையகமாக வைத்து கிருபாசனம் என்ற பெயரால் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆவிக்குரிய எழுப்புதல் உருவாகக் காரணமாக இருந்த சாது யேசுதாஸ் என்ற தேவ ஊழியர். அவர் என் தகப்பனாரை சற்று தூரமாக அழைத்துச் சென்று. "நீங்கள் உங்கள் மகன் ஞானஸ்நானம்

பெற்றதற்காகக் கோபித்துக்கொள்ளக் கூடாது, ஞானஸ்நானம் என்பது சத்தியம். நானும் ஞானஸ்நானம் பெற்றிருக்கிறேன்" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். இதுவே அவர் எங்கள் வீட்டுக்கு வந்த முதல் தடவையும் கடைசி தடவையும் ஆகும்.

ஒருநாள் என் தகப்பனார் காஞ்சிரக்கோடு கிருபாசனத்துக்குப் போனார். அங்கே சாது நேசமணி அவர்கள் என் தகப்பனாரிடம், "உங்களுக்கு ஐந்து ஆண்பிள்ளைகளும் இரண்டு பெண் பிள்ளைகளும் இப்போது இருக்கிறார்கள். அதில் நான்காவது குமாரனை தேவனுடைய ஊழியத்துக்காக ஒப்புக்கொடுத்திருக்கிறீர்கள். ஆனால் லண்டன் மிஷன் கிறிஸ்தவ சபையிலோ அல்லது இன்னொரு பெயர்க்கிறிஸ்தவர் சபையிலோ பட்டம் பெற்ற பாதிரியாராக அவன் இருக்க வேண்டுமென்று விரும்புகிறீர்கள். ஆனால் தேவனோ அவனைத் தனக்காகத் தெரிந்து கொள்வார்" என்று நான் இரட்சிக்கப்படுவதற்கும் முன்னமே கூறியிருந்தார்கள். நான் தேவனுடைய ஊழியத்தைச் செய்ய ஆரம்பித்தபோது இந்த வார்த்தைகள் என் பெற்றோரை உறுதிப்படுத்தின.

என் வீட்டு மேலறையே என் ஜெப அறையும் படுக்கை அறையுமாக இருந்தது. என் தந்தை என்னிடம் சமாதானமடையும் வரை என் எல்லா தேவைகளையும் என் தாயாரிடம்தான் கேட்பேன். ஒருநாள் மாலை 6 மணிக்கு ஜெபித்துக்கொண்டிருந்தேன். அப்போது ஆகாயத்தில் ஒரு சிலுவையும் அதில் அறையப்பட்டிருந்த ஒருவரையும் கண்டேன். அவரே என் ஆத்தும நேசராகிய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து. ஆகாயத்தில் கண்ட அந்த காட்சி என்னை சமீபித்து வந்தது. என் இருகரங்களையும் விரித்து, வாரி அணைத்து என் நேசரை நான் முத்தமிட்டேன். காட்சி மறைந்தது. இதனால் தேவசமாதானம் என்மனதை நிரப்பினது. இதை வர்ணிக்க எனக்குப் பெலனில்லை. என் நேசரின் முகத்தைத் தழுவினேனே, கட்டி அணைத்து முத்தமிட்டேனே என்ற தேவ அன்பும் மகிழ்ச்சியும் எழுச்சியும் என்னை மேற்கொண்டது. மறுநாள் காலை என் தகப்பனார்

என்னிடம் பேசினார். நாங்கள் சமாதானமடைந்தோம். பின்பு அவரே பலரை ஞானஸ்நானத்துக்கு ஆயத்தப்படுத்தினார்.

தேவனுடைய ஊழியத்தில் இறங்குதல் :

ஜெப வேளைகளில் தேவன் என்னோடு பேசுவது சாதாரணமாக இருந்தது. "இப்போது இரண்டுபேர் உன்னிடம் வந்து ஒரு காரியத்தைப்பற்றிப் பேசுவார்கள், நீ அதை அவர்களுக்குத் தடை பண்ணவேண்டாம்" என்னும் சத்தம் அதிகாலையில் என் காதில் தொனித்தது. அன்று பகல் 2 மணிக்கு இரண்டு சகோதரர்கள் ஆலன்கோட்டை இரட்சணியக் கூட்டத்திலிருந்து என் வீட்டுக்கு வந்தார்கள். அவர்கள் என்னிடம், ஆறாமடைக்குப் போய் ஞானஸ்நானம் பெறுவதை சில விசுவாசிகள் தடைபண்ணுகிறார்கள், ஏனென்றால், தேவன் மோசே போன்ற ஒருவரை எழுப்புவேன் என்று கூறியிருக்கிறார். அவரைப் போய் கேளுங்கள் என்று சொல்லுகிறார் கள். நீங்கள் தான் அந்த மோசே. வேறு யாரிடமும் நாங்கள் போவதில்லை. நீங்களே ஞானஸ்நானம் கொடுங்கள் என்று கேட்டார்கள்.

நான் புன்சிரிப்புடன் நீங்கள் இங்கு வந்து கேட்பதைப் பற்றி கர்த்தர் என்னோடு பேசியிருக்கிறார். சற்று பொறுமையாயிருங்கள் என்று சொல்லி அனுப்பினேன்.

பிரசங்க ஊழியம் 1951 – ம் வருடம் :

குமரி மாவட்டத்திலுள்ள இரட்சணியக் கூட்டத்தின் மக்களை ஒன்று சேர்த்து, நான் உபவாச நாட்களில் கற்றுக்கொண்டவைகளைப் பிரசங்கிக்கும்படி பரிசுத்த ஆவியானவர் என்னோடே பேசினார். சகோதரி சொற்ணபாக்கியத்திடம் அதைச் சொன்னபோது சந்தோஷப்பட்டு, வர்த்தக நாடார் குடியிருப்பில் மூன்று நாட்கள் கூட்டங்கள் நடத்த ஏற்பாடுகள் செய்தார்கள். இரவு பகல் மூன்று நாட்கள் நானே பிரசங்கித்தேன். செய்தியில் வரும் வேதவசனங்களைத தொகுத்தெழுதி தொங்கவிட்டேன். பிரசங்கம் முடிந்தபின்பும் மக்கள்

அட்டையில் தொங்கும் வசனங்களைப் படித்து அசைபோட்டனர். மூன்றாம் நாள் 50க்கதிகமானவர்கள் தாங்களாகவே முன் வந்து ஞானஸ்நானம் கேட்டார்கள். ஞானஸ்நானம் கொடுக்க எனக்கு தைரியமில்லாமற்போனது.

மூன்று மாதங்களுக்குப்பின்பு இதே இடத்தில் இவ்வண்ணமே மூன்று நாட்கள் கூட்டங்கள் நடத்தினேன். மூன்றாம் நாள் ஞாயிற்றுக்கிழமை காலை 9:30 மணிக்கு 80 பேரை அங்குள்ள குளத்துக்கு நடத்திச் சென்று ஞானஸ்நானம் கொடுத்தேன். ஞானஸ்நானம் பெற்றவர்கள் ஒவ்வொருவரும் பரிசுத்த ஆவியினால் நிறைந்து பரவசமடைந்தார்கள். அப்போது என் வயது 20.

பாடுகள் ஆரம்பமாயிற்று :

ஆலன்கோட்டை என்னும் சிற்றூரில் ஆரம்பித்த ஜெபக்கூட்டத்தை அவ்வூரிலுள்ள சிலர் விரும்பவில்லை. வீடுகளில் ஜெபக்கூட்டங்கள் நடத்தப்பட்டன. அவ்வீடுகளை கல்லெறிந்தும், வீட்டாரை பலவிதமாகப் பேசியும் துன்பப்படுத்தினபடியால் அக்கூட்டம் கடைசியாக மிர் செல்லையா, ஞானவடிவு, வேதக்கண், சொற்ணபாக்கியம் இவர்களது வீட்டுக்கு மாற்றப்பட்டது. இவர்கள் ஒருமனப்பட்டு தங்கள் வீட்டில் இக்கூட்டத்தை நடத்திவந்தார்கள்.

தனக்குக் கிடைத்த தேவ அறிவிப்பின்படி ஞானமணி அம்மாள் என்னும் தேவனுடைய ஊழியக்காரி தன் சொந்த இடத்திலிருந்து ஏறக்தேசம் 25 மைல்களுக்கு அப்பாலுள்ள இந்த ஊருக்கு வந்து சிலநாட்கள் உபவாசமிருந்து மிர்.செல்லையாவின் களத்தில் ஓலையினால் ஜெபப்புரை கட்டி அதில் இக்கூட்டம் நடத்தும்படி ஆரம்பித்து வைத்தார்கள்.

தங்கள் ஊரில் ஜெபப்புரை கட்டப்பட்டிருப்பதை விரும்பாத சில வாலிபர்கள் எழும்பி வந்து அதைப் பிடுங்கி தங்களுக்குள்ளே பங்கிட்டு எடுத்துக் கொண்டார்கள். விசுவாசிகளும் தேவ ஊழியர்களும் ஜெபப்புரை கட்டப்பட்டிருந்த களத்தில் திறந்த வெளியில் கூடி உபவாசித்து ஜெபித்தார்கள்.

தேவனுடைய கோபம் இவ்வூரில் உண்டானது. தலைமை தாங்கி உபத்திரவப்படுத்தின ஒருவர் பைத்தியக்காரனானார். ஊழியம் செய்த பெண்களை பின்வாங்கிப்போக பண்ணின ஒரு ஸ்திரியின் மார்பு அழிந்து போகும்படி புண் உண்டாகி மரித்தாள். ஊரில் தேவபயம் உண்டானது. சிலர் ஜெபக்கூட்டத்தில் வந்து சேர்ந்தனர். தங்கள்மேல் தேவதண்டனை விழுந்துவிட்டது என்பதை உணர்ந்தவர்கள் மறபடியும் அந்த ஜெபப்புரையை அதே இடத்தில் கட்டிக்கொடுத்தார்கள்.

மறுபடியும் சிலமாதங்களுக்குள், பார்வோனுடைய இருதயம் கடினப்பட்டது போல, இருதயக் கடினமடைந்து, தாங்கள் கட்டின ஜெபப்புரையை பிரித்து அழித்துப்போட்டார்கள். ஆனால் வீட்டில் கூட்டம் தொடர்ந்து நடந்து வந்தது. ஜெபப்புரையும் மறுபடியும் கட்டப்பட்டது.

இந்நாட்களில் அங்கு ஜெபம் நடத்துவதற்காக பல தேவ ஊழியர்கள் வந்தார்கள். அவர்களில் சிலர் அடிக்கப்பட்டு திரும்பி அனுப்பப்பட்டார்கள். சிலருடைய வஸ்திரங்களைக் கிழித்து அவர்களை வெறுமையாக அனுப்பி விட்டார்கள். இக்காலத்தில் அங்கு சென்ற என்னுடைய தகப்பனாரையும் அவருடன் சென்ற ஒரு ஊழியரையும் அடித்து அவர்களிடமிருந்த குடையையும் பறித்துவிட்டு அவர்களை வெறுமையாக அனுப்பிவிட்டார்கள். இவர்களெல்லாரும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே, ஆத்துமாக்களின் இரட்சணியத்துக்காகப் பாடுபட்டபடியால், தாங்கள் அனுபவித்தப்பாடுகளை சந்தோஷமாக சகித்துக்கொண்டார்கள். அதோடு இரட்சணியக்கூட்டம் என்னும் இந்த ஊழியத்தை ஆசீர்வதித்து பலர் ஜெபித்தார்கள்.

ஒருநாள் மாலை 6.30 மணியளவில் நான் என் உடன் ஊழியரான M.தாசையாவுடன் ஆலன்கோட்டையிலுள்ள ஜெபக்கூட்டத்துக்குப் போனேன். பகைவர்கள் வந்து ஜெபப்புரையை வளைந்து கொண்டு, கல்லெறிந்தார்கள். அந்நிய ஊரார்களை வெளியே விடுங்கள் என்று கோஷமிட்டார்கள். கூக்குரலும் பகைவரின் பகை உணர்வும் வரவர அதிகப்பட்டுக் கொண்டிருந்தது. மிர்.வேதக்கண்

எங்களைப் பாதுகாக்கும்படி அவருடைய வீட்டுக்குள் செல்லும்படி எங்களை அழைத்தார்கள். இதற்குள் ஜெபப்புரையின் வாசலை பகைவர்கள் வந்து நெருங்கினார்கள். நாங்கள் வாசலைத் தாண்டினதும் பகைவர்கள் சிலர் தாங்கள் மறைத்து வைத்திருந்த கோல்களை ஓங்கி எங்கள் மண்டைஓடு உடைய வேண்டுமென்று அடித்தார்கள். ஆனால் அந்த அடி எங்கள் பாதைக்கு வெளிச்சம் காட்டின விளக்கின் மேல் விழுந்தது. இருள் எங்கும் மூடினது. அந்த காரிருளில் பகைவர்கள் எங்களை அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. நாங்கள் இரண்டுபேரும் இரண்டு பாதைகளாகப் பிரிந்து சத்துருக்களின் கூட்டத்துக்கும் வெளியே ஓடி உயிர்த்தப்பினோம். அவ்விருள் சத்துருக்களுக்கு இருளாகவும் எங்களுக்கோ நாங்கள் விடுதலை பெற்றுச் செல்லும் ஒளியாகவும் இருந்தது. "இருளை எங்களுக்கு மறைவிடமாக்கினார்." சங் 18:11 "அப்பொழுது அவர் தீபம் என் தலையின்மேல் பிரகாசித்தது. அவர் அருளின வெளிச்சத்தினால் இருளைக் கடந்து போனேன்." யோபு 29:3. இந்த வசனங்கள் அன்று எங்களிடத்தில் நிறைவேறினது.

எங்களைத் துரத்தவேண்டியவர்கள் தங்களுக்குள் ஒருவரையொருவர் துரத்திக் கொண்டு ஓடி மறைந்தார்கள். நாங்கள் தங்கியிருக்கும்படி அறைகளை உண்டுபண்ண தேவன் உதவிசெய்தார். சில நாட்களில் நானே சமயல் செய்து மற்றும் சகோதர சகோதரிகளுக்குப் பங்கிட்டு கொடுத்திருக்கிறேன்.

சில மாதங்கள் கடந்தன. ஊழியக்காரர்களுக்கான உபதேச சட்ட திட்டங்களை தேவன் எனக்கு வெளிப்படுத்தினார். அவைகளைச் சேர்த்துப் புத்தகமாக்கி ஊழியர்களுக்குக் கொடுத்தேன். அதை ஏற்றுக்கொண்டு ஒப்புக்கொண்டவர்கள் மட்டுமே முழுநேர ஊழியர்களாக அமர்த்தப்பட்டார்கள். ஊழியர் தொகையும் சபை இடங்களும் அதிகரித்தன.

தலைமையகத்தின் அற்புத தோற்றம் :

ஆலங்கோட்டையில் நீண்ட நாட்களாக ஜெபாலயம் கட்ட முடியவில்லை. ஜெபாலயம் கட்டுவதற்காக அஸ்திபாரமிட்ட போது அதை விரும்பாத சிலர் அரசாங்கத்துக்கு எதிர்மனு கொடுத்துத் தடைபண்ணிவிட்டார்கள். ஜெபாலயம் கட்ட காவல்துறைஅதிகாரிகளும், தாலுகா அதிகாரிகளும் அனுமதிதர மறுத்தார்கள். பல மாதங்களாக இவ்வேலை தடைப்பட்டுக்கிடந்தது. மிர். செல்லையாவின் வீட்டிலேயே எல்லா ஆராதனைகளும் நடந்தன. விசுவாசிகளும் ஊழியர்களும் விசுவாசத்துடனே ஜெபாலயம் கட்டுவதற்கான செங்கல், மரம் முதலானவைகளைச் சேகரித்துக்கொண்டிருந்தோம்.

ஒருநாள் சபையில் தேவ ஆவியானவர் பலமாக இறங்கினார். "ஜெப வீட்டு வேலையை எழுந்து கட்டுங்கள் நான் உங்களுடனே இருந்து வேலையை நடப்பிப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" என்ற சத்தம் ஒரு தீர்க்கத்தரிசியினால் உண்டானது. அன்றே விசுவாசிகள் உற்சாகமடைந்தார்கள். என்னிடம் வந்து ஆலோசனை கேட்டார்கள். "கர்த்தர் சொல்லியிருக்கிறார் அல்லவா! எழுந்து கட்டுவோம், கர்த்தர் நம்மோடிருக்கிறார் என்றேன். விசுவாச பலத்துடனே உடனே கட்டடவேலை ஆரம்பித்தோம். நானும் என் தகப்பனாருமாக நின்று வேலையை நடத்தினோம். வேலை ஆரம்பித்த வுடனே சத்துருக்கள் பல வித வார்த்தைகளினால் எங்களுக்குச் சோர்பு உண்டாக எத்தனம் பண்ணினார்கள். இங்குள்ள ஊழியத்தை நேராக நின்று செய்து வந்த சகோதரி சொற்ணபாக்கியம் தினமும் விசுவாசிகளை ஒன்றாக சேர்த்து வைத்து ஜெபித்தார்கள். திங்கள் கிழமை ஆரம்பித்த வேலையை தொடர்ந்து செய்து சனிக்கிழமைக்குள் முடித்து விடவேண்டும் என்பது எங்கள் நோக்கம். ஞாயிற்றுக்கிழமை சத்துருக்கள் கூட்டம் வைத்து எங்களை நெருக்கக் கூடும் என்று எண்ணினோம்.

எங்கள் தைரியத்தையும் உற்சாகத்தையும் கண்ட சத்துருக்கள் எங்கள் மேல் பொறாமை கொண்டார்கள். கூட்டம் கூடி எங்களுக்கு

எதிராக ஆலோசனைகள் பண்ணினார்கள். அவர்கள் உள்ளத்தில் சந்தேகத்தையும் பயத்தையும் தேவன் உண்டுபண்ணினார். கட்டடம் கட்டும் வேலையைத் திடீரென உற்சாகமாக ஆரம்பித்துவிட்டார்களே. அரசாங்க அதிகாரிகளால் தடைசெய்திருந்தோமே, இப்போது இவர்கள் அரசாங்க அனுமதி பெற்றுவிட்டார்களோ என்ற சந்தேகமும், அனுமதி பெற்றிருந்தால், நாம் இடித்தால் குற்றம் நம்மேல் சுமருமே என்ற பயமும் உண்டானது. இதை விசாரிக்க எங்களிடம் வந்தார்கள். நாங்களோ தேவ ஆவியானவர் எங்களுக்குக் கொடுத்த அனுமதியை மனதில் கொண்டு, நாங்கள் அனுமதியுடன்தான் ஜெபாலயம் கட்டுகிறோம் என பதில் உரைத்தோம். எங்கள் வார்த்தையிலுள்ள தைரியத்தையும் உற்சாகத்தையும் பார்த்த அவர்கள் மறுபடியும் கூடி ஆலோசனை பண்ணினார்கள்.

எங்கள் ஜெபவீட்டு சுவர் வேலை வெள்ளிக்கிழமைக்குள் போதுமான அளவுக்கு வந்துவிட்டது. இதைக்கண்ட சத்துருக்கள் தங்கள் உள்ளத்தில் தீயால் எரிந்தார்கள். இன்றே இதை உடைத்தெறியவேண்டும் என கொதித்தெழுந்தார்கள். சனிக்கிழமை காலை தங்கள் ஆலயமணியை கலகமணியாக அடித்தார்கள். கூட்டம் கூடி ஒரு தலைவரைத் தெரிந்தெடுத்து, நாங்கள் பெற்றிருக்கும் அனுமதியை ரத்து செய்யவேண்டுமென்று, அவரை மாகாண தலைமையகத்துக்கு அனுப்பிவைத்துவிட்டு அவருடைய வருகைக்காகக் காத்திருந்தார்கள். அன்று திருவனந்தபுரம் மாகாண தலைமையகத்தில் M.L.Aக்களின் கூட்டம். அங்கு சென்றவர் மாலை 5 மணி வரை அங்கே காத்திருந்தார். தடை உத்தரவு கிடைக்கவில்லை. ஆகவே, முதலாவது ஜெபாலயத்தை இடித்துத் தள்ளுவோம், பின்பு பார்த்துக் கொள்ளலாம் என்ற தீர்மானத்தோடு மாலை 6.30 மணிக்கு பின்பு வந்து சேர்ந்தார். பின்பு கலகமணி அடிக்கப்பட்டது. அத்தனைபேரும் திரண்டார்கள். தலைவர் கட்டளைபடி ஜெபாலயத்தை இடித்துத் தள்ளும்படிப் புறப்பட்டார்கள். ஆலயத்திலிருந்து மூன்று பெட்ரோமாக்ஸ் லைட்டுகளையும், பொருத்திக் கொண்டார்கள். உருட்டுக் கட்டைகளையும், வெட்டுக்கத்திகளையும், மண்வெட்டி முதலான இரும்பாயுதங்களையும்

எடுத்துக்கொண்டார்கள். சிலர் மது அருந்திக் கொண்டார்கள். வாயில் வந்தவாறு பேசி ஊளையிட்டுக்கொண்டு புறப்பட்டு வந்தவர்கள் நமது ஜெபாலயத்துக்கும் ஒரு பர்லாங்க் தூரத்துக்கப்பால் வந்ததும், அங்கு நின்று ஒருவரையொருவர் திருப்பிப் பேச ஆரம்பித்தார்கள். நாங்களோ தேவனை நோக்கி ஜெபித்துக்கொண்டிருந்தோம். அக்கூட்டத்திலுள்ள ஒருவர் தனித்து வந்து எங்கள் நிலைமை என்னவென்று அறிவதற்காக வந்தார். அவர் திரும்பப்போய் அங்கே பெரிய பட்டாளம் இருக்கிறது. இந்த இரவுவேளை அவர்களுடைய கட்டடத்தை இடிக்கப்போகிறோம். என்ன சம்பவிக்குமோ என்று அவர்களுக்குப் பயமுண்டாகப் பேசி விட்டு அவர்களை விட்டு விலகினார்.

இதனால் ஆத்திரமடைந்த அவர்கள் தாங்கள் செய்வது இன்னதென்றறியாமல் ஒருவரையொருவர் தாக்கி, அடித்து வெகுநேரம் வரை ஒருவருக்கொருவர் விரோதமாகக் கூக்குரலிட்டார்கள். பக்கத்து வீட்டுக் கூரை ஓடுகளைக் களற்றி எடுத்து ஒருவரையொருவர் காயப்படுத்தினார்கள். தாங்கள் கொண்டு வந்த விளக்குகளை தாங்களே அடித்து நொறுக்கினார்கள். நடு இரவுவரை சந்தடிபண்ணிக் கொண்டிருந்தார்கள். கலகம் பண்ணி பிரிந்து போனார்கள். ஒருவரும் எங்கள் ஜெபாலயத்தின் பக்கமே வரவில்லை. அன்று நானும் என்னுடைய தகப்பனாரும் ஜெபாலயத்தின் மறுபக்கத்திலிருந்த மிர். தாசன் என்பவர் வீட்டில் பாதுகாவலாக இருந்து இவைகளைப் பார்த்துக்கொண்டிருந்தோம். வெள்ளம்போல் சத்துரு வரும்போது, கர்த்தருடைய ஆவியானவர் அவனுக்கு விரோதமாகக் கொடியேற்றுவார். ஏசா 59:19 என்றும், ஒரு வழியாய் உனக்கு எதிராகப் புறப்பட்டு வருவார்கள், ஏழு வழியாய் உனக்கு முன்பாக ஓடிப்போவார்கள். உபா 28:7 என்றும், யுத்தத்தில் பிரியப்படுகிற ஜனங்களை சிதறடிப்பார். சங் 68:30 என்றும், எரே 15:20 ல் சொல்லப்பட்டபடியும், யுத்தம் கர்த்தருடையது. 1சாமு 17:47 என்றும் சொல்லப்பட்டபடியும் நிறைவேறினது. வெற்றியாக எங்கள் வேலை நடந்தது.

மூன்றாம் நாள் ஜெபாலயப் பிரதிஷ்டை ஆராதனை நடத்தினோம். எதிராளிகளாயிருந்தவர்களில் சிலர் பிரதிஷ்டை விருந்தில் எங்களோடே கலந்துகொண்டார்கள். சத்துருக்கள் சமாதானமடைந்தார்கள்.

முதல்வகுப்பு மஜிஸ்ட்ரேட் கோட்டில் வழக்குப் பதிவானது :

எவ்வளவாக ஒடுக்கினாலும் எங்கள் ஊழியத்தை நிறுத்திவிட முடியவில்லை என்னும் ஆத்திரம் எதிராளியை விட்டு நீங்கவில்லை. காவல்துறையிலுள்ள ஒருவருக்கு பணம் கொடுத்து என்மேலும் என்னுடைய உடன்ஊழியர் மேலும் சில விசுவாசிகள் மேலும் சாலைப்போக்குவரத்துக்கு இடைஞ்சல் உண்டுபண்ணினதாக வழக்குப் பதிவு செய்தார்கள். முதல் வகுப்பு மஜிஸ்ட்ரேட் கோட்டிலிருந்து, கோர்ட்டில் ஆஜராகும்படி உத்தரவு வந்தது. இதோடு இந்த ஊழியத்தை முடித்துப் போடலாம் என்று எதிராளிகள் நம்பியிருந்தார்கள். நாங்கள் எங்களுக்காக வழக்கறிஞர் வைத்துக்கொள்ளவில்லை. முதலாம் பிரதியாகநான் இருந்தபடியால் குறிக்கப்பட்ட நாளில், நானே சாட்சிகளை விஸ்தரித்தேன். சாட்சிக்காரர்கள் வழக்குக்கு எதிரிடை யாகவும், அசம்பாவிதமான எந்த காரியங்களையும் நாங்கள் காணவில்லை என்றும் சாட்சி கூறினார்கள். கோர்ட்டில் இருந்த எல்லா வழக்கறிஞர்களும், நியாயாதிபதியும் கொல்லென்று சிரிக்க அந்த வழக்கு விசாரணை நடந்தது. நியாயாதிபதி அழைத்தபோது, வாதியான காவல்துறை அதிகாரி மிகவும் தாமதமாகி வந்தார். என்னுடைய விசாரணைக்குப்பின்பு நியாயாதிபதி திரும்ப அவனிடம் விசாரித்தார். அவருடைய விசாரணையில் அவனுடைய பதில் முன்னுக்குப் பின் முரணாக இருந்தது. எனவே, வாதியை எச்சரித்து, எங்களை நியாயாதிபதி குற்றமற்றவர்கள் என தீர்ப்பிட்டு விடுதலை செய்தார். "உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதே போம்" உனக்கு விரோதமாய் நியாயத்தில் எழும்பும் எந்த நாவையும் நீ குற்றப்படுத்துவாய். ஏசா 54:17 என்றும், அவர்கள் எங்கள் நாவுகளால் மேற்கொள்ளுவோம், எங்கள் உதடுகள் எங்களுடையது.

யார் எங்களுக்கு ஆண்டவன் என்று சொல்லுகிறார்கள். சங் 12:3,4
துன்மார்க்கன் நீதிமான்மேல் கண் வைத்து, அவனைக் கொல்ல
வகை தேடுகிறான். கர்த்தரோ அவனை இவன் கையில் விடுவதில்லை
அவன் நியாயம் விசாரிக்கப்படுகையில், அவனை ஆக்கினைக்குள்ளாகத்
தீர்ப்பதுமில்லை. சங் 37:32,33 என்றும் எழுதியிருக்கிறபடி நடந்தது.

இதனால் விசுவாசிகளும் உடன் ஊழியக்காரர்களும் மேலும் விசுவாசத்தில் உறுதிப்பட்டு, புத்துயிரடைந்தார்கள். தண்டனையின்றி நாங்கள் விடுதலையடைந்தோம் என்பதை அறிந்த எதிராளிகள் எங்களைப் பார்க்கவே வெட்கப்பட்டு ஒதுங்கினார்கள். எங்களுக்கு எதிராளியாயிருந்த முதலாம் சாட்சியாகிய மிர். சிகாமணி என்பவர் மறுநாள் காலை தனது வீட்டுக்கு போய் ஜெபம்பண்ணும்படி எங்களை அழைத்தார். வெகு விரைவில் அவரும் அவருடைய மனைவியும் மகளும் எங்களோடே சபையில் ஐக்கியமுள்ளவர்களானார்கள். அவருடைய மகளுடைய திருமண ஆராதனையை நானே நடத்தினேன். அந்த மகளை என்னுடைய உடன் பிறந்த அக்காள் மகன் சாம் அருள் ஜோசப் மணம்புரிந்தார். காலமான ஞானசிகாமணி, அவருடைய மனைவி ஆகிய இவர்களுடைய மரண அடக்க ஆராதனையையும் சமீபகாலத்தில் நானே நடத்தினேன். எதிராளிகளாயிருந்த திரளான மக்கள் எங்களோடே சமாதானமானார்கள். ஆலன்கோட்டையில் உள்ள எதிர்ப்புகள் மாறி சபையின் தலைமையகமாக ஊழியங்கள் தொடர்ந்து நடந்து வந்தன.

"ஒருவனுடைய வழிகள் கர்த்தருக்குப் பிரியமாயிருந்தால், அவனுடைய சத்துருக்களும் அவனோடே சமாதானமாகும்படி செய்வார்". நீதி 16:7 என்ற வசனம் இதனால் நிறைவேறினது.

ஆலன்கோட்டை ஜெபாலயத்தின் பிரதிஷ்டை ஆராதனை முடிந்த அந்த நாளிலே தபால்காரன் என்னிடம் ஒரு தபால் உறையைக் கொண்டு வந்து கொடுத்தான். அது அன்று நாட்டின் அரசனாயிருந்த ஸ்ரீ சித்திரைத் திருநாள் மகா ராஜாவாகிய ராஜ பிரமுகரால்

அனுப்பப்பட்டிருந்தது. அதைத்திறந்து பார்த்தபோது அது ஆலன்கோட்டையில் இரட்சணிய கூட்டத்தார் ஜெபாலயம் கட்ட உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது என்று எழுதப்பட்ட உத்தரவாக இருந்தது. அதில் இராஜபிரமுகர் கையெழுத்திட்ட நாள்தான்," "ஜெப வீட்டு வேலையை எழுந்து கட்டுங்கள், நான் உங்களுடனே இருந்து வேலையை நடப்பிப்பேன்" என்று பரிசுத்த ஆவியானவர் தீர்க்கத்தரிசியின் மூலமாக பேசின நாளாயிருந்தது. இதைப் படித்துப் பார்த்து அனைவரோடு நானும் ஆனந்தக் கண்ணீர் சொரிந்து ஆண்டவரை ஸ்தோத்தரித்தேன்.

"குழியை வெட்டி, அதை ஆழமாக்கினான், தான் வெட்டின குழியில் தானே விழுந்தான். சங் 7:15. ஜாதிகள் தாங்கள் வெட்டின குழியில் தாங்களே விழுந்தார்கள், அவர்கள் மறைவாய் வைத்த வலையில் அவர்களுடைய காலே அகப்பட்டுக் கொண்டது. சங் 9:15. உத்தமர்களை மோசப்படுத்தி, பொல்லாத வழியிலே நடத்துகிறவன் தான் வெட்டின குழியில் தானே விழுவான், உத்தமர்களோ நன்மையைச் சுதந்தரிப்பார்கள். நீதி 28:10 என்றும், என் புலம்பலை ஆனந்தக் களிப்பாக மாற்றப்பண்ணினீர்; என் மகிமை அமர்ந்திராமல் உம்மைக் கீர்த்தனம் பண்ணும்படியாக நீர் என் இரட்டைக் களைந்து போட்டு, மகிழ்ச்சி என்னும் கட்டினால் என்னை இடை கட்டினீர், சங் 30:11 என்றும் சொல்லப்பட்டிருக்கும் வேத வசனங்களின்படி சம்பவித்தது. நாங்கள் ஜெபவீடு கட்டுவதற்குத் தடை செய்ய வேண்டும் என்று எங்கள் எதிராளிகள் அரசாங்கத்துக்கு எழுதின மனுவே, நாங்கள் அனுமதி உத்தரவு பெறக் காரணமாயிருந்தது. தண்ணீரை, திராட்சை இரசமாக எங்கள் தேவன் எங்களுக்கு மாறும்படிச் செய்தார்.

யேகோவா இரட்சணிய சபையின் வளர்ச்சி :

யேகோவா இரட்சணிய கூட்டம் என நடந்து வந்த இந்த ஐக்கியத்தை சபையாக நடத்தவேண்டிய கட்டாயம் வந்தது. அப்போது இதன் பெயரை நாங்கள் ஊழியர்களாகக் கூடி ஆலோசித்து, "பெந்தெகொஸ்தே இரட்சணிய சபை" என பெயர் வைத்தோம். ஆனால்

சில மாதங்கள் சென்றன. சாது நேசமணி, சாது தேவநேசன் என்பவர்கள் எங்களோடு சபையாக இணைந்து போகவேண்டும் என்றும், நாங்கள் "யேகோவா" என்னும் பெயரை மாற்றி, பெந்தெகொஸ்தே" என பெயர் வைத்திருப்பது சரியல்ல வென்று தேவன் தங்களுக்கு வெளிப்படுத்தி யிருப்பதாகவும் சொல்லி என்னிடம் வந்தார்கள். ஆகவே 1954–ம் வருடம் நவம்பர் மாதம் 5–ம் தேதி "யேகோவா இரட்சணிய சபை" என்னும் பெயருடனே 30 பேராகச் சேர்ந்து அரசாங்கப்பதிவு செய்து சபை நடத்த ஆரம்பித்தோம். இதற்காக சில நாட்கள் உபவாசமிருந்து ஜெபத்துடன் சபைக்கான சட்டதிட்டங்களை எழுதிக்கொண்டேன்.

இதனால் சபையும் ஊழியமும் ஸ்திர தன்மையடைந்தது. சாது நேசமணி, சாது தேவநேசன், சாது தபஸ் என்பவர்கள் தாங்கள் ஆரம்பித்திருந்த சபைகளோடே சந்தோஷப்பட்டு யேகோவா இரட்சணிய சபையாகச் சேர்ந்து கொண்டார்கள். எனவே ஆலன்கோட்டை, குன்னத்தூர், மலைவிளை, மாவறவிளை, அஞ்சுமரங்காலை என்னும் இடங்களை மையமாக வைத்து சபையின் ஆட்சி நடைபெறலாயிற்று.

யேகோவா ஷம்மா இரட்சணிய கூட்டம் என ஆரம்பிக்கப்பட்டு நடந்து கொண்டிருந்த இந்த அமைப்பு யேகோவா இரட்சணிய சபையாக அமைக்கப்பட்டபோது, சகோதரி சொற்ணபாக்கியம் ஆலன்கோட்டை என்ற தன் ஊரிலுள்ள தன் சொந்த இடத்தையும், சகோதரன் யேசுநேசன் வர்த்தகநாடன் குடியிருப்பிலுள்ள தன் இடத்தையும், சகோதரன் M.தாசையா அனந்தநாடார் குடியிருப்பிலுள்ள தன்னுடைய இடத்தையும் ஜெபாலயம் கட்டுவதற்காகக் காணிக்கையாகக் கொடுத்தார்கள். அப்படியே நான் மணவாளபுரத்திலுள்ள என்னுடைய இடத்தையும், புத்தளத்திலுள்ள என்னுடைய இடத்தையும், காணிக்கையாகக் கொடுத்தேன். இதைத் தொடர்ந்து, சாந்தபுரத்தில் தாவீது அவர்களும், சேரமங்கலத்தில் ஆசீர்வாதமும், சௌக்கியபுரத்தில் பாக்கிய மணியும் தங்கள் தங்கள் இடங்களையும் காணிக்கையாகக்

கொடுத்தார்கள். இவ்விடங்களிலெல்லாம் வீடுகளில் நடந்துவந்த ஜெபக்கூட்டங்களும், தேவ ஆராதனைகளும் ஜெபாலயங்களில் நடைபெற ஜெபாலயங்கள் கட்டப்பட்டன. அதற்காக வீடுகளில் கூடி வந்த ஜனங்கள் தங்கள் வருமானங்களில் தசமபாகங்களையும், பொருத்தனை பண்ணப்பட்டக் காணிக்கைகளையும் கொடுத்தார்கள். பலர் இலவசமாக வேலைகளைச் செய்தார்கள்.பலர் பாதி சம்பளம் பெற்றார்கள். இன்னும் சிலர் கட்டடத்துக்கு அவசியமான பொருள்களைக் காணிக்கையாகக் கொடுத்தார்கள். முழுநேர தேவ ஊழியர்கள், தங்கள் பெற்றோரால் போஷிக்கப்பட்டு, உடுத்துவிக்கப்பட்ட பல வருடங்கள் எந்த உதவியையும் எதிர் பாராமல் தங்கள் ஊழியத்தின் பிரயாசத்தினால் உண்டான பணத்தையும் பொருள்களையும் ஜெபாலய வேலைகளுக்காக இலவசமாக விட்டு விட்டார்கள். அன்றிருந்த ஆண்களும் பெண்களுமான ஊழியக்காரர்கள் கட்டட வேலைகளுக்கான உதவி வேலைகளை இரவும் பகலும் இலவசமாகச் செய்தார்கள். இவைகளால் எளிதாக விரைவில் பல ஜெபாலயங்களைக் கட்டி எழுப்ப முடிந்தது. பிந்தின காலங்களில் பல உள்நாட்டு நண்பர்களின் பரிசுத்தொகைகளினாலும் இடங்களை விலை கொடுத்து வாங்கி ஜெபாலயங்களைக் கட்டினோம். ஆரம்பக்காலம் ஓலப்புரைகளாகவும் பின்பு 2000–ம் வருடமாகிய இந்த வருடம் வரை 55 இடங்களில் உறுதியான கட்டடங்களாகவும் ஜெபாலயங்களைக் கட்டிக்கொள்ள தேவன் கிருபை செய்திருக்கிறார். இவைகள் 250 முதல் 1500 வரை ஆட்கள் ஆராதனைக்கு உட்காரக்கூடிய அளவுள்ளவைகள். ஜெபாலயங்களோடு, ஆங்காங்கே சபைகளில் குடும்பமாகவும், தனிமையாகவுமிருந்து ஊழியம் செய்கின்ற தேவ ஊழியர்கள் தங்கி வாசம்பண்ண போதுமான வசதிகளுடன் அவர்களுக்கான வீடுகளும் கட்டப்பட்டுள்ளன. இவ்விடங்களெல்லாம் இவைகள் யாவும் சபைக்குச் சொந்தமான நிலங்களில் கட்டப்பட்டி ருக்கின்றன. சபையாரின் காணிக்கைளால் ஊழியர் போஷிக்கப்படு கிறார்கள். விசுவாசம் என்னும் கேடகத்தைப்

பிடித்துக்கொண்டு தேவஊழியர்கள் முன்னேறிக்கொண்டி ருக்கிறார்கள். ஓலையினாலும், மூங்கில்களாலும் கட்டப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட இடங்களிலெல்லாம் ஆஸ்பஸ்டஸ் ஷீட் அல்லது காங்கிறீட் மாடி அறைகளுடன் இன்று ஜெபாலயங்களும், ஊழியர் தங்கும் வீடுகளும் அமைந்திருக்கிறது என்றால், தேவன் எவ்வளவாய் அன்பு வைத்து ஆசீர்வதித்து சபையை பலுகிப் பெருகி விருத்தியடையச் செய்திருக்கிறார் என்பதை நினைத்து தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். எங்களால் ஏதாவது ஆகும் என்பதுபோல யோசிக்கிறதற்கு எங்களாலே நாங்கள் தகுதி உடையவர்கள் அல்ல. எங்களுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது. சபைகளை ஆரம்பிக்கும் ஊழியம் தொடர்வதற்கு வசதியாக நாம் செல்லும் இடங்களிலெல்லாம் திறந்த வாசல்கள் இருப்பதைக் காண்கிறேன். ஆயினும் சபைகளை ஆரம்பிக்கத்தக்க வண்ணம் போதுமான வருமான வசதிகள் இல்லாவிட்டாலும், தேவனைப் பற்றும் விசுவாசத்தினால் யாவும் மெதுவாக நடந்து வருகின்றது. அதை விரைவாகவும் போதுமான அளவிலும் செலுத்துவதற்காக தொடர்ந்து விசுவாசப் பாதையில் நடந்து செல்லுகின்றேன். தேவனைப் பற்றும் விசுவாசமே என் ஜெயத்தின் இரகசியம்.

பிற மாவட்ட ஊழியத்தின் ஆரம்பம் :

என்னோடு அசரீரியாகப் பேசும் தேவ வார்த்தையினால் நான் வழிநடத்தப்படுவதில் மகிழ்ச்சியாயிருந்தேன். மலவிளையில் மூன்று நாட்கள் பொதுக்கூட்டத்தில் செய்திகொடுத்துவிட்டு பஸ்ஸில் யாத்திரை செய்து வந்து கொண்டிருக்கும்போது, "மெஞ்ஞானபுரம் போ" என்னும் சத்தம் உண்டானது. அந்த ஊர் எங்கே இருக்கிறது என்று கேட்டு விசாரித்து, மெஞ்ஞானபுரம் போய் அருகே நடந்து கொண்டிருந்த ஜெபக்கூட்டத்தில் தேவனுடைய செய்தியைக் கொடுத்தேன். பின்பு அங்கே ஒரு வீட்டை வாடகைக்கு அமர்த்தி ஜெபக்கூட்டம் ஆரம்பித்தேன்.

பக்கத்திலுள்ள பல கிராமத்திற்கு சென்று ஏற்றுக்கொள்ளுவோரிடையில் சுவிசேஷ சத்தியங்களைப் போதித்தேன். பலர் சுகமடைந்தனர். சிலர் இரட்சிக்கப்பட்டார்கள். ஆலன்கோட்டைக்கு வந்து பலர் ஞானஸ்நானம் பெற்றார்கள். இவ்விதமாக அப்பகுதியிலுள்ள சில கிராமங்களில் சபைகள் ஆரம்பமாயின. இப்பகுதியில் ஊழியங்களைச் செய்யும்போது உணவுக்கு பல நாட்கள் வசதி இல்லாமலும், குளிப்பதற்கு போதுமான தண்ணீர் இல்லாமலும், பஸ் யாத்திரை பண்ண பணவசதி இல்லாமலும், விளக்கு வெளிச்சத்துக்கு விளக்குக்கு எண்ணெய் இல்லாமலும், வெயிலில் நடந்தும் மிகவும் கஷ்டத்துடனே ஊழியம் செய்திருக்கிறோம். ஆனால் ஆத்துமாக்கள் ஆதாயம் பண்ணப்படவேண்டும் என்னும் வாஞ்சையினால் எந்த ஒரு கஷ்டமும், கஷ்டமாகத் தோன்றாமல் சந்தோஷமாக சகித்துக்கொள்ள தேவன் உதவி செய்தார். தேவைகள் மத்தியில் எங்கள் ஜெபத்தினால் சிலர் வசதிகள் படைத்தவர்களாக மாறி, பிந்தின நாட்களில் ஊழியத்துக்கு உதவிசெய்கிறவர்களாக மாறினார்கள். "துக்கப்படுகிறவர்கள் எனப்பட்டாலும், எப்பொழுதும் சந்தோஷப்படுகிறவர்களாகவும், தரித்திரர் எனப்பட்டாலும் அநேகரை ஐசுவரியவான்களாக்குகிறவர்களாகவும், ஒன்றுமில்லாதவர்கள் எனப்பட்டாலும் சகலத்தையும் உடையவர்களாகவும் எங்களை விளங்கப்பண்ணுகிறோம். 2கொரி 6:10 என்றபடி வாழ தேவன் உதவிசெய்தார்.

இவ்விதமாக திருவனந்தபுரம், திருநெல்வேலி, புதுக்கோட்டை, ஈரோடு, திண்டுக்கல், மதுரை, தஞ்சாவூர், தென்ஆற்காடு, வடஆற்காடு முதலான மாவட்டங்களிலெல்லாம் சென்று சபைகளை ஆரம்பிப்பதற்கேதுவான ஊழியங்களைச் செய்ய தேவன் வழி நடத்தினார். இவைகளுக்காக அநேகந்தரம் பிரயாணம் பண்ணினேன். இரவுபகலாக கண் விழிப்பாயிருந்தேன். பரிசுத்த வேத வசனங்களை வாசித்து வாசித்து தியானித்து அதன் ஆழங்களைப் பெற்றுப் பிரசங்கித்தேன். முதல் 5 வருடங்கள் 40, 40 நாட்கள் தொடர் உபவாசமிருந்து தேவனிடம் ஜெபத்தில் காத்திருந்தேன். தேவன்

சொல்லுவதை வேத வசன ஆதாரங்களுடன் உடன் ஊழியர்களுக்குச் சொல்லுவேன். மாதம் ஒருநாள் தவறாமல் ஊழியர்களை ஒன்று கூட்டி ஜெபத்திலும் வேத ஆராய்ச்சியிலும் சமயத்தைச் செலவிடுவேன். என் சொந்தத் தேவைகளைவிட பிறருடைய தேவைகளையே பெரிதாக நிறைவேற்றுவேன். தேவனுடைய கிருபை என்னைத் தாங்குவதை நான் அறிவேன்.

எந்த ஒரு மனித பெலனும் ஒத்தாசையும் எனக்குக் கேள்விக் குறியாக இல்லாமலில்லை. தேவனுடைய கிருபை மாத்திரமே ஒரு கேள்விக்கும் இடமில்லாமல் என்னைச் சுமந்து வந்தது.

சபைகளின் பராமரிப்பு :

1946–ல் சிறிய ஜெபக்கூட்டமாக ஆரம்பிக்கப்பட்ட இந்தக்கூட்டம் 1950 முதல் சபையின் அஸ்திபார உபதேசங்களைக் கேட்க ஆரம்பித்தது. 1954–ல் அரசாங்கப் பதிவு பெற்று ஸ்திரமடைந்தது. ஒவ்வொரு சபையிலுமுள்ள வருமானங்கள் ஒழுங்கு செய்யப்பட்டுப் பாதுகாக்கப்பட்டன.நான் எந்த ஒரு ஸ்தாபனத்திலும் போய் எந்தவிதமான ஒழுங்குகளையும் கற்றுக்கொள்ள சமயமும் வாய்ப்பும் கிடைக்கவில்லை. ஆகவே தேவனிடம் ஜெபித்து ஜெபித்து, வேதாகமத்தின் லேவியர், ஆசாரியர்கள், தீர்க்கத்தரிசிகள், நியாயாதிபதிகள், நீதிமான்கள், இராஜாக்கள், ஆதிச்சபையின் ஊழியர்கள், சபையார் முதலானவர்களின் நடைமுறை ஒழுங்குகளைப்படித்துப் படித்து ஜெபத்துடனே தியானம் செய்து சபைகளின் நடைமுறைகளைச் செயல்படுத்தும்படி ஆரம்பித்தேன். தசமபாகம், காணிக்கை, முதற்பலன், பொருத்தனை, நன்கொடை முதலானவைகளை வேதாகம வசனங்களிலிருந்துக் கற்றுக்கொண்டு, சபைகளில் அவைகளைக் கற்பிக்க ஆரம்பித்தேன். வசனத்தைக் கேட்டவர்கள் உபதேசங்களுக்குக் கீழ்ப்படியும்படி பரிசுத்த ஆவியானவர் ஜனங்களின் உள்ளங்களில் கிரியை, செய்தார். தீர்க்கத்தரிசனம் உரைப்பவர்கள் உபதேச வசனங்களுக்குக் கீழ்ப்படியும்படி ஜனங்களைத்

தங்கள் தீர்க்கத்தரிசன வார்த்தைகளால் எச்சரித்தார்கள். நெல் முதலான தானியங்களிலும், தேங்காய், பலா, வாழை, பனை மற்றும் விருட்சங்களின் பலனிலும், ஆடு, மாடு, கோழி ஆகிய ஜீவன்களிலுமுள்ள வருமானங்களிலும், தங்கள் வேலைகளின் சம்பளங்களிலுமிருந்து காணிக்கைகளை ஜனங்கள் கர்த்தருக்குக் கொடுத்தார்கள். வியாதியிலிருந்து விடுதலை விரும்பினவர்களும், மற்றும் மிக அவசியமான தேவையுடையவர்களும் தேவன் தங்கள் தேவைகளைச் சந்திக்கும்படியாகப் பொருத்தனைகளைச் செய்தார்கள். சில சபைகளில் கூடுதலாகவும், சில சபைகளில் குறைவாக வருமானங்கள் கிடைத்தன. ஆகவே, 2கொரிந்தியர் 8:15 ல், "சமநிலைப் பபிரமாணத்தின்படியே அவர்களுடைய செல்வம் உங்கள் வறுமைக்கு உதவும்படிக்கு, இக்காலத்திலே உங்களுடைய செல்வம் அவர்களுடைய வறுமைக்கு உதவுவதாக" என்று சொல்லப்பட்டிருப்பதின் படி, கூடுதல் வருமானம் உள்ள சபைகளிலிருந்து குறைந்த வருமானங்கள் உள்ள சபைக்கு தேவையானவைகளை எடுத்துக்கொடுத்து சபைகளை ஆதரித்து வந்தோம்.

ஒருநாள் தெருவில் பவனியாகப் பாடி வசனங்களைச் சொல்லிக் கொண்டு வரவேண்டும் என்று பரிசுத்த ஆவியானவர் ஒரு தீர்க்கத்தரிசியின் மூலமாகப் பேசினார். அதை பூரண சந்திரப்பிரகாசமுள்ள நாளில் மாதம் ஒருமுறை செய்து வந்தோம். ஊழியர்கள் முன் வரிசையிலும் மற்றுள்ளவர்கள் அவர்களைத் தொடர்ந்தும் செல்லுவது வளக்கம். ஒருநாள், "இன்று நீங்கள் புறப்பட்டுச் செல்லும்போது, உங்களை எதிர்க்கிறவர்களால் இரத்தம் சிந்தத்தக்கதாகப் பாடுபடுவீர்கள், ஆனாலும் திடன் கொள்ளுங்கள், நான் உங்களுடனே இருக்கிறேன்" என்று கர்த்தருடைய ஆவியானவர் பேசினார். அன்று நாங்கள் எங்களைத்திடப்படுத்திக்கொண்டு, வளக்கப்படி பவனியாகப் பாடிக்கொண்டு, வேதவசனங்களைச் சொல்லிக்கொண்டு சென்றோம். ஆலன்கோட்டையிலுள்ள இரண்டாவது தெருவில் நாங்கள் செல்லும்போது எங்களது பவனியின் பின்னணியத்தில்

வந்தவர்களைக் கோலால் அடித்து, கல்லெறிந்தார்கள். அதில் பலர் காயமடைந்தார்கள். ஒரு சகோதரியின் காதில் கல்லெறிபட்டு காது துண்டித்து இரத்தம் வடிந்தது. கர்த்தர் சொன்னபடிதானே நடந்தது என்று எங்களைத் தேற்றிக்கொண்டு கர்த்தரை ஸ்தோத்தரித்துப்பாடி மகிமைப்படுத்தி னோம். அன்று கர்த்தர், மேலும் பல வாக்குத்தத் தங்களைத் தந்து எங்களைத் தைரியப்படுத்தினார்.

அதன்பின்பு இந்த நாளை ஒரு நினைவு நாளாக "பூரீம்" என்னும் பண்டிகை நாள் என எண்ணி, பௌர்ணமி தினங்களில் சாந்தபுரத்தில் அக்கூட்டத்தை நடத்தி வந்தோம். இந்த நாளை உபயோகித்து வந்தோம். கிளைச் சபை மக்கள் சாந்தபுரத்தில் கூடிவருவார்கள். அன்று நான் கொடுக்கும் செய்தி பொதுமக்களுக்கும் ஊழியக்காரர்களுக்கும் நல்ல சாரம் உடையதாக இருக்கும். அதற்கான விசேஷமான செய்திகளைக் கொண்ட உபதேசம் கொடுக்கும்படி பரிசுத்த ஆவியானவர் எனக்குக் கற்றுத்தந்து உபயோகித்துக்கொண்டி ருந்தார். இதனால் விசுவாசிகளின் ஐக்கியம் பாதுகாக்கப்பட்டு சபை ஊழியம் உயிர்பெற்று வளர்ந்து வந்தது. தீர்க்கத்தரிசன வார்த்தைகளும் சபையாரை உயிர்ப்பித்தன. சபையாரின் ஐக்கியமும் ஜெபமும் நன்றாயிருந்தது. சபையார் ஆவிக்குரிய அனுபவங்கள் இல்லாத ஜனங்களால் வெறுத்துத் தள்ளப்பட்டார்கள். விசுவாசிகள் தாங்கள் பெற்றுக்கொள்ளும் உபதேசங்களில் நிலைத்திருந்தார்கள். தங்கள் எந்தவொரு விசேஷங்களுக்கும் இரட்சிப்பின் அனுபவமில்லாதவர்களுடன் கலரமாட்டார்கள். வேறுபாடு என்னும் உபதேசத்திலும், பரிசுத்தமாகுதல் என்னும் உபதேசத்திலும் மிகவும் விழிப்பாயிருந்தார்கள். அந்நிய நுகத்தில் அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாமல் தேவனுடைய வசனங்களுக்குப் புறம்பான எல்லாக் கொள்கைகளுக்கும் விலகியி ருந்தார்கள். தங்கள் சரீரத்தை விலையேறின வஸ்திரங்களினாலோ, ஆபரணங்களினாலோ, பூக்களினாலோ, அலங்கரியாமல் தேவபக்தி யுடை யவர்களாக ஆண்களும் பெண்களும் காணப்பட்டார்கள். தங்கள் வீடுகளிலுள்ள எல்லா வைபவங்களுக்கும் ஊழியக்காரர்களையும்

விசுவாசிகளையும் அழைத்து நடத்திவந்தார்கள். தாங்கள் ஆரம்பிக்கிற எந்தத் தொழிலையும் ஊழியக்காரர்களையும் விசுவாசிகளையும் அழைத்து ஜெபித்து ஆரம்பித்தார்கள். தங்கள் பிள்ளைகளுக்குள் விவாகம் செய்துவைக்க விசுவாசிகளையே தெரிந்துகொண்டார்கள். இரட்சிக்கப்படுகிறவர்கள் சபைகளில் சேர்ந்துகொண்டே வந்தார்கள். தங்கள் ஊர்களில் சிலரால் வெறுக்கப்பட்டவர்களாயிருந்தாலும்பலரால் அங்கீகரிக்கப்பட்டவர் களாகவும் மதிப்புக்கும் மரியாதைக்கும் உரியவர்களாகவுமிருந்தார்கள். விசுவாசிகள் பெற்று வந்த மதிப்பினால் ஊழியக்காரர்களுக்கும் மதிப்பு உயர்ந்து வந்தது. அந்தந்த சபையிலுள்ள விசுவாசிகள் ஒருமனதுடன் எழுப்புதல் கூட்டங்களை நடத்தும்படி அதன் தேவைகளைச் சந்தித்தார்கள். பலவருடங்கள் ஆரம்ப நாட்களில் கூட்டங்களில் நானே தேவனுடைய செய்தியைக்கொடுத்து வந்தேன்.புதிய பாடல்களைப் புதிய ராகங்களுடன் அமைத்து அவைகளையும், வெவ்வேறு இடங்களில் சென்று பாடல்களைக் கற்று அவைகளையும் நான் நடத்தும் கூட்டங்களில் கூடிவருகின்ற மக்களுக்குக் கற்பித்துக் கூட்டங்களை நடத்தி வந்தேன். ஒருசில வருடங்களுக்குள் சபைக்கு என பாடல் புத்தகம் அச்சிட்டு வெளியிட தேவன் உதவி செய்தார்.

இப்படியே இதன் வளர்ச்சி இதுவரை தென்கேரளா, கன்னியாகுமரி மாவட்டம், சிதம்பரனார் மாவட்டம், மதுரை மாவட்டம், திருச்சி மாவட்டம், திண்டுக்கல் மாவட்டம், ஈரோடு மாவட்டம், தென் ஆற்காடு மாவட்டம், தஞ்சை மாவட்டம், வட ஆற்காடு மாவட்டம், சென்னை முதலான மாவட்டங்களிலுள்ள கிராமங்களில் பரவியுள்ளது. இந்த சபையைச்சேர்ந்தவர்களில் சிலர் மும்பை, கல்கத்தா, டெல்லி, பங்களூர் முதலான இடங்களிலும் தேவனுக்குச் சாட்சிகளாகி வருகிறார்கள். இன்னமும் உலகின் பல்வேறு நாடுகளிலும் சிலர் சாட்சிகளாக இருப்பதற்காக தேவனை ஸ்தோத்தரிக்கிறேன்.

சில வருடங்களாக பல்வேறு சபையிலுள்ள தேவ ஊழியர்களையும் அழைத்து விசுவாசிகளுக்காகவும், விசுவாசிகளாகும்படி தேவனால்

அழைக்கப்பட்டிருக்கின்ற பல்வேறு கிராமமக்களுக்காகவும் இரட்சிப்பின் சுவிசேஷத்தையும், மகிமையடையப்பண்ணும் சுவிசேஷத்தையும், சபைகளிலும் பொது இடங்களிலும் அறிவித்து வருகிறோம். இதனால் விசுவாசிகள் ஸ்திரமடைகிறார்கள். இரட்சிக்கப்படுகிறவர்கள் சபைகளில் சேர்க்கப்பட்டு வருகிறார்கள்.

சபையின் ஊழியக்காரர்கள் :

நான் உழியக்காரனாக தேவனால் எழுப்பப்படும் முன்னமே தேவனால் எழுப்பப்பட்டிருந்த ஊழியக்காரர்களுக்காக நான் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். அவர்களுடைய தேவ ஊழியங்கள் என்னால் செய்யப்படுகின்ற தேவ ஊழியத்துக்கு அஸ்திபாரமாக இருக்கின்றன. நான் எதைச் செய்தாலும் பெரிய விளம்பரத்துடனே செய்வதில்லை "பரலோக ராஜ்யம் புளித்த மாவுக்கு ஒப்பாக இருக்கிறது. அதை ஒரு ஸ்திரி எடுத்து, முழுவதும் புளிக்கும் வரைக்கும், மூன்றுபடி மாவிலே அடக்கிவைத்தாள்" என்று மத்தேயு 13:35 ல் இயேசு கூறின உவமையை என்னுடைய ஊழியத்துக்கு ஒரு உவமையாகக் கொடுத்தார். இந்த சபை ஊழியமும் என் தேவ ஊழியமும் சரியான அளவில் வரும்வரை நானாக எதையும் விளம்பரப்படுத்துவதில்லை என்ற தீர்மானம் என் உள்ளத்திலிருந்தது. ஆனபடியால் என்னை நீண்ட காலமாக விசாலமாக எவரும் அறியவில்லை. இரகசியம் இருப்பதுபோலவே இவ்வூழியம் இருந்து வந்தது. ஆனால் ஒரு சபை அமைப்புக்குரிய எல்லாம் நிறைவாக இருந்து பலமடைந்து வந்தது.

ஆரம்ப உழியர்கள் தீர்க்கதரிசனம் மாத்திரம் உரைப்பவர்களாகவும், அந்நிய பாஷையை ஆவியினால் நிறைந்து வியாக்கியானம் செய்கிறவர்களாகவும், நோயாளிகளுக்காகவும் தேவையுடையவர்களுக்காக ஜெபிக்கிறவர்களாகவுமிருந்தார்கள். உபவாச ஜெபம் இவர்களுக்கு பெலன் கொடுத்தது. மனித ஆலோசனைகளை ஏற்றுக்கொள்ளாமல் தேவ ஆலோசனையைக் குறித்து எதிர்கேள்விகள் கேட்காமல் கவனமாக இருந்தார்கள். இக்காரியத்தில் ஒருவருக்கொருவர்

உதவியாயிருந்தார்கள். இவர்களுடைய ஊழியத்தினால் பற்பல அதிசயமான சம்பவங்கள் நடந்தன. இதனால் இவர்களது ஊழியம் வளர்ச்சியடைந்தது. இதை ஏற்றுக்கொள்ளாதக் கூட்டத்தார் மூலமாக பற்பல விதமான துன்பங்கள் உண்டாயின. இதனால் பலரும் சிதறடிக்கப்பட்டனர். ஆனால் நான் முன் கூறினபடி சகோதரி சொர்ணபாக்கியம் தன் பெற்றோருடனும், தன் சகோதரன் வேதக்கண் என்பவருடனும் இந்த ஊழியத்தில் உறுதியாயிருந்தார்கள். முதிர்வயதுள்ள சில ஆண்களும் பெண்களும் தங்கள் முடிவுகாலம் வரை இவர்களுக்கு ஆதரவாயிருந்தார்கள்.

கர்த்தர் இந்த ஊழியத்தை சபை ஊழியமாக மாற்ற விரும்பினபோது, அதற்காக என்னை உபயோகித்தார். அன்று ஏழு இடங்களில் விசுவாசிகளின் ஏழு வீடுகளில் சபை ஊழியமாக ஆரம்பித்தோம். அதைத் தொடர்ந்து பல்வேறு கிராமங்களிலும் ஆரம்பமாயிற்று. அதை கவனிக்கவும், ஆராதனைகளை நடத்தவும் ஆட்கள் இல்லை. விசுவாசிகள் ஆலயங்களுக்குப் புறம்பாக்கப்பட்டதால் ஆராதனை அமைப்புகளை நடைமுறைபடுத்தவேண்டியதாக இருந்தது. எனவே ஜெபித்தேன். அப்போது சிலரை தேவன் உதவி ஊழியக்காரராகவும், மூப்பர்களாகவும் அபிஷேகம் செய்திருப்பதாக பரிசுத்த ஆவியானவர் பேசினார். அவர்கள் யார் யார் என்பதை ஜெபத்துடன் கண்டுபிடித்தேன். அவர்களுக்கு அன்று எனக்கிருந்த வெளிப்பாட்டின்படியுள்ள உபதேச ஒழுங்குகளைக் கற்பித்தேன். அவர்களை உதவி ஊழியர்கள், மூப்பர்கள் என்ற ஊழியத்தின் வகுப்பில் கைவைத்து ஜெபித்து உறுதிப்படுத்தினேன். அவர்கள் முழுநேர ஊழியர்களாக இருக்கவில்லை. 2தீமோத்தேயு 2:2 ல் சொல்லப்பட்டிருக்கின்ற வேதாகம வசனத்தை தேவன் எனக்குத் தந்தார். "அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர் களிடத்தில் ஒப்புவி" என்றார். அதோடு, 1தீமோத்தேயு 3:12,13 ம் வசனங்களையும் தந்தார். மேலும் உதவிக்காரரானவர்கள் ஒரே மனைவியையுடைய

புருஷருமாய், தங்கள் பிள்ளைகளையும் சொந்தக் குடும்பங்களையும் நன்றாய் நடத்துகிறவர்களுமாயிருக்க வேண்டும். இப்படி உதவிக்காரருடைய ஊழியத்தை நன்றாய்ச் செய்கிறவர்கள் தங்களுக்கு நல்ல நிலையையும், கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தில் மிகுந்த தைரியத்தையும் அடைவார்கள்" என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே ஒவ்வொரு சபையிலும் உதவிக்காரர் ஒருவரையும் மூப்பர் ஒருவரையும் நியமித்து அவர்களை உழியத்தில் உபயோகித்துக் கொண்டிருந்தேன். இவர்கள் தங்கள் சொந்தக் குடும்பங்களில் எதாவது விபரீதங்கள் நடந்தால், "1திமோத்தேயு 3:5 ல் சொல்லப்பட்டிருப்பதின்படி, ஒருவன் தன் சொந்தக்குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான் ? என்று எச்சரித்து அவர்களை ஊழியத்தில் கவனமாக இருக்கும்படி உபதேசிப்பேன். இதனால் அவர்கள் ஒவ்வொருவரும் உற்சாகத்தோடும் கவனத்தோடும் இந்த ஊழியத்தில் மிக உதவியாக இருந்தார்கள். தனது விவாக நிச்சயம் நடந்த காலத்தில் சகோதரி சொற்ணபாக்கியம் பரிசுத்த ஆவியின் அபிஷேகமும், அந்நியபாஷைகளை வியாக்கியானம் செய்யும் வரமும், வியாதியஸ்தர்களையும் பிசாசு பிடித்தவர்களையும் விடுதலை செய்யும் வரமும், தீர்க்கத்தரிசனங்களை உரைக்கவும் போதகம் பண்ணவும் வரங்கள் பெற்று உழியத்தின் அழைப்பையும் பெற்றுக்கொண்டு முழுநேர தேவ ஊழியராக இறங்கிவிட்டபடியால், விவாகத்தைப்பற்றிய எண்ணத்தை விட்டுவிட்டார்கள். மேலும் இவர்களுடனே வேறுசில கன்னிகைகளும் முழுநேர ஊழியர்களாகச் சேர்ந்து கொண்டார்கள்.

நான் பிறப்பதற்கு முன்னமே பெற்றோர் என்னை தேவனுடைய ஊழியத்துக்காக ஒப்படைத்துவிட்டனர். இதை நான் அறிந்து தேவனிடம் ஜெபித்து வந்தேன். அப்போது தேவன் எரேமியா 16:2-ம் வசனத்தை என்னிடம் போசி, "நீ பெண்ணை விவாகம் பண்ண வேண்டாம், இவ்விடத்தில் உனக்கு குமாரரும் குமாரத்திகளும் இருக்க வேண்டாம்" என்றார். இதன்பின்பு பரிசுத்த ஆவியானவர் ஒரு தேவ ஊழியக்காரன்,

என்னிடம் வந்து இதைக் கூறி என் வாழ்க்கை விதத்தை உறுதிப்படுத்தினார். நான் என்னுடைய வாழ்க்கை விவரத்தை உறுதிப்படுத்தின பின்பு, வேறு சில வாலிபர்கள், விவாகமில்லாமலே முழுநேர ஊழியக்காரர்களாக இருந்து உழியம் செய்வதற்காகத் தங்களை ஒப்புவித்து என்னுடனே சேர்ந்துகொண்டார்கள். ஆனால் பல கிறிஸ்தவ ஊழியர்களும் எங்களை நம்பவில்லை. ஏனென்றால் நாங்கள் 18 வயது முதல் 22 வயது வரையுள்ள வாலிபர்களாகவும், கன்னிகைகளாகவுமிருந்தோம். விரைவில் நாங்கள் தவறுகளிலகப்பட்டு இந்த ஊழியம் சிதறடிக்கப்பட்டு ஒழிந்துபோகும் என்று பலரும் எதிர்பார்த்தார்கள். நாங்கள் பலவீனர்களானாலும் எங்கள் தேவன் பலமுள்ளவராயிருந்து எங்கள் பலவீனங்களில் எங்களுக்கு உதவிசெய்து எங்களை தாங்கி வந்தார். "இயேசுகிறிஸ்து பலவீனத்தால் சிலுவையிலறையப்பட்டிருந்தும் தேவனுடைய வல்லமையினால் பிழைத்திருக்கிறார். அப்படி நாங்களும் பலவீனராயிருந்தும், உங்களிடமாய் (சபையிடமாய்) விளங்கிய தேவனுடைய வல்லமையினால் அவருடனே கூட பிழைத்திருப்போம்" என்று 2கொரிந்தியர் 13:4 ல் சொல்லியபடி இந்நாள் வரைக்கும் சபையிலும் சபை ஊழியத்திலுமிருக்க தேவன் உதவி செய்திருக்கிறார். "மேலும் தமது மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறார்" என்ற எபிரேயர் 7:5-ம் வசனத்தின்படியும், "ஆதலால் அவர்தாமே சோதிக்கப்பட்டு பாடுபட்டதினாலே அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய வல்லவராயிருக்கிறார". என்ற எபிரெயர் 2:18 ன் படியும் தேவகிருபையின் வல்லமை எங்களைத் தாங்கி வந்ததை உணருகிறேன். எங்களுக்களிக்கப்பட்ட தேவகிருபை எங்களை தாங்கினது. தேவனுடைய கரம் எங்களை பிடித்திருந்தது. தேவனுடைய செட்டை எங்களைச் சுமந்து வந்தது. நாங்கள் அனுபவித்த நிந்தைகளுக்கு அளவே இல்லை. பரியாசங்கள் பல சமயங்களில் தாங்கக் கூடாத சுமையாக இருந்தன. அவமானங்கள் எங்களைச் சூழ்ந்த தருணங்களும் உண்டு. பல

மேடுகளையும் குன்றுகளையும் தாண்டினோம். வெயிலின் கொடுமையையும் குளிரின் பாதிப்புகளும் வந்தன. ஆனாலும் தேவ கிருபையினாலும் தேவனுடைய மகாப் பெரிய இரக்கத்தினாலும் அழைக்கப்பட்ட அழைப்பில் உறுதியாயிருக்கிறோம்.

இயேசுவின் அழகு 1989 – ம் வருடம் :

அன்று மாற்கு அதிகாரத்தை வாசித்து தியானித்துக்கொண்டிருந்தேன். என் அறையின் வாசலில் ஒரு வாலிபன் வந்து நிற்பதைப் பார்த்தேன். அவருடைய நிறம் வெண்மை கலந்த சிவப்பாக இருந்தது. அவருடைய தலைமயிர் கறுப்பாகவும் அதில் தங்கநிறம் மின்னி மின்னிப் பிரகாசிப்பதாகவுமிருந்தது. அவர் வாயின் அழகு என்னால் வருணிக்க முடிகிறதில்லை. தமது வாயைத்திறந்து அழகிய தமிழ் மொழியில் அன்பின் குரலில், "நான் இதோ, சீக்கிரமாக வருகிறேன். இதை எங்கும் சொல்லு" என்று கூறினதும் மறைந்துவிட்டார். இந்தக் காட்சியால் என் உடல் நடுங்குகிறது. என் உள்ளம் பயபக்தியுடன் அதிர்ந்தது. என் நாவில் இடைவிடாத துதி எழுந்தது. சில நிமிடங்கள் நான் இப்படியே ஸ்தம்பித்து விட்டேன். நண்பா, இயேசு இதோ சீக்கிரமாக வருகிறேன் என்று வந்து சொல்லியிருக்கிறார். நீயும் ஆயத்தமாகி உன் கூட்டத்தாரையும் ஆயத்தப்படுத்தும்படி சொல்லு.

இயேசுவின் அழகை பல தடவைகள் நான் பார்த்திருக்கிறேன். எத்தனை அழகு. எவ்வளவு வசீகரமான தோற்றம், குழுகுழுவென்று மின்னும் முகம். அதற்கு உவமையாக எதுவுமில்லை. அவருடைய அழகுக்கு அவர்தான் உவமை. அப்போஸ்தலனாகிய யோவானும் அரசனாகிய சாலொமோனும் கூறுவது ஒரு சிறிய பாகம்தான். என் பார்வையில் கண்டதோ அளவிடமுடியாத அன்பே வழிந்தோடும் அழகு, இவர்தான் என் சினேகிதர். இவர்தான் என் ஆத்தும நேசர். இவருக்காகவே வாழுகிறேன்.


PRAYING FOR THE SICK & NEEDY


AIR PORT


REV. PALMER & REV. TOM

TORANTO MINISTRY



SINGAPORE MINISTRY

CHURCH - SATHIYA NAGAR

CHURCH - ALENCOTAI

WORSHIP



KERALA - CHURCH

என் உபதேசத்தைக் கேளுங்கள் :

என் உபதேசங்கள் என்னால் உண்டானவைகள் அல்ல. அவைகளை 5 வருடங்களாக என் தேவனிடம் உபவாசத்திலிருந்து கற்றுக்கொண்டேன். எனக்கு கற்பிக்கும்படி தேவனுடைய வார்த்தைகளை என் காதினால் நான் கேட்டிருக்கிறேன். அவைகள் இரவிலானாலும் பகலிலானாலும் என்னுடைய குறிப்புப் புத்தகத்தில் குறித்து வைத்துக்கொள்வேன். எனக்குக் குறிப்புகள் மட்டுமே கற்றுத்தரப்பட்டன. பின்பு அக்குறிப்பிலிருந்து அந்த பாடத்தின் முழுவதையும் தேவ ஆவியானவரின் அறிவு உணர்த்துவதினால் எழுதி வைத்துக்கொள்வேன. அப்படி நான் பாடங்களை எழுதும்போது பல தேவதாசர்களின் உபதேசங்களிலும், பலருடைய புத்தகங்களிலும் பொருத்தமாய் அமையும் பாடப்பகுதிகளையும் சேர்த்துக்கொள்ளுவேன். சில வருடங்களுக்கு பின்பு அஞ்சல் வழி வேதபாடங்களில் சிலவற்றைப் படித்துத் தேர்ச்சி பெற்றேன்.

நான் எதைப் பிரசங்கித்தாலும் அதில் பலப் பிரசங்கங்கள் அடங்கி இருக்கும். ஆகவே கேட்கிறவர்கள் தங்கள் தங்கள் தேவைகள் அவைகளால் சந்திக்கப்பட்டதை உணர்ந்துகொள்வார்கள். என் உடன் ஊழியர்கள் என்னிடம் கற்றுக்கொண்டவைகளில் தேர்ச்சி பெற்றார்கள். ஒரு பாடத்தை 1 மணி நேரம் கற்பிப்பதற்காக குறைந்தது 6 மணி நேரமாக ஆயத்தம் செய்வேன். ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தின விசேஷம் வரையிலுமுள்ள 66 புத்தகங்களையும் புரட்டிப்புரட்டி ஒத்த வாக்கிய வசனங்களைக் கோர்த்துக்கொள்ள பரிசுத்த ஆவியானவர் வசனங்களைக் கூட்டிச் சேர்த்துத் தந்து கொண்டேயிருந்தார். இப்போது அவைகளில் அதிகமாகப் பழகிக்கொண்டேன். கதைகள், உவமானங்கள் என் பிரசங்கத்தில் இடம் பெற வாய்ப்புகொடுப்பதில்லை. வேதாகம சம்பவங்களையே உதாரணத்துக்காகவும் கொடுத்துக்கொண்டிருந்தேன். ஆனபடியால் கதைகள் தமாஷ்கள் என் உபதேசத்தில் காணக்கிடைப்பதில்லை.

ஆனாலும் கேட்கிறவர்கள் அதைரியப்படையாமலும், சோர்ந்து போகாமலும் கேட்டுக்கொண்டிருப்பார்கள். பரிசுத்த ஆவியானவர் இதற்கு உதவி செய்கிறார்.

சபையின் அஸ்திபார உபதேசங்கள் ஏழு என்பார்கள். நான் அவைகளை பத்து என்று பிரித்து விளங்கவைக்கிறேன். நியாயாபிரமாண காலத்தில் தேவன் எழுதிக் கொடுத்தவைகள் பத்துக்கட்டளைகள். அப்பத்துக்கட்டளைகளுக்கும் சரியாக, கட்டளையே விளக்கு, வேதமே வெளிச்சம் என்று கற்பித்த சாலொமோன், தான் கட்டின எருசலேம் தேவாலயத்தில் பத்து விளக்குகளை எற்றினான். ரெபெக்காளைச் சந்திக்கும்படி எலியேசர் அனுப்பப்பட்டபோது பத்து ஒட்டகங்களில் உச்சிதமானவைகளை ஆபிரகாம் அனுப்பிவைத்தான். லூக்கா சுவிசேஷத்தில் இயேசு கூறின உவமையில் (19:11-26) பிரபுவாகிய ஒருவன் தூர தேசத்துக்குப்போக புறப்படும் போது தன் ஊழியக்காரரில் பத்துப்பேரை அழைத்து பத்து ராத்தல் திரவியம் கொடுத்தான் என்று சொல்லுகிறார். பத்து என்னும் எண் மனிதரிடம் இருக்க வேண்டிய உத்தரவாதத்தின் பூரணத்தைக் காண்பிக்கிறது. ஒரு ஸ்திரி பத்து வெள்ளிக்காசு உடையவர் அதில் ஒன்று காணாமற்போனதைக்கண்டெடுத்து தன்னைப் பூரணமுடையவளாக்கிக் கொண்டு சந்தோஷப்பட்ட உவமையையும் இயேசு சொல்லியிருக்கிறார். வெளி 2:10 ல் பத்து நாள் உபத்திரவம் என்னும் வலுசர்ப்பத்தின் வல்லமை பத்து கொம்புகளையுடையது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. வலுசர்ப்பம் எழும்பும்போது பத்துக்கட்டளைகளையும் மாற்றி பாவங்களைப் பரிசுத்தம் என்பான்.

கிறிஸ்தவ சபை தன் அஸ்திபார உபதேசத்தில் நிலைத்திருக்க வேண்டும் என்னும் உண்மையை தேவன் எனக்கு தெளிவாக வெளிப்படுத்திக் காண்பித்தபடியால் என் ஊழியத்தின் ஆரம்பம் முதலே சபை ஊழியமாக பொருளாதாரமில்லாதபடியால் நூற்றுக்கணக்கான சபைகளையும் நூற்றுக்கணக்கான ஊழியக்காரர்களயையும் உருவாக்க

சில வருடங்களானது. அறிவின் திறமையோ, பொருளாதாரத் திறமையோ அல்ல, பரிசுத்த ஆவியானவரின் தேவ வல்லமையோடும் முழு நிச்சயத்தோடும் இவ்வூழியத்தில் தொடர்ந்து கொண்டிருக்கிறேன்.

ஆரம்பத்தில் எங்கள் ஊழியம் மாத்திரமே தேவ ஆவியினால் உடன் துளிர்விட்டுக்கொண்டிருக்கிறது என்னும் அறிவே எங்களிடம் இருந்தது. ஆனால் காலம் தொடர்ந்தபோது, முன்னே சபைகளில் இருந்தவைகளே இப்போதும் எங்களிடம் இருக்கிறது என்பதைக் கண்டுகொண்டோம். வேறு எவரையும் நமது சபைகளில் பிரசங்கிக்க விட வேண்டாம் என்னும் எண்ணம் இதனால் மாற ஆரம்பித்தது. பெந்தெகொஸ்தே அனுபவமுள்ள எங்களுடன் உபதேசத்தில் ஒற்றுமையுடையவர்களை அழைத்து கன்வென்ஷன் கூட்டங்களும் எழுப்புதல் கூட்டங்களும் நடத்த ஆரம்பித்தோம். தெய்வீக அறிவும் வளர்ச்சியடைந்தது.

கொஞ்சத்தில் மிகுதியான அற்புதம் :

என் வாழ்க்கையில் கொஞ்சமாயிருந்த பொருள்களையும், பணங்களையும் வைத்து மிகுதியான காரியங்கள் நடந்திருப்பதைப் பார்த்திருக்கிறேன். சத்தியமங்கலம் ஊரில் ஒரு ஜெபாலயம் கட்ட அஸ்திபாரமிட்டு வேலை ஆரம்பித்தோம். தேவனுடைய கிருபையால் அந்த கட்டட வேலை ஆசீர்வாதமாக நடந்தது. என்னிடமிருந்த இரண்டு சக்கர வண்டியை விற்று இதற்காகச் செலவழித்தேன். அங்கிருந்த ஊழியர் அவ்வேலையை நடத்திக்கொண்டிருந்தார். எல்லா வரவு செலவு கணக்குகளையும் மிகவும் கவனமாக எழுதி வைத்துக்கொண்டோம். கடைசியாக அவ்வூழியரும் நானுமாகக் கணக்குப் பார்த்தோம். வரவைவிட அதிகம் சில ஆயிரம்ரூபாய் செலவு செய்யப்பட்டிருப்பதாகக் கண்டோம். கடன் இல்லை. இது எப்படி ஆயிற்று என ஆச்சரியமடைந்தோம். 5 அப்பங்களையும் 2 மீன்களையும் ஆசீர்வதித்து அதிகமானவர்கள் சாப்பிடும்படி அற்புதம் செய்த

ஆண்டவர் இந்த ஜெபாலய வேலையிலும் அற்புதம் செய்திருப்பதைக் கண்டோம்.

இதுபோலவே பல கூட்டங்கள் நடத்தும்போதும், பிரயாணங்களிலும், பல ஜெப ஆலயங்களைக் கட்டும் போதும் சிறிய தொகையைக் கொண்டு அதற்கும் மிஞ்சின அதிகமான வேலைகள் நடந்திருப்பதைக் கண்டிருக்கிறேன். ஆதி 1:22 தேவன் அவைகளை ஆசீர்வதித்து, பெருகக்கடவது என்றார். இன்றும் தேவன் ஆசீர்வதித்தவைகள் பெருகிக் கொண்டே இருக்கின்றன. தேவனுடைய பெருகப்பண்ணும் அற்புதத்தைப் புரிந்து கொள்ளாத மக்கள், எனக்கு எங்கெங்கெல்லாமோ இருந்து பணம் வருகிறது என தப்புக்கணக்குப் போட்டுக் கொண்டிருந்தார்கள். சிறுவனுடைய அப்பங்களையும் மீன்களையும் ஆண்டவர் ஆசீர்வதித்து கொடுத்தபோது சீஷர்களின் கூடைகளில் அவைகள் பெருகிக் கொண்டிருந்ததுபோலவே, மக்கள் கொடுக்கும் காணிக்கைப் பொருள்களையும் தேவன் தேவைப்படி பெருகபண்ணி நடத்திக்கொண்டிருக்கிறார். எனக்கு மாத்திரமல்ல அவரை விசுவாசிக்கின்ற அத்தனைபேருக்கும் இந்த அற்புதத்தைச் செய்ய நம் இயேசுகிறிஸ்து இன்றும் வல்லவராயிருக்கிறார்.

வாக்கத்தத்தங்களைப் பிடித்துக்கொண்டு அர்ப்பணம் :

சபைஊழியம் ஆரம்பிக்கும்போது கர்த்தர் நல்ல ஆலோசனைகளைக் கொடுத்துக்கொண்டிருந்தார். நான் யேகோவா இரட்சணிய சபையினின்று தேவனுடைய ஊழியத்தைச் செய்யும்படி தேவனால் அழைக்கப்பட்டு, தெரிந்துகொள்ளப்பட்டபடியினால், என்னையும் என்னுடையதெல்லாவற்றையும் (சொத்து, பொருள், வஸ்து, பணம்) கிறிஸ்து இயேசுவுக்குள் அவருக்காக சபையின் ஊழியக்காரர்களதும் சபையினதும் பொதுவில் சமர்ப்பித்துவிட்டு அவை யாதொன்றிலும் தனி அவகாசம் இல்லாதபடியும், சபையின் ஊழியக்காரர்களின் எல்லா நிபந்தனைகளின்படியும் எனது மரணம் வரை நடந்துகொள்ளுவேன்" என்று தீர்மானம் செய்து, தீர்மான உடன்படிக்கையின் புத்தகத்தில் கையொப்பமிட்டேன்.

இதைத் தொடர்ந்து சில சகோதரிகளும் பின்பு சில சகோதர்களும், அதன்பின்பு தங்கள் சபைகளுடனே வந்து சேர்ந்து கொண்ட தேவ ஊழியக்காரர்களும் கையெழுத்துப்போட்டு தங்களை தேவனுடைய ஊழியத்துக்காக அர்ப்பணித்துக்கொண்டார்கள். இன்றுவரை இந்தத் தீர்மானத்தில் உறுதியாக இருக்கும்படி எனக்கு கிருபை செய்த தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். ஒரு சிலரால் இந்தத் தீர்மானத்தைக் காத்துக்கொள்ள முடியாதபடியால் என்னை விட்டுப் பிரிந்து போனார்கள். சிலர் உறுதியாக இருந்து உழைத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த அர்ப்பணிப்புக்கு உட்படமுடியாதவர்களும் அன்புடன் இணைந்து ஊழியத்தில் உற்சாகமாயிருக்கிறார்கள். விலகிப் போனவர்கள் கிறிஸ்துவை மறுதலியாமலும் விசுவாச உபதேசங்களில் பின் வாங்காமலும் தங்களைத் தாங்களே உறுதிபண்ணிக்கொண்டு சுயாதீனமாக தேவனுடைய ஊழியத்தில் தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள். அவன் விழுந்தாலும் தள்ளுண்டுபோவதில்லை, கர்த்தர் தமது கையினால் அவனைத் தாங்குகிறார். சங் 37:24.

சோர்பு உண்டாகும் சர்தர்ப்பங்களில் தேவன் தம்முடைய வாக்குத் தத்தங்களினால் என்னைத் தேற்றி என்னுடைய அர்ப்பணத்தைப் புதுப்பித்து உயிர்ப்பித்து நடத்திக் கொண்டிருக்கிறார்

நஷ்டத்தில் இலாபம் :

1971–ம் வருடம் ஜூன் மாதம் ஆலன்கோட்டை ஜெபவீட்டின் பக்கத்து நிலத்தில் மொட்டையாக நின்றுகொண்டிருந்த சுவர். நமது ஜெப வீட்டின் மேல் விழுந்து, அதன் கூரை கீழே விழுந்துவிட்டது. அப்போது ஊழியக்காரர் எவருமில்லை. தாயம்மாள் என்னும் தாயார் அங்கே ஜெபவீட்டில் ஜெபத்துடன் தங்கியிருந்தார்கள். அவர்கள் இருந்த இடத்தில் இந்த கூரை அவர்களை உள்ளே வைத்துப் பாதுகாப்பதுபோல அவர்களைச் சூழ காணப்பட்டது. ஆபத்திலும் ஆண்டவருடைய உதவியைக் கண்டு தேவனை பலர் மகிமைப்படுத்தினார்கள். ஆனால்

இதோடு யேகோவா இரட்சணிய சபை விழுந்துபோனது என்று சில கொக்கரித்தார்கள். ஆனால் விரைவில் நல்ல சிமெண்ட் காங்கிரீட் போட்ட கட்டடம் முன்னிலும் அதிகம் விஸ்தாரமாகக் கட்டிக்கொள்ள தேவன் கிருபை புரிந்தார். விசவாசிகளும் ஊழியர்களும் இதன் தேவைகளுக்காக உபவாசித்து ஜெபித்தபோது தேவன் பலருடைய உள்ளங்களில் கொடுக்கும் உற்சாகத்தைக் கொடுத்து அதன் எல்லா தேவைகளையும் சந்தித்தார். இது பெரிய வேலை, நம்மால் முடியாது என்று சில உடன் ஊழியர்கள் ஒத்துழைப்புக் கொடுக்க தாமதமானார்கள். ஆனால் 1973 ஜனவரி மாதம் 7-ம் தேதி ஆலன்கோட்டையில் புதிய ஜெபாலயம் அதன் ஊழியர்கள் தங்கும் அறைகளோடே காங்கிரீட் கட்டடமாகக் கட்டப்பட்டு, பிரதிஷ்டை பண்ணப்பட்டது. தொடர்ந்து பல ஜெபவீடுகளைக் கட்டி சபைகளை உறுதிப்படுத்தும்படி தேவன் என்னையும் என் உடன் ஊழியக்காரர்களையும் நடத்திக் கொண்டிருக்கிறார். தேவன் அதிசயமானவர் என்பதற்கு நாங்கள் சாட்சி.

நடுஇரவில் தப்பி விடுதலைபெறுதல் :

அனந்த நாடார் குடியிருப்பில் மிர். மாசிலாமணி தாசையா வீட்டில் கூட்டங்கள் நடத்தும்படிச் சென்றிருந்தேன். அவ்வூரிலுள்ள பலருக்கும் இது விருப்பம் இல்லை. ஆலயத்தின் மணியை கலக மணியாக அடித்து கூட்டம் கூடினார்கள். நான் இருந்த வீட்டை நோக்கி நூற்றுக்கும் அதிகமானவர்கள் திரண்டு வந்தனர். என்னைப் பிடித்து அடித்துக் கொன்று போடவேண்டும் என்பதே அவர்களுடைய திட்டம். இதை அறிந்த வீட்டார் என்னை வீட்டின் ஒரு அறையில் கட்டிலின் கீழ் படுக்கவைத்து கட்டிலின்மேல் துணிகளைப் போட்டு மூடி ஒளித்து வைத்துவிட்டு அறையின் கதவை பூட்டிவிட்டார்கள். ஊரார் என்னை வெளியே அனுப்பும்படி எவ்வளவு கூறினபோதும், கூக்குரலிட்டபோதும் என்னை இந்த வீட்டார் வெளியே விடவில்லை! இதனால் கோபமடைந்த எதிராளிகள் வெளியில் நின்ற மரங்களையும் வாழைகளையும் வெட்டி வீழ்த்தினார்கள். பாத்திரங்களை எடுத்து

கிணற்றில் வீசினார்கள். நான் இருந்த வீட்டின் கூரையின் மேல் கல்லுகளை எறிந்து கூரையின் ஒடுகளை நொறுக்கினார்கள். பின்பு நான் வெளியே வருவதைக் கண்காணிக்க ஒருசிலரை ஏற்பாடு பண்ணிவிட்டுப் போய்விட்டார்கள்.

பின்பு வீட்டார் வந்து என்னை ஒளித்துவைத்திருந்த இடத்திலிருந்து அடுத்த அறைக்குக் கொண்டு வந்து எனக்கு பசியாற்றினர். பின்பு ஜெபித்தோம். காலை விடியும் வரை இங்கிருப்பது நல்லதல்ல என்று எண்ணினேன். எனவே நடுஇரவில் நானும் Bro.தாசையாவுமாக எழுந்து கதவைத் திறந்து பக்கத்து ஊராகிய சாந்தபுரத்துக்குப் போகும்படி புறப்பட்டோம். என்னைக் கண்காணித்துக் கொண்டிருந்த மனிதன் எங்களைக் கண்டதும் மற்றும் சிலரை தன்னோடு வருவதற்காக அழைத்தான். உடனே நாங்கள் ஒரு வீட்டின் முன் கதவைத் தட்டித்திறந்து அவ்வீட்டின் பின் கதவைத்திறந்து கொண்டு பின்பக்கமாக ஊரை விட்டு வெகுதூரம் வெளியே ஓடி உயிர்தப்பினோம்.எங்களைத் துரத்திக்கொண்டு வந்தவர்கள் அந்த வீட்டாரிடம் வந்து விசாரித்து அந்த வீட்டை சோதனைப்பண்ணி எங்களைக் காணாமல் ஏமாந்து போய்விட்டார்கள். நாங்கள் நீண்டதூரம் நடந்து சாந்தபுரம் என்னும் ஊரில் போய் இரட்சணிய சபையின் வீட்டில் இளைப்பாறினோம்.

பாடுகளில் மகிழ்ச்சி :

இந்த சாந்தபுரத்தில் மாதம் ஒருநாள் விசேஷக்கூட்டத்தை நடத்துவது வளக்கம். அவ்வளக்கத்தின்படியே ஒரு பௌர்ணமி தினத்தன்று ஜெபக்கூட்டம் நடத்தச் சென்றிருந்தேன். கிளைச் சபைகளிலுள்ள விசுவாசிகளும் ஊழியர்களும் வந்திருந்தனர். கூட்டம் முடிந்து இரவு 11 மணிக்குமேல் விசுவாசிகளும் ஊழியர்களும் நான்கு திசையாகப் பிரிந்து தங்கள் தங்கள் ஊர்களுக்குப் போய்க்கொண்டிருந்தனர். அதில் வடதிசையில் சென்றவர்களும் தென்திசையில் சென்றவர்களும் அவ்வூரிலுள்ள எதிராளிகளால் பற்பல விதமாக

அடித்துத் துன்பப்படுத்தப்பட்டார்கள். அவர்களுடைய பாட்டு புத்தகங்களையும் வேத புஸ்தகங்களையும் பறித்துக்கொண்டு வஸ்திரங்களைக் கிழித்துப்போட்டார்கள். அன்று பரிசுத்த ஆவியானவர் என்னை மேற்குத்திசையாகப் போகப்பண்ணினார். ஒரு விசுவாசியானவர் என்னை ஒரு சைக்கிளில் வைத்து ஓட்டிக்கொண்டு போனார். நான் சுகமாக ஆலன்கோட்டை ஜெபவீட்டையடைந்தேன். எனக்கு என்ன சம்பவித்ததோ என்னும் கவலையோடே அங்கு வந்திருந்த விசுவாசிகளும் ஊழியர்களும் என்னை சுகமாகக் கொண்டு சேர்த்த தேவனை ஸ்தோத்தரித்தார்கள்.பின்பு தங்களுக்கு நேரிட்ட கஷ்டங்களையும் பாடுகளையும் எடுத்துக்கூறினார்கள்.அன்று இரவிலேயே எங்களைப் பகைத்துத் துன்பப்படுத்தினவர்களுக்காக ஜெபித்தோம்.

இப்போது எங்களைத் துன்பப்படுத்தின ஒவ்வொரு கிராமங்களிலும் எங்கள் தேவனுடைய கிளைச் சபைகளும் ஜெபாலயங்களும், ஆவியோடும் உண்மையோடும் தேவனை ஆராதிக்கிற ஜனங்களும் இருப்பதற்காக தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். இப்போது அவ்வூர்களில் செல்லும்போதெல்லாம் கடந்த காலத்தை எண்ணி தேவனுக்கு நன்றி கூறுகிறேன்.

வியாதிப்பட்ட நேரங்களில் இயேசுவே என் பரிகாரி :

நான் பல சமயங்களில் பற்பல விதமான நோய்களினால் வாதிக்கப்பட்டதுண்டு. அப்போதெல்லாம் இயேசுகிறிஸ்து எனக்கு நல்ல பரிகாரியாக இருந்து என்னை குணமாக்குகிறார். என்னுடைய 5–ம் வயதில் முடமான என் இடது, கையைக் குணமாக்கினதைப் பற்றி ஆரம்பத்தில் கூறினேன்.

என் வாலிபப்பிராய பள்ளிப் பருவத்தில் கராத்தே, குஸ்தி போன்றவைகளைப் படிக்க ஆரம்பித்திருந்தேன். அப்போது ஏதோ காரணத்தினால் ஒருமாதகாலம் காய்ச்சலாக படுக்கையிலிருந்தேன். தேவனுடைய பிள்ளைகள் வந்து ஜெபித்தார்கள். பின்பு குணமடைந்தேன்.

தேவனுடைய அழைப்புக்குக் கீழ்ப்படியாமலிருந்தபோது வயிற்றுவலியினாலும், வாய்ப்புண், காய்ச்சல் இவைகளினாலும் பெலவீனமடைந்தேன். தேவனுடைய சித்தத்துக்கு முழுவதுமாக என்னை ஒப்புவித்து ஜெபித்தபோது தேவன் என்னை குணமாக்கினார்.

அடிக்கடி உபவாசமும், கண்விழிப்பும், இரவுபகல் என பாராமல் ஊழியத்தினிமித்தம் பிரயாணங்களும் என் உடலை நோய்வாய்ப்படுத்தினது. உடல் பெலன் குன்றினது. குளிரைத் தாங்க முடியாமல் என் நரம்புகள் பெலவீனமடைந்தன. இந்த பெலவீனத்திலும் கூட்டங்களில் பாடல் ஆராதனைகளை நடத்துவதும், பிரசங்கிப்பதும் மக்கள் பரிசுத்தாவியானவரைப் பெற்றுக்கொள்ளுவதற்காக கூட்டங்களை நடத்துவதும், நோயாளிகளுக்காக பாரத்தோடே ஜெபிப்பதும், பிசாசுகளினால் கட்டப்பட்டவர்கள் விடுதலைபெற காத்திருந்து ஜெபத்தில் போராடுவதும், தேவனுடைய தீர்க்கத்தரிசன வார்த்தைகளை மிகவும் ஆரவாரமாக அறிவிப்பதுமாகத் தொடர்ந்து செய்து கொண்டிருந்தேன்.

என் உடல் குளிரைத் தாங்கமுடியாமல் நடுங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்து சகிக்கக் கூடாத ஒரு நண்பர் ஒரு சிவப்பு கம்பளியை எனக்குக் காணிக்கையாகக் கொடுத்தார். பல இரவுகள் தூக்கமில்லாமல் அவதிப்பட்டிருக்கிறேன். என் உடன் ஊழியர்கள் என் பக்கமே இருந்து எனக்கு உதவி செய்து வந்தார்கள். இக்காலங்களிலெல்லாம் கர்த்தர் என் பரிகாரியாக இருந்தார்.

சில வருடங்களாக வருடத்துக்கு ஒருமுறை வீதம் நான் காய்ச்சல் கண்டு வேதனைப்பட்டேன். குடல் ஜுரத்தினால் இரண்டு மாதங்கள் படுக்கையிலிருந்தேன். இந்நாட்களில் தேவனுடைய ஊழியக் காரர்கள் என்னை கவனித்த விதங்களை நான் மறக்க முடியாது. என் தாய், தந்தை உடன் பிறப்புகளைவிட அதிகமாக சினேகித்து என்னை கவனித்தார்கள். நான் பிழைப்பேன் என்னும் நம்பிக்கை பலருக்கும் இல்லை. ஆனாலும் உபவாசத்தோடும் தேவனிடம் மன்றாடினார்கள்.

தேவன் என்னை அதிசயமான பிரகாரம் குணமாக்கினார். என்னை கவனித்த ஊழியர் பலர் இதுவரை என்னோடிருக்கிறார்கள்.

அடிக்கடி குடற்காய்ச்சல் வந்த காரணத்தால் குடல் மிகவும் பெலவீனமடைந்து உணவை மிகவும் கவனமாகப் புசிக்க வேண்டிய கட்டாயம் உண்டானது. ஒரு சமயத்தில் என் உடலிருந்து இரத்தம் வெளியானது. எனக்கே என் ஆயுளைப் பற்றிய சந்தேகம் வந்தது. இதனால் என்னுடைய மூத்த சகோதரன் வீட்டில் போய் படுத்துக் கொண்டேன். அவர்களும் என்னை அன்புடன் கவனித்தார்கள். ஊழியக் காரர் களும் வந்து கண்ணீரோடே ஜெபித்தார்கள். தேவன் அற்புதமாக சுகமளித்தார்.

1974-ம் ஆண்டு அக்டோபர் 7-ம் தேதி என்னிடம் மனவேறுபாடாக நடந்துகொண்ட ஒரு விசுவாசியின் வீட்டில் எல்லா தேவ ஊழியக்காரர்களுக்குமாக ஒரு விருந்து வைத்தார்கள். நானும் அங்கு உற்சாகமாகச் சென்றேன். உணவருந்திவிட்டு வீடு திரும்பி சற்று தூரம் வந்ததும் நான் நோய்வாய்ப்பட்டேன். உணவில் ஏதாவது நோய் உண்டாக்கும் பொருள் கலந்துவிட்டதோ என்று எண்ணினேன். ஏகதேசம் 40 மைல்கள் ஒரு தேவ ஊழியரின் தோழிலேயே சாய்ந்து பஸ்சில் பிரயாணம் செய்து நாகர்கோவிலையடைந்தேன். சில நாட்கள் படுக்கையிலிருந்து குணமடைந்தேன். "என் தேவனாகிய கர்த்தாவே, உம்மை நோக்கிக் கூப்பிட்டேன், என்னை நீர் குணமாக்கினீர்" சங் 30:2 என்றபடி தேவனை நோக்கி கூப்பிட்டபோதெல்லாம் அவர் என்னைக் குணமாக்கினார்.

ஆபத்து வேளைகளில் அநுகூலமான துணை :

என் வாழ்க்கையில் ஆபத்துக்கள் வராமலில்லை. 5 வயதாயிருக் கும்போதே திண்ணையிலிருந்து விழுந்து இடது கை முடமானேன். தேவனோ என் கையை மறுகையைப் போல சுகமாக்கினார்.

ஒரு மலைப் பிரதேசத்தில் பஸ்ஸில் முன்பக்கத்திலிருந்து பிரயாணம் செய்து கொண்டிருந்தேன். என் கால்வெளியே தொங்கிக்

கொண்டிருந்தது. அந்த பஸ்ஸில் முன் பக்கத்து இருக்கை அப்படிப்பட்டது. ஒரு வளைவான இடம் வந்தது. ஓட்டுனர் திடீரென எதிராக ஒரு பேருந்து வருவதைக்கண்டு தன் பேருந்தை இடது பக்கம் திருப்பினார். அங்கே ஒரு மரத்தில் என் கால் மோதினது. ஆனால் எந்த சேதமும் உண்டாகவில்லை. தேவதூதன் தோன்றி என் கால் மரத்தில் அடித்து ஒடிந்துப்போகாதபடிக் காப்பாற்றினார்.

இன்னொருநாள் இன்னொரு பேருந்தில் பிரயாணம் செய்து கொண்டிருந்தேன். எதிராக வந்த பேருந்திற்கு வழிவிட ஓட்டுநர் பேருந்தை திருப்பினபோது பக்கத்தில் நின்ற மின்சார தூண்மேல் மோதி பேருந்து நின்றது. தூண் முறிந்து மின்சாரக் கம்பிகள் பேருந்தின் மேல் விழுந்தது. என்ன! அற்புதம். அந்த ஓட்டுநர் அதிசயமான எண்ணத்துடன் பேருந்தை பின்னாக ஓட்டி மின்சாரக் கம்பிகளுக்கும் வெளியே எடுத்து நிறுத்தினார். மின்சாரம் பேருந்தில் பாய்ந்து விடாமல் தேவன் காப்பாற்றினார். இதன் இரகசியம் என்னவென்று ஓட்டுநரை எட்டிப் பார்த்தேன். அவர் மாதவன் என்னும் பெயரையுடைய ஒரு கிறிஸ்தவ விசுவாசி என்பது மட்டுமல்ல, "இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி அவர்களை சுத்தீகரிக்கும்" என்ற வேத வசனத்தைத் தொங்கவிட்டு பஸ்ஸை ஓட்டி வந்திருப்பதையும் கண்டேன்

ஒருநாள் இரட்டைச் சக்கர வண்டியொன்றில் பிரயாணம் செய்து ஓர் நற்செய்தி கூட்டத்தில் பிரசங்கிப்பதற்காகச் சென்றுகொண்டிருந்தேன். பாறசாலை என்ற இடத்தில் ஒருவர் பாதையின் குறுக்கே வர, வண்டி அவர் மேல் மோதி வண்டியோடு கீழே விழுந்தேன். காவல்துறை அதிகாரி ஒருவர் ஓடிவந்து என்னைத் தூக்கி எடுத்தார். வண்டி மோதின மனிதனைக் கடிந்து கொண்டு, வண்டியையும் தூக்கித் தந்தார். வண்டியில் கால் மிதிக்கும் இடம் உடைந்திருந்தது. பெட்ரோல் அதிகமாக சிந்திப்போனது. என்கால் புகைப்போக்கியால் சுடப்பட்டிருந்தது. நானோ அதையும் பொருட்படுத்தாமல் மேலும் அந்த

வண்டியில் 6 மைல்கள் பிரயாணம் செய்து இரவு 10 மணிவரை தேவனுடைய செய்தியைப் பிரசங்கித்துவிட்டு அதேவண்டியில் மறுபடி 20 மைல்கள் பிரயாணம் செய்து மாவறவிளை என்னும் இடத்திலுள்ள ஜெப வீட்டில் வந்து இரவு தங்கினேன். காலையில் அதே வண்டியில் மறுபடியும் 10 மைல்கள் பிரயாணம் செய்து நாகர்கோவில் வந்து இளைப்பாறினேன். அதுவரை நான் விழுந்ததையும் அடிபட்டதையும் எவருக்கும் சொல்லவில்லை. என் வலதுகையில் ஒரு சுளுக்கும் இடது காலில் 1 அடி நீளத்துக்கு புகைப்போக்கியினாலுண்டான காயமும் இருந்தது. பலர் இந்த புண் ஆற பல மாதங்கள் ஆகும் என பயப்படுத்தினார்கள். ஆனால் ஒரேமாதத்தில் குணமாகி மறுபடியும் தேவனுடைய செய்திகளைப் பிரசங்கிக்கும்படி இறங்கினேன்.

இவ்விதமாக அநேக இக்கட்டுகளையும் ஆபத்துக்களையும் காணும்படிச் செய்த என்னை என் தேவன் திரும்பவும் உயிர்ப்பித்து திரும்பவும் என்னை பயங்கரமான ஆபத்துகளுக்கும் தப்புவித்தார். என் உடன் ஊழியக்காரனாகிய சாது நேசமணி அவர்கள் காலமான அன்று, அவரது உடலை நல்லடக்கம் செய்துவிட்டு அதே இரட்டைச் சக்கர வண்டியில் வந்து கொண்டிருந்தேன். ஏகதேசம் 20 மைல்கள் பிரயாணம் செய்தபின்பு மைலோடு என்னுமிடத்தில் ஒரு வயதான தாயார்மேல் வண்டிமோதி வண்டியும் நானுமாக கீழே விழுந்தோம். அந்த தாயும் கீழே விழுந்தாலும் அதிகமான சேதம் இல்லை. எனக்கும் வண்டிக்கும் பலத்த சேதம். என்னை பலராகச் சேர்ந்து தூக்கிக்கொண்டு ஒரு நிழலில் படுக்க வைத்தார்கள். சற்று நேரத்துக்குள் சில விசுவாசிகள் கேள்விப்பட்டு என்னைக் கொண்டுபோய் பராமரித்தார்கள். வண்டியைப் பழுது பார்க்கும் இடத்துக்குக் கொண்டு போனார்கள். எதிர்பார்த்ததைவிட விரைவில் குணமடைந்து தேவனுடைய ஊழியத்தில் வேகமாக இறங்கி செயல்பட தேவன் உதவி செய்தார்.

தேவனுடைய பிள்ளைகள் ஆபத்துக் காலங்களில் வெட்கப்பட்டுப்போக தேவன் விடுவதில்லை. தேவன் அநுகூலமான

துணையாயிருக்கிறார். என் ஆபத்து நாட்களில் தேவன் தமது முகத்தை எனக்கு மறைத்ததில்லை. அவரைத் தேடினபோதெல்லாம் என் பக்கத்தில் அவர் இருப்பதை காண்கிறேன். அவர் எனக்கு ஆதரவாகவே இருக்கிறார். ஆபத்துக்கால இரட்சகராக நான் இயேசுவைக் காண்கிறேன்.

பரிசுத்த வேதாகம அறிவை ஊட்டுதல் :

ஊழியக்காரர்கள் அறிவடையவும், தேவனுடைய வல்லமையினால் நிறைந்து ஆத்தும பாரத்துடனே ஊழியம் செய்யவும் அடிக்கடி ஊழியக்காரர்கள் கூட்டங்களை நடத்தும்படி தேவன் கிருபை செய்தார். இதனால் ஊழியர் ஸ்திரமடைந்தார்கள். ஆவிக்குரிய பெலனடைந்தார்கள்.

சபையிலுள்ள சிறுவர்களை வேத அறிவில் வளர்த்தவேண்டும் என்று தேவ ஆவியானவர் பேசினார். ஆனபடியால் சிறுவர்களுக்காக 21 வேதபாட புத்தகங்களை எழுதினேன். ஏழு வகுப்புகள் வீதம் மூன்று வருடங்கள் தொடர்ந்தும், மாறி மாறியும் இப்பாடங்களைக் கற்பிக்க ஆசிரியர்களுக்கான கைநூலாக இப்புத்தகங்கள் உபயோகிக்கப்பட்டு வருகின்றன.

வாலிபர்களுக்கான நற்செய்தி இயக்கம் ஒன்றை தோற்றுவிக்கும்படி கர்த்தர் வழிநடத்தினார்

ஊழியக்காரர்கள் அதிகம் தேவைப்பட்டதால் ஊழியர் பயிற்சி ஒன்று ஆரம்பித்தோம். இதனால் வருடா வருடம் புதிய புதிய ஊழியக்காரர்கள் சபைக்குக் கிடைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

பெந்தெகோஸ்தே வட்டாரத்திலுள்ள தேவ ஊழியர்கள் ஒருவரையொருவர் பகைத்துக்கொண்டும், அற்பமாகப் பேசிக்கொண்டும், ஆவிக்குரிய ஐக்கியமில்லாமலிருப்பதைப் பார்த்து மிகவும் வேதனைப்பட்டேன். இவர்களுக்குள் ஐக்கியத்தை உருவாக்க வேண்டும் என்னும் எண்ணத்தை தேவன் ஒரு பாரமாகவே தந்தார். எனவே

ஊழியக்காரர்களுக்கான கருத்தரங்குகளை வேளாவேளைகளில் நடத்தினேன். அக்கருத்தரங்குகளில் வேதாக உண்மைகளையும் ஊழியக்காரர்களுக்கான உயிர்மீட்சி செய்திகளையும் கற்பிப்பதற்காக கனடா, அமெரிக்கா, நியூசிலாந்து, ஜெர்மனி முதலான தேசங்களிலிருந்து வருகின்ற தேவ ஊழியர்களை அழைத்து நடத்த தேவன் உதவி செய்தார். அதுபோலவே யேகோவா இரட்சணிய சபையாரால் நடத்தப்பட்ட கன்வென்ஷன்களிலும் அயல்நாட்டு தேவ ஊழியக்காரர்கள் வந்து செய்தி கொடுக்கும்படி அவர்களை உபயோகிக்கும்படி தேவன் வழி நடத்தினார்.

ஊழியத்தில் விவாகமானவர்கள் :

நீ பெண்ணை விவாகம் பண்ண வேண்டாம். இவ்விடத்தில் உனக்குக் குமாரரும் குமாரத்திகளும் இருக்கவேண்டாம் என்று எரேமியா 16:2 ன்படி நான் இருக்கும்படி தேவன் என்னோடே பேசினார். முதல் 25 வருடங்களாக விவாகமாகாத ஆண்களும் பெண்களு மாக இந்த சபை ஊழியத்தை மிகவும் சிறப்பாக நடத்தினோம். அதன்பின்பு செப்டம்பர் 26,1973-ம் வருடம் குன்னத்தூர் ஜெப ஆலயத்தில் வைத்து நடைபெற்ற பொது ஆலோசனைச் சங்கத்தில் ஊழியர்களும் விசுவாசி களில் முக்கியமானனவர்களும் சேர்ந்து, தேவனுடைய அழைப்பு இருந்தால், விவாகம் செய்தவர்களையும் ஊழியத்தில் சேர்த்துக் கொள்ளலாம் என்று தீர்மானம் செய்து கொள்ளப்பட்டது. அப்போது மலவிளை சாதுவான தேவநேசன் தன் மனைவியுடன் சபை ஐக்கியத்தி லிருந்தார். பின்பு விவாகமான பலரும் ஊழியர் தொகுதியில் சேர ஆரம்பித்தனர்.

உள்நாட்டு கலகம் :

சில காலம் கழியவே சபைகளில் உள்ள ஊழியக்காரர்கள் சிலர் என்மேல் சில குற்றங்களைச் சாட்டி தலைமை பொறுப்பு என்னைவிட்டுத் தாண்டிபோக வேண்டுமென்று பற்பல முயற்சிகளை எடுத்தார்கள்.

கோளாவிலுள்ள பஞ்சாயத்துக் கோர்ட்டிலும், நெய்யாற்றங்கரையிலுள்ள முனிசீப் கோர்ட்டிலும் எனக்கு எதிராக வழக்குகளைத் தொடுத்தார்கள். பல ஊழியக்காரர்கள் ஒன்று சேர்ந்து ஆலோசனை கூட்டங்களை அமைத்து என்னை புறம்பே தள்ளினார்கள். ஆனால் தேவன் என்னை அதிகமாக நேசித்தார். எனக்கு விரோதமாகக் கூட்டம் கூடினவர்களுக்குள்ளே பிரிவினை உண்டானது.அவர்களைச் சமாதானம் செய்து வைக்கும்படி அவர்கள் என்னிடம் கூடிவந்தார்கள். அவர்களை சமாதானம் பண்ணினபோது அவர்களுக்குள் தலைமையாக வைக்கப்பட்டிருந்தவர் மறுபடியும் என்னோடு வந்து சேர்ந்து கொண்டார். அவர் பின்னால் போனவர்கள் பலர் மறுபடியும் என்னோடு அண்டிக்கொண்டார்கள். மீதியானவர்கள் இன்னொரு நபரை தலைமையாக வைத்துக் கொண்டார்கள். அத்தலைவர் சபைகளை முழுவதுமாக தன்பக்கமாகச் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று வழக்குத் தொடர்ந்து நடத்தினார். ஆனால் சுகவீனப்பட்டு குணமடைந்த அவர் திடீரென காலமானார். அந்த அடக்க ஆராதனையில் நான் போய் சம்மந்தப்பட்டு சிலரை ஆறுதல் படுத்தினேன்.

என்னை நிந்தித்தவன் சத்துரு அல்ல, அப்படியிருந்தால் சகிப்பேன்; எனக்கு விரோதமாய்ப் பெருமை பாராட்டினவன் என் பகைஞன் அல்ல; அப்படியிருந்தால் அவனுக்கு மறைந்திருப்பேன். எனக்குச் சமமான மனுஷனும், என் வழிகாட்டியும் என் தோழனுமாகிய நீயே அவன். சங் 55:12,13.

என் பிராண சிநேகிதனும், நான் நம்பினவனும், என் அப்பம் புசித்தவனுமாகிய மனுஷனும், என்மேல் தன் குதிகாலைத் தூக்கினான். சங் 41:9. ஆனால்

என் சத்துரு என்மேல் ஜெயங்கொள்ளாததினால் நீர் என் மேல் பிரியமாயிருக்கிறீரென்று அறிவேன். சங் 41:11. இவ்வசனங்கள் நிறைவேறின.

வெகு விரைவில் விலகியிருந்த சபைகள் என்னோடு ஒப்புரவாயின. ஆனாலும் இன்னொரு ஊழியர் அந்த வழக்கை தொடர்ந்து நடத்த ஆரம்பித்தார். அந்த ஊழியரைச் சந்தித்து வழக்கை சமாதானமாக முடித்து, சில சபைகளை அவருடைய பொறுப்பில் நடத்தும்படி கொடுத்தேன். சபைகள் வழக்குகளிலிருந்து விலகி சமாதானமடைந்தன.

நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், தீமையோடு எதிர்த்து நிற்க வேண்டாம் ; ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால் அவனுக்கு மறுகன்னத்தையும் திருப்பிக்கொடு. உன்னோடு வழக்காடி உன் வஸ்திரத்தை எடுத்துக்கொள்ளவேண்டுமென்றிருக்கிறவனுக்கு உன் அங்கி யையும் விட்டுவிடு. மத் 5:39,40. என்று இயேசு கூறினார் அல்லவா. அப்படி செய்தேன்.

ஜெபத்தால் மழை பெய்தது :

4 வருடங்கள் 6 மாத காலமாக மழையே இல்லாமல் வறண்டு போயிருந்தது சேலம் மாவட்டத்திலுள்ள மின்னித்தம் பட்டி என்னும் கிராமமும் அதையடுத்துள்ள கிராமங்களும். நமது உடன் ஊழியக்காரனாக இருந்த C.யோசேப்பு இந்த கிராமங்களில் தேவனுடைய வசனத்தைப் பிரசங்கித்து நோயாளிகள் சுகம்பெற ஜெபித்து வருகிறார். ஒருநாள் அக்கிராமத்து தலைவர் நமது யோசேப்பிடம், உங்கள் தேவன் பெரியவரானால் ஒரு குறிப்பிட்ட நாளில் வந்து ஜெபித்து மழை பெய்யப்பண்ணுங்கள். அல்லாவிட்டால் இக்கிராமங்களில் சுவிசேஷ ஊழியம் செய்யக்கூடாது என்றார். இதனால் யோசேப்பு என்னிடம் வந்து இக்காரியத்தைச் சொல்லி தன் கவலையை வெளிப்படுத்தினார். நான் ஜூலை 13–ம் தேதி 1977–ம் வருடம் மழை பெய்யப்பண்ணலாம், அதற்காக 2 நாட்கள் உபவாச ஜெபம் நடத்தும்படி சொல்லி அனுப்பினேன். குறிப்பிட்ட நாளில் நான் சில சகோதரிகளான ஊழியக்காரர்களோடும் சில சகோதரர்களான ஊழியர்களோடும் அவ்வூருக்குச் சென்றேன். அவ்வூரார் நான் நின்று ஜெபிப்பதற்காக

அவர்களுடைய இந்து தெய்வ ஆலயத்தின் முன்பக்கம் மேடை போட்டுக் கொண்டு எங்களை வரவேற்றார்கள். 13 ஜூலை 1977 மாலை 6 மணிக்கு நானும் ஊழியர்களும் மேடையில் ஏறி ஜெபித்தோம். ஒரு சில பாடல்களைப் பாடினோம். பின்பு Iஇராஜ 18:29-46 எலியா தீர்க்கதரிசி ஆகாப் அரசன் காலத்தில் மழைக்காக ஜெபித்து மழை வந்தது என்ற வேதபாகத்தை வாசித்து, பிரசங்கித்தேன். பின்பு அனைவரும் ஜெபித்தோம். கடைசியாக நான் ஜெபித்து ஆசீர்வாதம் கூறி ஜெபக்கூட்டத்தை முடித்தேன். மழையின் எந்தவிதமான தோற்றமும் இல்லை. ஊர் தலைவர் வந்து, ஐயா இன்றிரவுக்குள் மழை வராவிட்டால் அத்தனைபேரும் எழுந்துவந்து வெகுவாகத் துன்பப்படுத்துவார்களே என்றார். நான் இன்று இரவு மழை வரும். பாருங்கள் என்று சொல்லிவிட்டு புசித்து தண்ணீர் குடித்துவிட்டு படுக்கைக்குச் சென்று படுத்தேன். அவ்வளவுதான். ஒரு பேரோசையின் இரைச்சல் கேட்டது. பெருங்காற்று அடித்து பெரும் முழக்கமாக இடி முழங்கினது. பெரும் மழை பெய்தது. தண்ணீர் தெருக்களில் ஆறாக ஓடினது. பல மரங்களும் சில வீட்டுக் கூரைகளும் அடித்துச் செல்லப்பட்டன. கிராமத்தலைவர் வந்து எங்களை வணங்கி, ஐயா, உங்கள் தேவன்தான் தேவன் என்று அறிக்கையிட்டு, இயேசு கிறிஸ்துவை தன் இரட்சகராக ஏற்றுக் கொண்டார் தொடர்ந்து அக்கிராமங்களிலெல்லாம் இயேசுவைப் பிரசங்கித்து மக்கள் நன்மை பெற ஜெபிக்க சுயாதீனமாகச் செல்ல முடிந்தது.

கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்; ஏனென்றால் கேட்கிறவன் எவனும் பெற்றுக் கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான். தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும். மத்தே 7:7,8. என்பதை தேவன் நிறைவேற்றினார்.நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள், நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது.

எலியா என்பவன் நம்மைப்போலப் பாடுள்ள மனுஷனாயிருந்தும், மழை பெய்யாதபடிக்குக் கருத்தாய் ஜெபம்பண்ணினான். அப்பொழுது வானம் மழையைப் பொழிந்தது, பூமி தன் பலனைத் தந்தது. யாக் 5:16-18 அப்படியே நடந்தது.

சாமுவேல் கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினான். அன்றையத்தினமே கர்த்தர் இடிமுழக்கங்களையும் மழையையும் கட்டளையிட்டார். அப்பொழுது ஜனங்களெல்லாரும் கர்த்தருக்கும் சாமுவேலுக்கும் மிகவும் பயந்தார்கள். 1சாமு 12:18. அப்படியே சம்பவித்தது.

ஊழிய யாத்திரை :

சபைகளின் ஐக்கியத்தைப் பலப்படுத்தும்படி 1977 அக்டோபர் 20 ல் இரண்டு பேரூந்துகளில் சபையாரைச் சேர்த்துக்கொண்டு எல்லா சபைகளையும் சந்தித்து ஜெபித்தோம். ஆகாய விமானத்தில் யாத்திரை செய்து ஹைதராபாத் போய் சிலநாட்கள் தங்கி தேவனுடைய ஊழியத்தில் கலந்துகொண்டு ஆகாயவிமானத்தில் கோயம்பத்தூர் வந்து ஈரோடு மாவட்டத்திலுள்ள சபைகளைச் சந்தித்து தேவனுடைய வார்த்தைகளைப் பகிர்ந்துகொண்டேன்.

தகப்பன் இல்லாதபடியால் எங்களால் வளர்க்கப்பட்ட சாமுவேல் என்ற ஒரு வாலிபன் சிங்கப்பூருக்கு அனுப்பப்பட்டு அங்கு வேலை பார்த்து வந்தான். அவனுடைய வாஞ்சையை நிறைவேற்றவும், பல மாதங்களுக்கு முன் தேவன் எனக்குக் கொடுத்த தேவ தரிசனம் நிறைவேறவும் 1982–ம் வருடம் ஏப்ரல் 29–ம் தேதி சிங்கப்பூருக்கும், மலேசியாவுக்கும் போய் 30 நாட்கள் பல வீடுகளிலும், சில ஆலயங்களிலும் சாட்சி கூறி தேவனுடைய வார்த்தைகளைப் பிரசங்கித்தேன். அத்தேசவாசிகள் ஜீவனுள்ள தேவனை அறிந்து கொள்ளும் படி தேவன் அவர்களது ஞானக்கண்களைத் திறக்கும்படி ஜெபித்தேன்.

கடல்வழி கப்பல் பிரயாணம் :

(1960–ம் வருடம் மார்ச் மாதம் ராமேஸ்வரத்திலிருந்து கப்பலில் யாத்திரை செய்து ஸ்ரீலங்காவின் தலைநகரப்பட்டணமாகிய கொழும்பு நகரத்தைச் சேர்ந்து, அங்கிருந்து மாத்தள, ஹப்புத்தள முதலான மலை நாட்டுப் பட்டணங்களிலும் மற்றும் தமிழ் மாகாணத்திலும் சென்றேன். தேவனுடைய கிருபையால் பல இடங்களில் கால்நடையாக நடந்து தோட்டத்தொழிலாளர்களுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கித்தேன். பலருடைய வீடுகளிலும், ஆலயங்களிலும் ஆண்டவருடைய வார்த்தைகளைப் பகிர்ந்தளிக்க தேவன் கிருபை செய்தார். ஒருமாத காலம் மட்டுமே அங்கு இருக்கமுடிந்தது. இந்தியாவிலுள்ள சபைகளையும் கவனிக்க வேண்டியதிருந்தபடியால் அதிகமான நாட்களை அங்கு செலவிட முடியவில்லை. பிரயாணத்தில் ஏற்பட்ட எல்லா கஷ்டங்களிலும் தேவனுடைய கரம் என்னைத் தாங்கி வழி நடத்தினது. என்னோடு பாம்பன்விளை வேதமணி ஊழியரும் இருந்தார். எங்கள் பிரயாணம் அனுகூலமாயிருக்கும்படி தேவன் உதவி செய்தார்.

ஆகாயவிமானம் வழி அயல்நாட்டுப் பிரயபணம் :

ஏப்ரல், மே என்னும் மாதங்களில் சிங்கப்பூரில் பல்வேறு மக்களைச் சந்தித்து தேவனுடைய வார்த்தைகளைப் பகிர்ந்தளித்தேன். **Ang mo kio, Bedok, Clementi, Jurong, Telok, Blanga, Toa Payoh, Wood land** என்னும் எட்டுப்பட்டணங்களிலும் ஆங்காங்கே சிலருடைய வீடுகளில் சுவிசேஷக் கூட்டங்களை நடத்த தேவன் உதவி செய்தார். May 18, 1982 ல் மலேசியாவிலுள்ள Ipoh பட்டணத்துக்குப் போனேன். அங்குள்ள city Hotel ல் நான் தங்கியிருந்தபோது,சில ஆலயங்களில் தேவனுடைய வசனங்களைத் தெளிவாகக் கூறினேன்.May 16, 1982 ல் Jurong ல் உள்ள Bible Prespeterian Church ல் Philip 3:20, 21 –ம் வசனங்களை மையமாக வைத்து பிரசங்கித்து சபைமக்களை இயேசுகிறிஸ்துவின் வருகைக்கு ஆயத்தப்படும்படிக் கேட்டுக்கொண்டேன்.

வேறு பல இடங்களில் "தேவனுடைய அழைப்பு, தாலந்துகளை பிரயோஜனப் படுத்துவது" என்னும் பொருளில் விரிவான வேத ஆராய்ச்சிக் கூட்டங்களை நடத்தினபோது பலர்தங்களை புதுப்பித்து உயிர்ப்பித்துக் கொண்டார்கள்.

Jurongல் உள்ள Japanies Garden ஐயும், பல்வேறு இடங்களிலுள்ள பற்பல விதமான காட்சிகளையும் பார்த்து தேவனுடைய ஆற்புதப் படைப்புகளையும், மனிதருடைய ஞானத்தின் வளர்ச்சியையும் சிந்தித்து தேவனை மகிமைப்படுத்தி ஸ்தோத்திரங்களைச் செலுத்தினேன். எனக்கு எந்தெந்த காட்சிகள் வெறுப்பாகவும் அஞ்ஞானமாகவும் தோன்றினதோ அவைகளை நம்பிக்கொண்டிருக்கின்ற அத்தேசவாசிகள் ஜீவனுள்ள தேவனை அறிந்து கொள்ளும்படி தேவன் அவர்களது ஞானக்கண்களைத் திறக்கும்படி ஜெபித்தேன்.

May 18, 1982ல் மலேசியாவிலுள்ள Ipoh பட்டணத்துக்குப் போனேன். அங்குள்ள City Hotelல் நான் தங்கியிருந்தபோது, Telukansen விலுள்ள நண்பர்கள் வந்து என்னை அவர்கள் தங்கும் இடத்துக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு பல நண்பர்கள் தங்கள் வீடுகளில் ஜெபக்கூட்டங்களை ஒழுங்கு செய்தார்கள். ஒவ்வொரு கூட்டங்களிலும் இயேசு கிறிஸ்துவின் அன்பையும், தேவனுடைய வல்லமையையும் பற்றி பிரசங்கித்தேன். நோயாளிகளும் மற்றும் பலரும் ஜெபிக்கக் கேட்டுக்கொண்டு முன்னாக வந்தார்கள். ஒவ்வொருவர் மேலும் தேவனுடைய அற்புத வல்லமை இறங்கி நன்மையானவைகளை நடப்பித்தது. மலேசியாவிலுள்ள Perak State ல் உள்ள பல கிராமங்களில் தேவனுடைய நாமத்தை உயர்த்தும்படி தேவன் உதவி செய்தார்.

Jelukansen ல் Estate பகுதிகளில் உள்ள தமிழர்கள் காட்டின அன்புக்காக தேவனை அதிகமாக துதிக்கிறேன். அங்குள்ள லுத்தரன் சபையாரும் தங்கள் ஆலயத்தில் தேவனுடைய வார்த்தைகளைப் பகிர்ந்து கொள்ளும்படிக் கேட்டுக்கொண்டார்கள். தேவனுடைய வார்த்தைகளைக் கேட்டபோது பலர் பரிசுத்த ஆவியானவரால் சந்திக்கபட்டார்கள்.

இங்குள்ள ஒரு Hostel ல் 25 மாணவர்கள் இருந்தார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் மூளை கோளாறுடனே மனநோயாளிகளாக இருந்தார்கள். அப்படிப்பட்டவர்களைப் பாதுகாத்து அவர்களுக்குப்பரிகாரம் செய்யும்படி வைக்கப்பட்டி ருந்தார்கள். அவர்களுக்காக அங்கு அழைக்கப்பட்டேன். தேவனுடைய அற்புத வல்லமை அவர்கள் ஒவ்வொருவரையும் குணமாக்கும்படி ஜெபித்தேன். இவர்களுக்கு இரங்குகிறவர்கள் பாக்கியவான்கள்.

கானடாவிலுள்ள வான்கூவர் மாகாணத்திலுள்ள ஒருவருக்கு நான் செய்யும் ஊழியத்துக்காக ஜெபிக்கும்படி ஒருநாள் நடுஇரவில் கடிதம் எழுதும்படி கர்த்தருடைய ஆவியானவர் ஏவினார். அவரை நான் பார்த்ததில்லை. அவரும் என்னைப் பார்த்ததில்லை. ஒரு சகோதரி அவருடைய மேல் விலாசத்தை தந்து ஜெபிக்கும்படி சொல்லியிருந்தார்கள். அவருக்கு எழுதி அனுப்பின லட்டருக்குப் பதிலாக ஒரு கடிதம் வந்தது. அதில் "நீங்கள் எனக்கு கடிதம் எழுதின அதே நேரத்தில் பரிசுத்த ஆவியானவர் உங்களை எனக்குக் காண்பித்து உங்கள் தேவைகளுக் காக ஜெபிக்கும்படி ஏவினார். நான் ஜெபிக்கிறேன். 15 பேரை தேவனுடைய ஊழியத்துக்காக எடுத்து பயிற்சி கொடுங்கள்" என்று எழுதியிருந்தது. இதற்காக தேவனைத்துதித்து நன்றி செலுத்தினேன்.

பரிசுத்தாவியானவரின் ஏவுதலினால் இந்த அன்பு சகோதரன் என்னை கானடாவுக்கு அழைத்தார். ஒரு விருந்தினராக 1991 நவம்பர் 3-ம் தேதி புறப்பட்டு நவம்பர் 5-ம் தேதி திருவனந்தபுரம், பாங்களூர், சென்னை, சிங்கப்பூர், ஹாங்காங் வழியாக ஆகாய விமானத்தில் கானடாவிலுள்ள வான்கூவரையடைந்தேன். அங்கே என்னை அழைத்த நண்பர் தன் வீட்டில் தங்கவைத்தார். பலர் அவருடைய வீட்டுக்கு அழைக்கப்பட்டார்கள், பல வீடுகளில் ஜெபக்கூட்டங்கள் ஆயத்தமாக்கப்பட்டன. ஷூரெ என்ற இடத்தில் தங்கியிருந்து வீடுகளிலும் ஆலயங்களிலும் என்னுடைய சாட்சியுடன் தேவனுடைய வார்த்தைகளைக்கூறி பலருக்காக ஜெபித்தேன். அங்குள்ள

ஒரு ஆலயத்தில் சென்றிருந்தபோது அங்கு வந்திருந்த E.Cannistrace என்ற தீர்க்கத்தரிசியும், மற்றும் பல போதகர்களும் ஒருவர் பின் ஒருவராக என் இருக்கையில் வந்து என்மேல் தங்கள் கைகளை வைத்து, "கடந்த கால என் சம்பவங்களையும், புதிய தேவனுடைய வாக்குத்தத்தங்களையும் தீர்க்கத்தரிசனமாகச் சொன்னார்கள். Taiwan, Mexico தேசங்களில் ஊழியம் செய்து கொண்டிருந்த சில மிஷனறிமாரையும் சந்திக்கவும் அவ்விடங்களின் ஊழியங்களைப்பற்றி அறிந்து கொள்ளும் வாய்ப்பும் கிடைத்தது.

ஒரு நண்பர் கானடாவின் மேற்குப் பகுதியான TORONTO வுக்கு வரும்படி அழைப்பும், பிரயாணத்துக்கான விமான டிக்கட்டும் நான் ஷூரெயிலிருக்கும்போது அனுப்பிக்கொடுத்தார். அதை ஏற்றுக்கொண்டு 3000 மைல் ஆகாய விமானப்பிரயாணம் செய்து அங்கு சென்றேன். டிசம்பர் மாதமாக இருந்தபடியால் அங்குள்ள குளிரை என் உடல் தாங்குமா என SURREY யிலுள்ள நண்பர்கள் சந்தேகப்பட்டு அதற்கான கம்பிளி ஆடைகளைத் தந்து அனுப்பினார்கள். எனக்காக ஆகாய விமான பயணியர் வெளிவரும் பாதையில் காத்துக்கொண்டிருந்த நண்பர் Rev. HURST என்னை அவருடைய காரில் 250 மைல் தூரம் அழைத்துச் சென்று KINGSTON விலுள்ள அவருடைய வீட்டில் தங்கும்படி செய்தார்.

மறுபடியும் 500 மைல் காரில் பிரயாணம் செய்து பல இடங்களைச் சந்தித்தேன். அங்குள்ள ஒரு வேதகலாசாலையில் ஒருநாள் தங்கி அங்கு நடந்த கூட்டங்களில் சம்மந்தப்பட்ட பின்பு மறுநாள் பிரயாணம் ஆரம்பித்தோம். பென்சில்வானியாவிலுள்ள லீஸ்பர்ட் என்ற இடத்தில் பாஸ்டர்வலோரி மிக அன்புடன் உபசரித்தார்கள். அங்கு வெல்லஸ்லியிலுள்ள ஒரு ஹோட்டல் அறையில் தங்கினேன். 1991 டிசம்பர் 1-ம் தேதி ஸ்போர்ட் சபையில் என் அனுபவசாட்சியையும் தேவனுடைய செய்தியையும் கொடுத்தேன். சபையில் வந்திருந்த மக்கள் புத்துயிரடைந்து என்னை அன்புடன் கைகுலுக்கி தங்கள் சந்தோஷத்தையும் அன்பையும் தெரியப்படுத்தினார்கள்.

1991 டிசம்பர் 2–ம் தேதி அமெரிக்க ஐக்கிய மாகாணத்திலுள்ள நியூயார்க் நகரையடைந்தேன். இங்கு நமது குமரிமாவட்டத்திலுள்ள பாஸ்டர் ஐசக், மற்றும் கேரளா பாஸ்டர் தாமஸ், International Pentecost பாஸ்டர் மற்றும் பல விசுவாசிகளைச் சந்தித்தேன். நியூயார்க்கிலுள்ள போனக்ஸ் என்ற இடத்தில் பாஸ்டர் ஐசக் என்பவர் வீட்டில் இரண்டு நாட்கள் தங்கி அங்கு வந்திருந்தவர்களுக்கும் தேவனுடைய வார்த்தைகளைச் சொல்லி, பல வீடுகளைச் சந்தித்து ஜெபித்தேன்.

பின்பு Waverly க்குப் போய் Hebron Bible College ல் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் மற்றும் கூடி வந்த பலருக்கும் தேவன் என் வாழ்வில் செய்த பல அற்புதங்களை கூறினேன். கூடிவந்திருந்த அத்தனைபேரும் மகிழ்ந்தார்கள். அங்குள்ள Zion Fellowship பாஸ்டர் Bailey தமது வீட்டுக்கு அழைத்து அன்புடன் வாழ்த்தினார்.

1991 டிசம்பர் 6–ம் தேதி மறுபடியும் கானடாவிலுள்ள Kingston நகர்வந்து சேர்ந்தேன். இந்த பிரயாணம் முழுவதையும் காரில் என்னைக் கொண்டு சென்று பல வீடுகளிலும் பல ஆலயங்களிலும் நான் என் அனுபவ சாட்சியுடன் தேவனுடைய செய்தியைக் கொடுக்கும்படி என்னை உபயோகித்த Rev.Hurst க்கு நான் நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

1991 டிசம்பர் 7–ம் தேதி Kingston லிலுள்ள Kingdom Seed சபையில் என் அனுபவ சாட்சியைப் பகிர்ந்தளித்தபோது பரிசுத்த ஆவியானவரின் ஆசீர்வாதம் கூட்டத்தில் அபரிமிதமாகக் காணப்பட்டது. மறுநாள் இங்குள்ள இன்னொரு ஆலயத்தில் நடந்த முழுஇரவு ஜெபத்திலும் பங்கெடுத்தேன்.

1991 டிசம்பர் 8–ம் தேதி Ontario வில் 400 தமிழ் மக்கள் மத்தியில் நடந்த கிறிஸ்மஸ் விழாவில் தேவனுடைய செய்தி கொடுக்கும்படி

அழைக்கப்பட்டேன். கிழக்கிலுள்ள நட்சத்திரம் மேற்கே வந்து இயேசுவை சாஸ்திரிகளுக்கு காண்பித்தது. அதுபோல கிழக்கத்திய தேசத்தாராகிய நீங்கள் இந்த மேற்கத்திய நாட்டிலிருக்கின்ற மக்களுக்கு நட்சத்திரமாக இருந்து இயேசுவை வெளிப்படுத்திக் காண்பிக்க வேண்டும். என்று டிசம்பர் 15–ம் தேதி பிரசங்கித்தேன்.

மறுபடியும் Kingdom Seeds சபையில் "கர்மேல்" என்னும் தலைப்பில் பிரசங்கித்தேன். 1991 டிசம்பர் 9–ம் தேதி Winsdor லுள்ள ஜெபாலயத்தில் தேவ செய்தி கொடுத்தேன். இங்கு நோயாளிகள் குணமடையவும், பலவித கஷ்டங்களிலகப்பட்டிருந்தவர்கள் விடுதலை பெறவும் ஜெபித்தேன். டிசம்பர் 10–ம் தேதி Dash Wood சென்று அங்கு Jim என்பவருடைய வீட்டில் நடந்த ஆராதனையில் தேவ செய்தி கொடுத்தேன். இங்கு 2 நாட்கள் தங்கினேன். டிசம்பர் 13–ம் தேதி மறுபடியும் Kingston சென்று இளைப்பாறினேன். 14–ம் தேதி TORONTO வில் சென்று தேவனுடைய வசனங்களை எடுத்துக்கூறினேன். பாஸ்டர் பீட்டர் வீட்டில் தங்கும்படி இடம் கொடுத்தார்கள். 15–ம் தேதி Larg Branch ல் உள்ள Rev.Peter சபையில் தமிழில் பிரசங்கித்தேன். ஸ்ரீலங்காவிலிருந்து வந்திருந்த Bro. பால சந்திரன் ஆங்கிலத்தில் எடுத்துக் கூறினார்கள். 16–ம் தேதி முழுவதும் Dr.Lyzander வீட்டில் இளைப்பாறினேன். 17–ம் தேதி பாஸ்டர் பீட்டர் இங்கு வந்து என்னை அழைத்துக்கொண்டு Ontario விலுள்ள canadian Air Port ல் Surrey க்குப் போகும்படி வழியனுப்பி வைத்துவிட்டுப் போனார்கள்.

17–ம் தேதி மாலை 5.45 க்கு புறப்பட்டு இரவு 8 மணிக்கு Vancover air port போய்ச் சேர்ந்தேன். அங்கு வாசலில் Bro.Benny என்னை வரவேற்று தமது வீட்டுக்கு மறுபடியும் அழைத்துச் சென்றார்கள். Ontario வின் குளிர் என்னைச் சேதப்படுத்தவில்லை என்றும், உணவு எவ்வித நோய்களையும் உண்டுபண்ணவில்லை என்பதையும் கண்ட விசுவாசிகள் ஆச்சரியப்பட்டு தேவனை ஸ்தோத்தரித்தார்கள்.

1991 டிசம்பர் 18 முதல் 1992 ஜனவரி 5–ம் தேதி வரை Surrey யிலும் அதன் பக்கத்து நகரங்களிலும் வீடுகளிலும் ஆலயத் திலும் ஜெபக்கூட்டங்களிலும் ஆராதனைகளிலும் பங்கெடுத்தேன்.

டிசம்பர் 31–ம் தேதி Van Couver லுள்ள Auditoriem காட்சியில் ANTRATICA என்னும் பூமியின் வடதுருவத்தைப் பார்த்தேன். அது பல நூறு அடி ஆழம் பனிக்கட்டியாகவே இருக்கிறது. இங்கு நீர் நிலைகளில் ஒருவிதப்பறவைகள் வாழுகின்றன. மனிதர்கள் வேட்டையாட இங்கே செல்லுகிறார்கள். இதைப்பார்த்தபோது தேவனுடைய அற்புதமான சிருஷ்டிகளை நினைத்து தேவனை ஸ்தோத்தரித்தேன்.வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது. ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியைகளை அறிவிக்கிறது. சங் 91:1.

1991 டிசம்பர் 30–ம் தேதி Pastor Kirk Duncan தமது வீட்டில் என்னை அழைத்து விருந்து கொடுத்து சந்தோஷப் படுத்தினார்கள். 1992 ஜனவரி 2–ம் தேதி DORIS FORGE தங்கள் வீட்டில் அழைத்து சிறப்பான விருந்தளித்து பல நல்ல வேத புத்தகங்களை நன்கொடையாகத் தந்தார்கள்.

1992 ஜனவரி 3–ம் தேதி Bro.Benni & Grace தங்கள் வீட்டில் பல பாஸ்டர்களையும் விசுவாசிகளையும் அழைத்து பெரிய விருந்து செய்தார்கள். வந்திருந்த ஒவ்வொருவரும் என்னை வாழ்த்தி ஆசீர்வதித்துச் சென்றார்கள்.

1992 ஜனவரி 4–ம் தேதி COBB என்னும் தாயார் என்னை அழைத்து விருந்து கொடுத்து ஆசீர்வதித்தார்கள்.

இந்த கானடா, அமெரிக்க நாட்டு சந்திப்பு எனக்கு மிகவும் ஆவிக்குரிய ஆசீர்வாதமாக இருந்தது. சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும், கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையும் குறைவுபடாது என்று சொல்லப்பட்டிருக்கும் தேவனுடைய வாக்கின்படியே எவ்வித நன்மைகளும் குறைவுபடாமல் தேவன் என்னை

நடத்தினார். நான் அறியாததும் கண்டிராததுமான ஜனங்கள் என்மேல் எதைக் கண்டு அன்பு பாராட்டினார்களோ எனக்குப் புரியவில்லை. ஒவ்வொருவரும் என்மேல் அன்பு பாராட்டும்படி ஒவ்வொருவரையும் பரிசுத்த ஆவியானவர் ஆட்கொண்டிருந்ததைக் கண்டேன். உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி, உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார். உன்பாதம் கல்லில் இடறாதபடிக்கு அவர்கள் உன்னைத் தங்கள் கைகளில் ஏந்திக்கொண்டு போவார்கள் என்ற வேதவசனத்தின்படி தேவன் என்னை இக்குளிர் நாட்டில் குளிர் காலத்தில் காத்து வழிநடத்தினார். தேவனுடைய அளவில்லாத அன்பும் கிருபையும் என்மேல் இருந்தது. கர்த்தர் எனக்கு மிகவும் நல்லவராக இருந்தார்.

பிரசங்கிக்கிறவரிடம் இலக்கணப்பிழை, உச்சரிப்பு பிழை முதலான பிழைகளை கவனிப்பவர்களாக நான் அவர்களைக் காணவில்லை. சொல்லப்படுபவைகளில் நல்ல கருத்துக்கள் இருக்கின்றன. வா என்று கவனித்து நல்லவைகளை உறிஞ்சுக்குடித்து தங்கள் பெலனையும் சிந்தைகளையும் புதுப்பித்துக்கொள்ளுகிறவர்களாகவே நான் அவர்களைக் கண்டேன். எல்லாம் சுத்த தேவகிருபையே.

வெற்றியுடன் நாடு திரும்புதல் :

1992 ஜனவரி 5-ம் தேதி அமெரிக்கா, கானடா சுற்றுலா ஊழியத்தை முடித்துவிட்டு அன்று பகல் 11.30 மணிக்கு இந்தியாவுக்குத் திரும்பினேன். சகோதரன் பென்னி, கிறேஸ் ஸ்டூடன்பர்க் என்னை வழியனுப்ப வான்கூவர் ஆகாய விமான தளம் மட்டும் வந்தார்கள். அங்கே சுவிசேஷகர் மாக்ஸ் சோல்பிரக்கன் அவர்கள் என்னைக் கண்டு ஓடிவந்து அன்பினால் என்னை கட்டி அணைத்துக்கொண்டு, 1960-ம் வருடம் நான் நாகர்கோவிலில் அவர்களுக்கு மா பெரும் கூட்டம் ஒழுங்கு செய்து கொடுத்ததை எடுத்துக் கூறி சந்தோஷப்பட்டார்கள். பிற்பகல் 2.30 க்கு ஆகாய விமானம் கிளம்பினது. விமானம் கொறியாவில் இறங்கினது. 25 நிமிடங்களில் புறப்பட்டு ஹாங்ஹாங்

ஆகாய விமான நிலையத்தில் தரை இறங்கினது. இங்கு ஒரு இரவு முழுவதும் செலவிட்டேன். மறுநாள் மாலை 4.30 மணிக்கு Cathy Pacific Air line ல் பிரயாணம் புறப்பட்டு சிங்கப்பூர் விமான நிலையத்தையடைந்து அங்கும் விமானத்திலிருந்து இறங்கி பல்வேறு காட்சிகளைப் பார்த்து தேவனைத்துதித்தேன். பின்பு AIR INDIA விமானத்தில் இரவு 9.45 க்கு ,புறப்பட்டு 1.30 க்கு சென்னை விமான நிலயத்துக்கு வந்து சேர்ந்தேன். அங்கே என்னுடைய வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்த ஊழியர்களான தனராஜ், சகோதரி சரோஜா, சகோதரி ஞானம்மாள் என்பவர்களைக்கண்டு, சொந்த தேசம் வந்து சேர்ந்த மகிழ்சியில் தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்தினேன். அன்று இரவு மீதியான சமயம் முழுவதிலும் சென்னை விமான நிலையத்தில் செலவழித்து விட்டு மறுநாள் காலை ஜனவரி 8, 1992–ல் 7.20 மணிக்கு ஆகாய விமானத்தில் ஏறி 8.30 மணிக்கு திருவனந்தபுரம் வந்து சேர்ந்தேன். இந்த நீண்ட பிரயாணத்தில் என் தேவன் என்னோடிருந்து, நான் தனிமையாகப் பிரயாணம் செய்வதுபோல தோன்றாமல் இருக்கும்படி தேவதூதர்களின் பாதுகாப்புடனே பிரயாணம் செய்து வந்திருப்பதை உணர்ந்தேன். இது என் ஆகாயவிமானப் பிரயாணத்தில் முதலாவது நான் தனியாகப் பிரயாணம் செய்த நீண்டப்பிரயாணம். நவம்பர் 4-ம் தேதி 1991–ல் ஆரம்பித்து ஜனவரி 8, 1992 வரையுள்ள எல்லா நாட்களிலும் நான் அனுபவித்த தேவனுடைய அற்புதமான வழி நடத்துதல்களை எண்ணி என்றென்றும் என் தேவனை நான் துதிக்கிறேன். திருவனந்தபுரம் ஆகாயவிமான நிலையத்தில் என்னை எதிர்ப்பார்த்துக் காத்துக் கொண்டிருந்த பாஸ்டர் M. வேததாஸ், பாஸ்டர் T.ராய் ஜெப சிங், மருமகன் R. ஜாண்சாமுவேல் என்பவர்கள் என்னை வரவேற்று, அவர்களுடனே நாகர்கோவிலுக்கு காரில் பிரயாணம் பண்ணினேன். நாகர்கோவிலையடையுமுன்னே, திட்டங்கனாவிளையில் இருந்த பாஸ்டர் யேசுபாதம் விபத்து எற்பட்டு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு விடுதலையடைந்து ஜெபவீட்டிலிருப்பதை அறிந்து அவரை போய் பார்த்து, நலம் விசாரித்து ஜெபித்துவிட்டு

மறுபடி புறப்பட்டு 12.15 மணிக்கு நாகர்கோவில் யேகோவா இரட்சணிய சபை ஜெபாலயத்துக்கு வந்து சேர்ந்தேன். அங்கு திரளாகக் கூடியிருந்த உடன் ஊழியர்களான சகோதர சகோதரிகளோடும், சபைமக்களோடும் சேர்ந்து தேவனுக்கு நன்றி செலுத்தி ஸ்தோத்திர ஆராதனை செய்தோம். பின்பு அனைவருக்கு நன்றி கூறி இளைப்பாறினேன். இவ்விதமாக ஒரு நீண்ட பிரயாணம் செய்து மேற்கத்திய நாடுகளுக்குப் போய்வர காரணமாயிருந்த ஸிஸ்டர் ஜீன் கிறிஸ்டன்ஸன் அவர்களுக்கு நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

விசாலமான தேவ ஊழியம் :-

கிறிஸ்மஸ் விடுமுறைக்குப்பின்பு 1992 ஜனவரி 9–ம் தேதி மறுபடியும் வேதகலாசாலையைத் திறந்தோம். பொதுவாக ஏழைகளுக்குச் சேவை செய்ய எனக்கு அதிகம் ஆர்வம் உண்டு. 1992 ஜனவரி 26-ம் தேதி டாக்டர் லைசாண்டர் குலசேகரத்திலுள்ள தன்னுடைய வீட்டில் ஏழைச்சிறுவர் இல்லம் ஆரம்பித்து நடத்தும்படிக் கேட்டுக் கொண்டார்கள். பாஸ்டர் லேவியை அதற்கு கவனிப்பாளராக வைத்து சிலகாலம் நடத்த தேவன் உதவிசெய்தார். தேவன் சொப்பனங்களி னாலும், தரிசனங்களினாலும், தீர்க்கத்தரிசன வார்த்தைகளினாலும் என்னோடு பேசி வழி நடத்திக்கொண்டி ருக்கிறார். 1992 ஜனவரி 29–ம் தேதி இந்த வருட விசாலமான ஊழியத்தில் நான் சந்தோஷப்படப்போவதாக தேவன் காண்பித்தார். 1992 பெப்ரவரி 10–ம் தேதி பவானி சாகரில் புதிதாக ஜெபாலயம் கட்டும்படி அஸ்திபார ஆராதனை நடத்தி அஸ்திபாரக்கல் வைத்தேன். 1992 பெப்ரவரி 14 ல் அனந்தன் நகரில் Promised Land ல் யேகோவா நிசி வேதகலாசாலையின் பெரிய அளவு கட்டடம் கட்ட இடம் சரி பார்த்து, 28–ம் தேதி அஸ்திபாரம் போட்டு வேலையை ஆரம்பித்து வைத்தேன். 1992 மார்ச் 4–ம் தேதி காலை 9 மணிக்கு சென்னை, பெருங்களத்தூர் கிராமத்தில் ஜெபாலயம் கட்டும்படி அஸ்திபாரக் கல்வைத்து வேலை ஆரம்பித்து வைத்தேன். மார்ச் 27–ம் தேதி யேகோவா நிசி வேதகலா சாலைக்காக அதோடு சேர்ந்திருந்த

85.5 செண்ட் நிலம் வாங்கப்பட்டது. இதே வருடம் ஜூன் 8-ம் தேதி கணபதிபுரத்தில் ஏழைமக்களுக்கு இலவசமாக தையல் கலை கற்றுக் கொடுக்கும்படி ஒரு தையல் பயிற்சிசாலை ஆரம்பித்தேன். ஜூலை 20-ம் தேதி மைலோடு கிராமத்தில் புதிதாக கட்டப்பட்டிருந்த ஜெபாலயத்தை திறந்து வைத்து பிரதிஷ்டை பண்ண தேவன் உதவி செய்தார். ஜூலை 22ல் மார்த்தாண்டத்தில் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து அதில் சபை நடத்தும் ஊழியம் ஆரம்பித்தோம். ஆகஸ்ட் 29ல் சின்னாளப்பட்டி ஜெபாலயம் பிரதிஷ்டை பண்ணப்பட்டது. செப்டம்பர் 20-ம் தேதி மாலை 5.30 மணிக்கு ஈரோடு மாவட்டத்திலுள்ள மில்மேடு கிராமத்தில் புதிதாக ஒரு ஷெட் கட்டப்பட்டு, அதை தேவாராதனை நடக்கும் இடமாயிருக்கும்படி பிரதிஷ்டை செய்தேன். செப்டம்பர் 23-ம் தேதி புத்தளம் சபை ஊழியத்துக்காக ஒரு சைக்கிள் வாங்க தேவன் உதவி செய்தார். அக்டோபர் 2-ம் தேதி சிறுவர்களுக்கான ஒரு கன்வென்ஷன் நடந்தது. அதில் 600 க்கதிகமான சிறுவர்கள் பங்கெடுத்தார்கள். அதில் விசேஷ செய்தி கொடுத்து பிள்ளைகளை கிறிஸ்துவின் மேல் விசுவாசம் வைக்கும்படி கற்பிக்க தேவன் உதவி புரிந்தார். அக்டோபர் 12-ம் தேதி தென் ஆற்காடு மாவட்டத்தில் சுப்ரமணியபுரத்தில் ஜெபாலயம் கட்டும்படி அஸ்திபார ஆராதனை நடத்த தேவன் வழி நடத்தினார். நவம்பர் 6-ம் தேதி பெருங்களத்தூரில் கட்டப்பட்டுவந்த ஜெபாலய வேலை முடிந்து அதை திறந்து பிரதிஷ்டை பண்ண தேவன் உதவி செய்தார். 1992-ம் வருடம் முழுவதும் பற்பல கிராமங்களில் சென்று பிரசங்கித்தேன். இவ்வருட ஊழியத்தில் 84 பேர் புதிதாக தங்களை இயேசுகிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுத்து ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார்கள். தேவனுடைய கிருபையும் நன்மையும் ஏராளமாக இருந்தது.

இவ்வருடம் நவம்பர் மாதம் அதிகமான மழை பெய்தது. இதனால் குமரி மாவட்டத்திலுள்ள அணைகள் நிரம்பி வழிந்தன. நதிகள் பெருக்கெடுத்தபடியால், நதிக்கரைகள் உடைந்து பல கிராமங்கள் தண்ணீர் பெருக்கினால் பாதிக்கப்பட்டன. மக்களில் பலர் மாண்டனர்.

பல வீடுகள் இடிந்து விழுந்தன. ஆனாலும் மழைக்குப் பின்பு பலர் புதிய வீடுகளையும் புதிய பொருள்களையும் பெற்று மறுபடியும் வாழ்க்கையை ஆரம்பித்தார்கள்.

1993–ம் வருடமும் தேவன் அற்புதமும் அதிசயமானவராக இருந்து என்னை வழி நடத்தினார். இவ்வருடம் ஏப்ரல் மே மாதங்களில் விடுமுறை வேதாகம பள்ளிகள் சில கிராமங்களில் ஆரம்பித்து வைத்தேன். இவ்வருடம் ஏப்ரல் **2**–ம் தேதி யேகோவா நிசி வேதகலாசாலையில் பதினொரு மாணவர்கள் தங்கள் படிப்பையும் பயிற்சியையும் வெற்றிகரமாக முடித்து பட்டமளிப்பைப் பெற்றுக்கொண்டார்கள். ஜூன் **16**–ம் தேதி குமரி மாவட்டத்திலுள்ள கடுவாக்குழி கிராமத்தில் ஜெபாலயம் கட்டும்படி அஸ்திபாரமிட்டேன். இதைக் கட்டி எழுப்புவதில் மனிதராலுண்டான தடைகளை அற்புதமாக தேவன் மாற்றினார். பவானிசாகரில் கட்டப்பட்டுவந்த ஜெபாலயம் செப்டம்பர் **11**–ம் தேதி பிரதிஷ்டை செய்யப்பட்டது. அக்டோபர் **2**–ம் தேதி பால்குளம் ஜெபாலயத்தில் நடந்த சிறுவர் கன்வென்ஷனில் **400** க்கதிகமான சிறுவர்களும் **100** க்கதிகமான ஊழியர்களும் பங்கெடுத்தார்கள். பரிசுத்தாவியானவரால் சிறுவர்கள் நிரப்பப்பட்டது பெரியவர்களான ஆசிரியர்களைப் பரவசப்படுத்தினது. அக்டோபர் 19–ம் தேதி யேகோவா நிசி வேதகலாசாலையின் பெரிய கட்டடம் **SOLID ROCK BLOCK** என்னும் பெயருடனே பிரதிஷ்டை பண்ணப்பட்டது. மாலை **5** மணிக்கு கானடாவிலிருந்து வந்திருந்த **PASTOR KIRK DUNCAN, SISTER.FRANKIE, BROTHER BENNIE, SISTER GRACE STEUNEN BERG** என்பவர்கள் திறந்துவைத்து பிரதிஷ்டை செய்தார்கள். விசுவாசிகளும் ஊழியர்களுமாக **1500** க்கதிகமானவர்கள் இந்த பிரதிஷ்டை ஆராதனையில் வந்திருந்து ஆசீர்வதித்தார்கள். மேலும் இனஜன பெந்துக்கள், உற்றார் உறவினர், நண்பர்கள் ஏராளமானவர்கள் வந்து தேவனுடைய செய்தியைக் கேட்டு ஆனந்த சந்தோஷமடைந்தார்கள். வானமும் மழையைப் பொழிந்து தனது மகிழ்ச்சியைக் காண்பித்தது. அத்தனைபேரும் விருந்துண்டு தேவனைத்

அளித்தார்கள். பலர் தங்கள் நன்கொடைப் பொருள்களைப் பரிசாகத் தந்து என்னை வாழ்த்தி ஆசீர்வதித்துச் சென்றார்கள். கட்டட வேலையாட்களுக்கும் யேகோவா இரட்சணிய சபையிலுள்ள எல்லா ஆண்கள் பெண்களான தேவ ஊழியர்களுக்கும், கானடா நண்பர்களுக்கும் பரிசுகளைக் கொடுத்து அவர்களைக் கௌரவித்தேன்.

இக்காலங்களில் SISTER JEAN CHRISTENSON இங்கு PROMISED LAND ல் ஒரு வீடு கட்டி அதில் வசித்து வருகிறார்கள். MOTHER C.SWARNAPACKIAM மும் அவர்களோடே தங்கியிருந்தார்கள். யேகோவா நிசி வேத கலாசாலை ஆரம்பித்து நடத்துவதற்கு இவர்கள் ஆலோசனைகள் முக்கியமானவைகள் மட்டுமல்ல, இதற்காக அவர்கள் தேவனை நோக்கி ஜெபித்த ஜெபம் மிகவும் வல்லமையுடையதாக இருந்தது. இவர்களுடைய ஜெபத்தின் பலனாகவே இந்த இடத்தை வாங்கவும் கட்டடங்களைக் கட்டவும் தேவையான எல்லாம் கிடைத்தன. தேவன் என்னிடம் அன்பு கூர்ந்தபடியால் எல்லாம் நன்மையாகவே நடைபெறும்படி செய்தார்.

வேதகலாசாலையின் மாணவர்கள் ஆத்துமாதாய ஊழியத்தில் சிறப்பாயிருக்கவேண்டும் என்பதற்காக INDIA CAMPUS CRUSADE IN CHRISTஐ அணுகி அவர்களை அழைத்து வந்து பயிற்சி கொடுத்து வந்தேன்.

பெந்தெகோஸ்தே தேவ ஊழியர்களின் மத்தியிலுள்ள பொறாமை, விரோதம், வைராக்கியம், அவமரியாதை, புறங்கூறுதல், முதலானவை களை மாற்றவேண்டும். ஐக்கியத்தை உருவாக்க வேண்டும் என்னும் எண்ணம் எனக்கு உண்டானபடியால், (பெந்தெகோஸ்தே) தேவ ஊழியர் ஐக்கியம் என்ற அமைப்பை ஆரம்பித்தோம். பலர் இதில் சோர்ந்துபோனாலும், இடைவிடாது இதை நடத்திக்கொண்டி ருக்கும்படி தேவ ஆவியானவர் என்னை பெலப்படுத்தினார். அது சம்மந்தமாக இவ்வருடம் ஆறு தடவை கள் தேவ ஊழியர் கூட்டங்களை நடத்தும்படி தேவன் உதவிசெய்தார். பெந்தெகொஸ்தே சபையார் பாகுபாடில்லாமல் ஐக்கியப்பட்டு கூடி வருவதை தேவன் விரும்புவதாகக் காண்கிறேன். இதில்

I.P.C, F.G.P., A.G, C.G, J.S.C, மற்றும் 30 – துக்கதிகமான பெயருடைய சபைகள் ஐக்கியம் கொண்டு வருகின்றது.

1994–ம் வருடம் ஜனவரி மாதம் முதல் தொடர்ந்து சுவிசேஷகர்கள் பெரிய அளவில் சுவிசேஷ ஊழியம் செய்வதற்காக ஆயத்த வேலைகளைச் செய்வது என திட்டம் செய்து கொண்டேன். ஒவ்வொரு வருடமும் பல கூட்டங்களை பல சுவிசேஷக ஊழியர்களுக்காக ஆயத்தம் செய்து கொடுக்க தேவன் உதவி செய்தார். பாண்டிச்சேரியில் சபை ஆரம்பிக்க வேண்டும் என்னும் பாரம் உண்டானது. ஜூலை 7–ம் தேதி ஆற்காடு சுப்ரமணியபுரம் ஜெபாலயம் பிரதிஷ்டை பண்ணப்பட்டது. ஆகஸ்ட் 25–ம் தேதி கேரளாவிலுள்ள சாயம்பொத்தை கிராமத்தில் ஓலையினால் ஒரு ஷெட் போட்டு அதை ஆராதனை இடமாக பிரதிஷ்டை செய்தோம். இவ்வருடம் நடத்தின ஏகதேசம் எல்லா கூட்டங்களிலும் ஆத்துமாக்கள் தங்களைக் கிறிஸ்து வுக்கு ஒவ்புக்கொடுத்தார்கள். 25 பேர் ஞானஸ்நானம் பெற்றார்கள்.

1994–ம் வருடம் கர்த்தர் அடிமையை தமது நாமத்துக்கு மகிமைக்காகக் காத்துக்கொண்டு உபயோகித்தார்.தேவனுடைய ஊழி–யத்தை சபையின் ஐக்கியத்திலிருந்து முழுநேர ஊழியராகத் தங்களை ஒப்புவித்த11 பேரை ஊழியத்தில் ஜெபித்து ஆசீர்வதித்து அமர்த்தினோம்

1995–ம் வருடம் ஜனவரி மாதத்தில் UNITED CHRISTIAN COUNSELலில் பெந்தெகோஸ்தே கிறிஸ்தவர்களும் அங்கம் வைத்துக் கொள்ளவேண்டும் என்ற எதிர்பார்ப்பு உண்டானது. சில வருடங்களாக கன்னியாகுமரி மாவட்ட பெந்தெகோஸ்தே தேவ ஊழியர் ஐக்கியத்துக்கு என்னை தலைவராகத் தெரிந்தெடுத்து வைத்திருந்தபடியால், என்னை ஐக்கியக் கிறிஸ்தவ அமைப்பில் பெந்தெகொஸ்தே கிறிஸ்தவர்களுக்குப் பிரதிநிதியாகச் சேர்த்துக்கொண்டார்கள். இதனால் பொதுவான கிறிஸ்தவ ஐக்கியக் கூட்டங்களில் மற்றும் பிஷப்மார்களோடு நானும் அழைக்கப்பட்டு ஆலோசனைகளும், செய்திகளும் கொடுத்து வர வாய்ப்புக் கிடைத்தது. பொதுவாக கிறிஸ்தவர்கள்படும் உபத்திரவங்களிலும்

WATER BAPTISM



SERMON ON THE PLATFORM



OFFICE



LEADING THE NEW CONSTRUCTION

PASTOR ORDINATION

NEW CHURCH OPENING

WORSHIP

FOUNDATION STONE RENGA SAMUDRAM

தேவைகளிலும் சம்மந்தப்பட்டு, பெந்தெகொஸ்தே கிறிஸ்தவர்களுக்கு ஒரு சிறிய பங்கு பாதுகாவலனாக செயல்படும் சிலாக்கியம் பெற்றேன். அதிகமான பெந்தெகொஸ்தே கிறிஸ்தவ ஊழியர்களும் என்னிடம் அன்பு பாராட்டுகிறார்கள். தேவஊழியர்களில் துன்பப்படுகிறவர்களுக்கும், தரித்திரமானவர்களுக்கும், தேவையுடையவர்களுக்கும் ஆறுதலாகவும், உதவியாளனாகவும் தேவன் என்னை நடத்திக்கொண்டிருக்கிறார். எல்லா தேவைகளையும் சந்திக்க முடியாமல் இருப்பதால் சிலர் மனஉழைச்சலுடனிருந்தாலும், பலர்ஜெபத்தினாலும், ஆலோசனைகளி னாலும் என்னை தாங்குகிறவர்களுமாயிருக்கின்றார்கள். பொது நல நோக்கமான சிந்தையை தேவன் எனக்குத்தந்திருப்பதால் இந்தியாவிலுள்ள பல முக்கிய கிறிஸ்தவ தலைவர்களைச் சந்திக்கவும், அவர்களது ஆசீர்வாதங்களைப் பெறவும், கிறிஸ்தவ சபைகளின் வளர்ச்சிக்காகவும், நிலை நிற்பிற்காகவும் பிரயாசப்படவும் ஒத்தாசைகள் பெறவும் அனுகூலமாயிருக்கிறது. 1995 ஏப்ரல் 30–ம் நாள் நாகர்கோவிலில் நடந்த U.C.C. கூட்டத்தில் எல்லா கிறிஸ்தவ சபை வகுப்புகளின் பிஷப்மார்களுடன், "கிறிஸ்தவர்களுக்குள் ஐக்கியம்" என்ற தலைப்பில் செய்திகொடுத்தேன். அன்று U.C.C. யின் பாராட்டுதலையும் பொது மக்களின் நன்மதிப்பையும் பெற தேவன் கிருபை செய்தார். பெந்தெகொஸ்தே கிறிஸ்தவர்களைப் பற்றிய தாழ்வான எண்ணம் பொதுவாக கிறிஸ்தவ தலைவர்களிடம் இருந்து வந்தது. ஆனால் மாபெரும் பொதுக்கூட்டங்களை ஒழுங்கு செய்தபடியாலும், அக்கூட்டங் களில் வகுப்பு வித்தியாசமில்லாமல், ரோமன் கத்தோலிக்க சபையின் குருக்களையும், தென் இந்திய திருச்சபையின் போதகர்களையும், இரட்சணிய சேனை தளபதிகளையும், லுத்தரன் சபை போதகர்களையும், பெந்தெகொஸ்தே சபையின போதகர்களையும் அழைத்து, கலந்துகொள்ளும்படி செய்தபடியாலும், U.C.C யில் அங்கம் வகித்தப்படியாலும், ஒருவரையொருவர் புரிந்து கொள்ளவும், ஒருவருக்கொருவர் உதவி செய்யவும், அன்பு பாராட்டவும், வேற்றுமைகளைக் களைந்து கொள்ளவும் முடிகிறது. இதனால் கிறிஸ்தவர்

களுக்கு உண்டாகின்ற போராட்டங்களை ஒரு மனதுடன் எதிர்த்து வெற்றி பெறவும் முடிகிறது. கிறிஸ்தவ சாட்சி ஒற்றுமையே.

நீண்ட காலமாக பெந்தெகொஸ்தே கிறிஸ்தவர்கள் மற்ற கிறிஸ்தவர்களாலும், பிற மதத்தினராலும் மிகவும் தாழ்வாக எண்ணப்பட்டு வந்தனர். பெந்தெகொஸ்தே கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய காரியங்களுக்கு மாத்திரமே முன்னுரிமை கொடுப்பதாலும், சரீர நன்மைகள் காரியத்தில் பின்தங்கியிருப்பதாலும் அற்பமாக எண்ணப்படுகிறார்கள். ஆனபடியால் சரீர நன்மைகள் காரியத்தில் இவைகளை முன்னேற்றமடையச் செய்யவேண்டும் என்னும் எண்ணம் உருவானது. மற்றும் கிறிஸ்தவர்களுக்கும், பிற மதத்தினருக்கும் இருப்பதுபோல பெந்தெகொஸ்தே கிறிஸ்தவர்களுக்கு ஸ்தாபனங்களின் சார்பாக, கல்வி ஸ்தாபனங்களும், தொழில் ஸ்தாபனங்களும் ஏற்படவேண்டும் என்னும் ஆர்வத்தை பெந்தெகொஸ்தே தேவ ஊழியர்கள் நடுவில் உருவாக்க தேவன் வழிநடத்தினார். அதற்காக தேவ ஊழியர்கள் கூடி பல ஆலோசனைகள் செய்யப்பட்டன. பொருளாதாரக் குறைவினால் இம்மாவட்டத்தில் இதை ஆரம்பிக்க முடியாமலிருக்கிறது. அதற்காக ஜெபிக்கவும், ஏற்ற முயற்சிகள் எடுக்கவும் தேவஊழியர்கள் கூடி பல ஆலோசனைகள் செய்யப்பட்டன. இந்த ஆர்வம் பெருகி, ஏற்றகாலத்தில் ஸ்தாபனங்களான கல்லூரிகளும், தொழில் ஸ்தாபனங்களும் ஏற்படவேண்டும் என்னும் ஆர்வத்தை பெந்தெகொஸ்தே தேவஊழியர்கள் நடுவில் உருவாக்க தேவன் வழிநடத்தினார்.

ஊழியர் பயிற்சியின் உயர்நோக்கம் :-

யேகோவா நிசி வேதகலாசாலையில் பயிலுகின்ற, பயிற்சி பெறுகின்றவர்கள் இந்தியா முழுவதிலும், பிற தேசங்களிலும் சென்று தேவனுடைய ஊழியத்தைச் செய்யும் திறமை பெற்றவர்களாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் உண்டானது. ஒருநாள் யேகோவா இரட்சணிய சபையின் ஆரம்பகாலத்தில் தேவன் கொடுத்த வாக்குத்தத்தங்களுள்,

"கடல் முதல் மலை வரையிலும் என் ஊழியத்தை விஸ்தாரப்படுத்துவேன்" என்று தேவன் கூறியிருந்த வாக்குத்தத்தம் என் நினைவுக்கு வந்தது. தற்சமயம் யேகோவா இரட்சணிய சபையின் அங்கத்தினர் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலும் சென்று ஊழியம் செய்கிறார்கள். அதற்கு நமது யேகோவா நிசி வேத கலாசாலையின் பயிற்சி ஒரு காரணமாக அமைந்திருக்கிறது. இன்னமும் இந்த விசாலமான செயலை அதிக விசாலமாக்க வேண்டும் என்னும் ஆர்வம் எனக்குள் தோன்றினது. இந்த நோக்கத்தை வெளிப்படுத்தி அதற்காக யேகோவா நிசி வேதகலாசாலையில் **B.TH Course** ஐ ஆங்கிலத்தில் கற்பிப்பதற்காக ஆரம்பிக்க விரும்பினேன். அதற்காக ஜெபித்தபோது, அதை வாய்க்கப்பண்ணுவேன் என்று கர்த்தருடைய ஆவியானவர் பேசினார். அதற்கு அடையாளமாக 2000 ஆண்டின் ஜூன் மாதம் வகுப்பை ஆரம்பித்தபோது, இந்தியாவின் வடபகுதியான மணிப்பூர், நாகலாந்து என்னும் நாடுகளிலிருந்து மாணவர்கள் நமது வேதகலாசாலையில் வந்து சேர்ந்து கல்வியும் பயிற்சியும் பெற தேவன் வழி நடத்தியிருக்கிறார். தற்போது **D.Th** வகுப்புகள் தமிழிலும், **B.Th** வகுப்புகள் ஆங்கிலத்திலும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. தேவன் வாக்குத்தத்தங்களில் மாறாதவர். அவர் தமது வாக்குத்தத் தத்தின்படி பெரிய காரியங்களைச் செய்கிறவர். தமது வாக்குத்தத்தங்களில் மறவாதாவர் அவரே, இவருடைய வாக்குத்தத்தம் இத்தலை முறைக்கும் இதற்குப் பின்பு வருகின்ற தலைமுறைக்கும் உண்டானது. யேகோவா இரட்சணிய சபை என்னும் இந்த ஸ்தாபனத்தின் ஊழியத்தைக் குறித்து தேவனுக்கு பெரிய நோக்கம் இருக்கிறது. இதில் அங்கம் வகித்து செயல்படுகிறவர்கள் பாக்கியவான்கள். இந்த சபையில் தேவன் செய்திருக்கும் வாக்குத்தத்தத்துக்கு உடன் சுதந்தரராக பங்கு பெறுகிறவர்கள் வருங்காலங்களில் மாபெரும் அதிசயங்களைக் காண்பார்கள். இதை அற்பமாகவும் அர்த்தமற்றதாகவும் எண்ணுகிறவர்கள் தளர்ந்துபோவார்கள். வாக்குப்பண்ணினவர் உண்மையுடையவர் என்பதை இவ்வூழியத்தில் நிலைத்திருக்கிறவர்கள் மெய்யாகவே காண்பார்கள், அனுபவிப்பார்கள்.

தேவனுடைய வாக்குத்தத்தமான நன்மைகளைப்பெறதேவனிடத்தில் அன்பு கூறுகிறவர்களாகவும் ஒருவரிடத்திலொருவர் அன்பு கூருகிறவர்களாகவுமிருக்கவேண்டும். அவரிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு எல்லாவற்றையும் நன்மையாகவே நடத்துவார்.

மகிமையில் மறையும் தாய் :-

1996-ம் வருடம் டிசம்பர் 31-ம் தேதி மாலை எங்கள் வாழ்க்கையில் சோகமான ஒரு சம்பவம் நடந்தது. மூன்று நாட்களுக்குமுன் அமெரிக்க சிநேகிதியுடன் வீட்டிலிருந்து ரோட்டில் நடந்து போய்க் கொண்டிருக்கும் போது, யேகோவா இரட்சணிய சபையின் ஆரம்ப தேவஊழியக்காரியும், சபையின் தாயாக இருந்து நடத்தி வந்தவருமான சகோதரி சொர்ணபாக்கியம் அவர்கள் திடீரென நோய்வாய்ப்பட்டார்கள். ஏற்கனவே நோயாளியாய் பராமரிப்பபிலிருந்து வந்த அவ்வம்மையார் இம்முறை சிகிற்சை பலனளிக்காமல் மகிமைக்குள் மறைந்துவிட்டார்கள். அனந்தன் நகரிலுள்ள யேகோவா இரட்சணிய சபை கல்லறைத் தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள். அதற்குமுந்தின இரவு என்னுடைய அயர்ந்த நித்திரையில், அவர்களுடைய உடல் படுக்கையின் மேல் மூடப்பட்டுக் கிடப்பதாகவும், வெண்மையான புகைபோன்ற ஒருசாயல் அவ்வுடலிலிருந்து எழுந்து மேல் நோக்கி மெதுவாகப் பறந்துகொண்டு மறைவதாகவும் கண்டேன். மறுநாள் மாலை அவர்கள் மகிமைக்குள் மறைந்த செய்தியை அறிந்தேன். அவர்கள் மகிமைக்குள் மறைந்தது மகிழ்ச்சியான முடிவுதான். தான் படுக்கையில் வைத்து எவராலும் கவனிக்கப்பட வேண்டிய நிலைமை வராமலே எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என அவர்கள் ஜெபித்து வந்தபடியே 3-ம் நாளில் மறைந்துவிட்டார்கள். ஆனால் யேகோவா இரட்சணிய சபை ஈடு செய்ய முடியாத ஒரு இழப்பை சந்தித்துவிட்டது. அவர்களுடன் இணைபிரியாது ஒட்டியிருந்த ஸிஸ்டர் ஜீன் கிறிஸ்டன்ஸன் மனக்கவலை நீங்கி ஆறுதலடைந்தது எப்படியோ? அது அவர்களுக்குத்தான் தெரியும்.

"மலைகள் விலகினாலும் பார்வதங்கள் நிலை பெயர்ந்தாலும் என் கிருபை உன்னைவிட்டு விலகாமலும், என் சமாதானத்தின்

உடன்படிக்கை நிலை பெயராமலுமிருக்கும் என்று, உன்மேல் மனதுருகிற கர்த்தர் சொல்லுகிறார்" என்று (ஏசா 54:10) அன்று சொன்ன ஆண்டவர் மறுபடியும் என்னிடம் அதையே சொன்னார். அதுபோலவே தேவனுடைய கிருபை என்னைவிட்டு மறாமலும், அவருடைய சமாதானம் நிறைந்த உடன்படிக்கை அசைவில்லாமலும் என்மேலிருப்பதையும் என் தேவ ஊழியத்திலிருப்பதையும் காண்கிறேன்.

பலவீனமாயிருக்கும்போதே பலமாயிருக்கிறேன் :

சபையின் நடபடிக்கைகளெல்லாம் நலமுடனே நடந்து வரும் வேளையில் பிரிவினையின் ஆவி போராட ஆரம்பித்தது. திடீரென என் இருதயத்தில் ஒரு பலவீனம். அது இருதய நோய் பிடித்தது போலாகிவிட்டது. 15 நாட்கள் அதிக கடுமையான சிகிற்சை செய்யப்பட்டது. ஆனால் ஒருவருடமாகியும் பலவீனம் முற்றிலும் நீங்கவில்லை. கடுமையான சிகிற்சையில் நான் இருந்தபோது கனம் டேவிட் டெறல் என்னும் அமெரிக தீர்க்கத்தரிசி வந்து எனக்காக ஜெபித்தார். தேவனுடைய குணமாக்கும் அற்புத வல்லமை என்னைத் தொட்டிருப்பதை உணர்ந்தேன். என்னுடைய படுக்கையறையில் மருத்துவ மனையில் கடினமான நோயாளிகளாகப் படுத்திருந்த அனைவருக்காகவும் ஜெபித்தார். தேவனுடைய அற்புத வல்லமையை அனைவரும் உணர்ந்தார்கள். அம் மருத்துவ மனையிலிருந்த எல்லா நர்ஸ்மாரும் அவருக்கு முன் வந்து முழங்காற்படியிட்டார்கள். டாக்டர்மார்களும் ஜெபிக்க வந்தார்கள். தேவனுடைய பிரசன்னம் அந்த மருத்துவ மனையில் என்னை குணமாக்கினது. பல டாக்டர்களும் கூடி என்னிடம் வந்து, உங்களுக்கு குணமானாலும் நீங்கள் சிலநாட்கள் அமைதியாக ரெஸ்டிலிருக்க வேண்டும், ஆனபடியால் இப்போது அக்கூட்டத்துக்கு நீங்கள் போக வேண்டாம், நாங்கள் எல்லோரும் போகிறோம். போய் வந்து உங்களுக்கு அங்குள்ள விசேஷங்களைச் சொல்லுகிறோம் என்றார்கள். அப்படியே ஒருசில நாட்கள் ரெஸ்டிலிருந்து விடுதலை பெற்றேன். எனக்காக நூற்றுக்கணக்கான தேவ ஊழியர்கள்,

விசுவாசிகள் ஜெபித்தார்கள். ஆறுதலும் ஆலோசனையும் கூறினார்கள். இனிமேல் நான் தேவ ஊழியம் செய்ய முடியாது, இதோடு இந்த ஊழியம் முடிந்தது என திரளான மக்கள் எண்ணினார்கள். ஆனால் விரைவில் தேவன் என்னை குணமாக்கி பலப்படுத்தினார். நான் ஊழியம் செய்ய முடியாமலாகிவிடுவேன், தலைமைப் பதவியை நாம் பெற்றுக் கொள்ளலாம் என்று எண்ணினவர்களும் வெட்கப்பட்டார்கள், துக்கப்பட்டவர்களும் உண்டு. ஆனால் தேவன் வாக்குபண்ணினதில் உண்மையுள்ளவராயிருக்கிறார்.

சோர்ந்து போகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து சத்துவமில்லாதவனுக்கு சத்துவத்தைப் பெருகப்பண்ணுகிற என் தேவன் எனக்குக் கொடுத்து வருகின்ற பெலனுக்காகவும், சத்துவத்துக்காகவும் அவரை தோத்தரிக்கிறேன். அவர் என் பெலனைப் புதிதாக்குகிறார். என் வயது திரும்ப வால வயது போலாகிறது என்று சொல்லப்பண்ணுகிறார். ஒருவர் பெலவீனமடைந்தால் அவரைப் பெலப்படுத்த மக்கள் தொகை குறைவு. என்னால் நலம் பெற, பெலன் பெற, முன்னேற்றமடைய, தேவைகள் சந்திக்கப்பட விரும்பும் பலர் என்னுடைய பெலனில் அக்கரைப்படுவதை நான் காணவில்லை. தங்கள் சந்திப்புகளிலும் தங்கள் தேவைகளை நிர்ப்பந்தப்படுத்திச் சொல்வதினாலும், பெலவீனன் சொல்லுவதை ஏற்றுக்கொள்ளாதிருப்பதினாலும் பலவீனனுடைய பலவீனத்தை அதிகப்படுத்துகிறார்கள்.இனிய சொல் தேன் கூடுபோல மதுரமானது. கடுஞ்சொற்களோ கோபத்தை எழுப்பும். இது அறியாமல் சிலர் என்னிடம் காணப்படுவதும் உண்டு. ஆனால் என் தேவனோ எத்தனை இனிய வார்த்தைகள், எத்தனை நலம் தரும் பாடல்கள் எனக்குத் தந்தார். அவைகளால் என்னோடு பேசிக்கொண்டிருக்கிறார். நான் நிர்மூலமாகாதிருக்கிறது தேவனுடைய கிருபை.

தேவன் 1997–ம் வருடம் முதல் 2001 மார்ச் மாதம் வரையிலும் என் ஆவியில் கொடுத்த சங்கீதங்களை உங்களுக்கும் இங்கே எழுதித்தருவது நலம் என எண்ணுகிறேன். இதற்குமுன், நான் முன்னே சொன்னபடி சிறுவர் வேதபாடத்துக்கென ஆசிரியர் கைநூலாக 21

புத்தகங்களை எழுதினதோடு, ஜீவ விதைகள் முதலாம், இரண்டாம், மூன்றாம் பாகம் என மூன்று புத்தகங்களையும், எனக்கு மாறுதல் எப்போது வரும், தூண்டும் தூய மொழி, தெய்வீக சுகவாழ்வு, தேவாராதனை ஒழுங்கு நூல் என்னும் புத்தகங்களையும், என்னுடைய அனுபவத்தில் தேவனுடைய செயல்கள் என்ற என்னுடைய சொந்த சாட்சிப் புத்தகத்தையும், வெளிப்படுத்தின விசேஷம் I-ம், II-ம், II-ம் பாகம் என்னும் புத்தகத்தையும் எழுதி வெளியிட்டிருக்கிறேன். மேலும், லியாதான், தேவ வசன முத்துக்கள் என்னும் என்னுடைய பிரசங்க புத்தகத்தையும் அச்சிட்டு வெளியிட ஆயத்தமாயிருக்கிறேன்.

நான் ஜெபத்துடன் பெற்றுக்கொண்ட அருள் வாக்குகளை ஜெப சிந்தையுடன் இங்கே வாசித்துக் கவனியுங்கள்.

பரிசுத்த ஆவியானவரின் ஏவுதல்களால் பிறந்த மொழிகள்

1. கடந்த நாட்கள் கருத்தானவைகள் (1977-ம் வருடம் 1-4)
நடந்த வழிகள் உருத்தாய் ஆராய்ந்து
இடர்தந்தவைகளை இழிவென அகற்றி
முடமடையாது முன் செல் என் மனமே

2. புகுந்த வருடம் புனை பொருள் தானே
சுகம் தேடி அலையும் நோயாளி நீயோ
அகம் வரும் ஆண்டவர் நலம் தரும் வழியே
புகுந்து வாழ்ந்தே அருள் பெறும் என் மனமே

3. இழந்தவைகளை என்றென்றும் எண்ணாதே
குழந்தைப்போல் இயேசு நாமத்தை நம்பு
கழிவைகளெல்லாம் மாயமாய் மாற
சூழலை தினமும் நேர் செய் என் மனமே

4. இன்றுதான் உன்நாள் அதை
நன்றென வைத்து நற்பொருள் தேடு
சென்று போனவை வென்றிடாதே உன்னை
இன்று நிதமும் என்னைத் தொழுகை செய் என் மனமே

5. சோதனை வேளையில் சோர்ந்திடாதே (1980–ம் வருடம் 5–10)
வேதனை அணுகா காக்கும் கரம் உனக்கு
போதனையுடன் வந்தடையும் வேளையில்
சாதனைகள் நீ புரிவாய் சக்தியாய் என்மனமே

6. காத்திடும் கர்த்தராம் இயேசுவே தேவ
நேத்திரம் உன்மேல் எப்போதும் வைத்தே
பாத்திரமாய் உன்னை பண்புடன் காணவே
தோத்திரம் பல கூற எழும்புவாய் என்மனமே

7. சுகம் தேடி அலையும் சொற்லோக மானிடர்
அகமெல்லாம் குளிர அன்புடன் பண்பாக
மேகமாம் பாவங்கள் பாரெல்லாம் அகல
ஏகமாய் பாடுவாய் இயேசுவை என்மனமே

8. குணம் கெட்ட மானிடர்
கணநேரம் கர்த்தரை
மணம் கமிழ் வார்த்தையால்
இணக்கமாய் புகழ்வாரேல்
பணம் கொள்ளா நன்மைகள்
வணக்கமாய் வந்திடும் என்மனமே

9. வந்தவர் உன் நேசர்
வெந்துபோன உன் மனதை
நொந்து கொள்ளா வார்த்தைகளால்
பந்தம் காட்டிப் பேசினாரே
சுந்தரன் இயேசுவுக்காய் தேவ
சுந்தரமாய் வாழ்ந்திட உன்
தந்தையாய் பக்கமதில் என்னைக் காண்கிறாய் என்மனமே

10. எப்போதும் உன் பக்கமாய்
தப்பாமல் உலாவிடும் உன்

அப்பனாம் இயேசு தேவன்
இப்போதும் உன் உள்ளமதில்
சொப்பனமாம் வார்த்தைகளால்
செப்பிக்கொண்டிருக்கிறார்
உப்பாய் நீ விளங்கிடுவாய்
துப்பெல்லாம் துலங்கிடவே
குப்பென வீழ்ந்திடுமே குணம் கெட்டகாரியங்கள்
வைப்புவரம் உன்னிடமே இப்போதும் என்மனமே

நண்பகல் பாரா செய்வார் (1982–ம் வருடம் 11–14)
கண்மணிபோல் காரியங்கள்
புண்களெல்லாம் மாறியே–இம்
மண்மீதில் அம்மக்கள் வண்ணமிகு கற்களென
விண்ணவனாம் இயேசுவுக்காய்
உண்மையுடன் எழுந்திடுவார் என்மனமே

நான் உன் பக்கம் இல்லையோ
வான் முழங்கும் நற்செய்தியுடன்
உன் வாழ்வெல்லாம் விண்மகிமை
அன்பாராய் நான் வந்தடைந்தேன்

உம் முகம் எனக்குத் தேவை
உம் சமூகம் என் மகிமை
உம் சாயல் எனக்குப் பாக்கியம்
உம் சொந்தம் எனக்குச் சிலாக்கியம்

கண்ணீர் நிறைந்த இவ்வுலகம்
தண்ணீர் இன்றி தவிக்கும் நேரம்
விண்மீன் போன்ற என்தூதர்கள்
கண்ணிமை நேரத்தில் தோன்றிடுவார்
திண்ணமாய் நின்றுன்னைக் காப்பார்

எண்ணில்லா நன்மைகள் செய்வார்
மண்ணெல்லாம் மாற்றியே தருவார்
புண் உள்ளங்கள் நன்றாகிடவே
புண்ணியங்கள் உனக்குப் புரிவார்
நண்பகலெல்லாம் உன்னோடிருப்பார்
பண்பாக பாசம் காண்பிப்பார்
வண்ணங்கள் தீட்டும் ஒளியாய் விண்ணிலே ஏகிடச் சேர்ப்பார்
அண்ணலாம் இயேசுவோடு என் மனமே
அண்டியே வாழ்ந்திடுவாய்

15. கர்த்தனாம் இயேசுவோடு (1983–ம் வருடம் 15–23)
காசினியில் வாழும் நாளெல்லாம்
கானக வாழ்வின்றி கவிதைகள் பாடுவாய்
காந்தனாம் இயேசுவை நம்பி
காலையும் மாலையும் மகிழ்வாய்
காத்திருக்கும் சுத்தர்களோடே நீ
காகளம் தொனித்திடும் நேரத்தில்
காற்றில் பறந்து காதலன் இயேசுவோடே
காலமெல்லாம் வாழும் வாழ்வுக்காய்
காலமில்லா நேரத்தில் ஏகுவாய் என்மனமே
(காலமில்லா நேரம் – நொடிப்பொழுது)

16. தீது என்று நினையாமல் தினமும் தேவனைத்துதி
மாதை மனதில் நினையாமல் மன்னவன் இயேசுவை நினை
கோதில்லா மனதுடன் குணம் பெற்று வாசனை வீசு
சூது வாது செய்யாமல் குலம் அன்பு கூர்ந்திடு
வேதனை இல்லா விண் வாழ்வுக்காய் வீரமுடன் என்மனமே

17. அக்கம் பக்கம் பாராமல் ஆண்டவனையே நினை
இப்பக்கம் இடர்துன்பம் எப்போதும் உண்டுமே

தப்பாமல் என்றென்றும் தவ வாழ்வு வாழ்வாயே
உப்பாமல் அப்பன் பாதம் அமர்ந்திடவே என் மனமே

18. நீதியாம் தேசமதில் நிம்மதியுடன் வாழ்ந்திடவே
வீதியாம் சீயோன்தனில் விரைவுடன் நடந்திடவே
ஜோதியாம் இயேசு, முகம், முகமாய் கண்டிடவே
போதுமாம் வயதுதனில் பரம் சேர்வாய் என்மனமே

19. கண்டேன் நான் கர்த்தனை அறையப்பட்ட சிலுவையிலே
கொண்டேன் நல் அன்பு பொங்க கரம் நீட்டி அணைத்தேன்
மண்டலம் சென்று நல் செய்திதனை கூறிடுவாய்
மீண்டிடவே மாந்தர் என்றார் மகிழ்ந்தேன் நான் என் மனமே

20. வாசலில் வந்து நின்றார்
நேசமுகம் காட்டி நின்றார்
கூசின என் கண்கள் குறுமுழியால் பார்த்தனவே
வீசிடு என் வருகைநாள் சீக்கிரம் என்று பூ
ஆசீர் அருளிடுவேன் நான் என்றார் எங்கும் என்மனமே

21. ஆசை காட்டும் இன்முகம் – பரம
தேசம் முற்றும் புன்முகம் – தலையின்
கேசம் எல்லாம் பொன்மயம் – மிக
வாசனையாம் அவர் நன் மனம்

22. மெய் சிலிர்த்தப்போதே – குரல்
செய்யும் தொனி மெதுவாக – நரர்
உய்யும் வழி கூறினாரே – அவர்
பெய்யும் அருளால் என் மனமே

23. எங்கும் கூற நல் வார்த்தை அதே
சங்கு நாத முழக்கத்துடன்
பொங்கி எழும் ஆனந்தத்தால் – இயேசு
தங்கிட வருகிறார் என்மனமே

24. அவர் வரும் செய்தி கூறுகிறேன் (1984–ம் வருடம் 24–33)
அவரவர் ஆயத்தம் செய்திடுங்கள்
இவருக்கல்லோ காத்திருந்தோம் – என
அவர் நபரெல்லாம் ஏகுவார் அல்லேலூயா

25. வீறிட்டெழும்பிடும் சுத்தர்கள் – மனம்
மாறி மீட்படைந்த பரிசுத்தர் – உடல்
மாறி மகிமையாய் எழுந்து செல்வார் – பல்
வேறிடங்களினின்று வந்து சேர்வார்.

26. அல்லேலூயா வென்று ஆர்ப்பரிப்பார்
அல்லல்களத்தனையும் அழிந்தவராய்
தொல்லைகளில்லா சுவர்லோகத்தில்
சொல்லொண்ணா ஆனந்தத்தால் அகமகிழ்வார்

27. என் நேசர் இயேசுவின் மார்புதனில்
பொன் உலகாம் புண்ணியரின் இருக்கைதனில்
இன்ப மயப் பாடலுடன் நானும் பாடி
நன்றாகச் சாய்ந்திருப்பேன் என் மனமே

28. வேதங்கள் கைக் கொண்டவர்கள்
வேதியர் உபதேசம் கேட்டவர்கள்
பேதமின்றி இயேசுவோடு வாழ்ந்தவர்கள்
நாதனாம் இயேசுவோடு நடந்திடுவார்

29. ஜீவ நதி ஓரமாய் சிறப்புடன் உலாவிடுவார்
ஜீவ தண்ணீர் பருகியே தினம் தினமும் மகிழ்ந்திடுவார்
ஜீவ கனி புசித்துமே நித்திய ஜீவனுடன் வாழ்ந்திடுவார்
ஜீவ வார்த்தை கேட்டு மனம் மகிழ்ந்தவரைப் புகழ்ந்திடுவார்

30. மங்கள ஓசைகள் மனம் குளிரக் கேட்குதம்மா
இங்கித மாகவே இகலோக மாந்தர்கள்

சங்கீதப் பாடல்கள் பரலோகம் பாடுகிறார்
பொங்குதம்மா என் மனமும் பங்குகொள்ள துடிக்குதம்மா

31. மணவாளன் பேசுகிறார் மனம் இளகிப் போகுதம்மா
மணவாட்டியாக வாழ வரும் நாளும் நெருங்குதம்மா
குணமுடன் வாழ நானும் வழி கேட்டு நடக்கின்றேன்
மனம் கமழ நாட்டிலே மன்னனோடு நடந்திடவே

32. இயேசு இயேசு என்று என்னாளும் ஏங்குகின்றேன்
பேசு பேசு அவர் நாமத்தையே பேசு என்று
கூசாமல் என் மனமோ குறைவில்லாமல் ஏவுதம்மா
மாசில்லா வாழ்வுக்காய் மண்ணாசை வெறுத்திடவே

33. வெறுப்புத்தான் வந்ததே என் வாலிப நாட்களிலே
கறுப்பனாம் சாத்தானை விரட்டியடித்திடவே
மறுக்காமல் அவர் வழியில் வந்த நான் சென்றிடவே
உறுப்பாய் அவர் உடலில் உறுப்பாக ஒன்று சேர்ந்தேன்

(வெறுப்பு – உலக வெறுப்பு)

(1985–ம் வருடம் 34–38)

34. வேண்டாம் என்று கூறினார் விண்ணவனாய் வாழ்ந்திட
வேண்டும் என்று திட்டமிட்டு வெகுண்டெழுந்து புறப்பட்டேன்
மாண்டவர் பாவத்தினின்றெழுந்து பிறந்திட்டார்
கூண்டோடு பரலோகம் போகும் வழியில் வந்திட்டார்

35. வேதாகமம் படித்த நான் அதை விதைத்திட எழுந்திடவே
நாதனாம் இயேசுதேவன் நல்கினார் தம் வரங்கள்
போதனைகள் செய்திடவே புதிய வழியில் நடத்திட்டார்
சாதனைகள் செய்தவர்கள் சபைதனிலே சேர்ந்திட்டார்

36. இரட்சணியம் என்பது இரட்சிப்பின் விருந்தேதான்
இரட்சணியம் பெற்றவர் இரட்சகரின் பிள்ளைகள்
இரட்சணியக் கொம்பாக இரட்சகர் பிறந்து வந்தார்
இரட்சணிய சபைக்காக இரட்சகர் வந்திடுவார்

37. நீ தனியாக இருக்கவில்லை
நல்ல ஒரு கூட்டத்துடன் இருக்கின்றாய்
நீ வெறுமையாய் வாழவில்லை
நன்மை செய்யும் தூதர் பலர் உனக்குண்டு
நல்ல தண்ணீர் ஊற்றிலே பானம் செய்வோர்
நன்னிலமாம் சபையிலே பாரமுள்ளோர் உனக்குண்டு
நற்பரனாம் இயேசுவையே பாடி வாழ்வோர் அத்தனையும்
நொந்து கொள்ளார் வந்து செய்வார்
நொந்த மனம் ஆறிடவே ஆசைதரும் வார்த்தைகளால்
நந்தவனம் சேர்வதற்காய் தினமும் நல்தொண்டு செய்வார்
நகை நட்டுப் போடமாட்டார் நாதனிலே மயங்கி வாழ்வார்
நல்மனமாய் உன்னோடு நாட்களெல்லாம் இருக்கின்றார்

38. முகம் கழுவி உடல் முழுகி
அகம் சுத்தம் ஆனவன் நான்
மேகமதிலே செல்வதற்காய் விண்ணவனாம் இயேசுவோடு
மேகரதம் தானதிலே ஏகிடுவேன் என்மனமே

39. காலை தோறும் கர்த்தரையே (1986–ம் வருடம் 39–42)
மாலை தோறும் மகிபனையே
சாலை தோறும் காட்டி வந்தாய்
சோலை தோறும் அவர் சத்தம்
மேலும் மேலும் கேட்டிடுதே
பாலைவனம் உன் வாழ்வில்
வேலை செய்யும் சோலையாக
விலையுள்ள கனியாக
மலைகளெல்லாம் பாலாக
கலையுள்ள பவுசாக
மாலைப்போட்டு வரவேற்கும்
நிலையுள்ள நேசனாக மாறிவிட்டாய் என்மனமே

40. கூவுதோ உன் மனது குறைகளை எண்ணி எண்ணி
வேவுதோ உன் உள்ளம் குறைகளைப் போக்கிப் போக்கி
காவுதான் இல்லையப்பா முறையாக வாழ்ந்திடுவாய்
தாவும் குரங்கைப்போல் தாவாமல் நீ வாழ்வாய்

41. கடைக்கண் பார்வையால்
கர்த்தன் உன்னைக் காண்கிறேன்
நடைபிசகாமல் நன்றாக நடத்துவேன்
இடர் வரும்பொழுதெல்லாம் நித்தம் உன் நண்பனாய்
சுடர் விடும் சோதியாய் எழுந்து நான் வந்திடுவேன்
தடைகளை நீக்குவேன் தாமதம் செய்யாமல்
படைபலம் எனக்குண்டு சாத்தானை ஓட்டிட
கோடை என்றும் பாராமல் குணமுடன் வந்துன்னை
குடை தந்து தாங்குவேன் நற் பண்புடனே நீயும்
கொடை தந்து தோத்திரங்கள் சாற்றுவாய் என்மனமே

42. வீடு வீடு என்று விண்ணவன் போகலாமோ
நாடு நாடு என்று நற்செய்தி கூறுவாயோ
சூடு சூடு பெற்ற சுறுசுறுப்பாம் காளையல்லோ
பாடு பாட்டு என்று பரலோகம் கேட்கலையோ
நேடு நாட்டு மாந்தர் வாட்டம் இல்லா நாடுதனில்
கூடிக் கூடி பாடல் பாடி மகிழ்ந்திடுவார்
நாடி நீ செய்யும் நற்செய்தி ஊழியத்தால்
கோடியாய் கூடி வாழ்வார் குணமுள்ள மகிமையிலே

43. கரம் பிடித்து நடத்துகிறேன் (1987–ம் வருடம் 43–49)
உரம் கொள்வாய் என்மகனே
நரர் படும் உபாதையில் நீ அகப்படாமலே
வரம் தந்து நடத்திடுவேன் வள்ளலாம் உன்
அண்ணல் நானே

44. தந்தேன் என் ஜீவனை உனக்கே
வந்தேன் நான் நல்கிடவே வரம்
தந்தேன் நான் உன்னிடமே குறை
பந்தம் ஒன்றும் இல்லாமலே என்மகனே

45. புகழ்பெறுவாய் பூதலத்தில் என்
அகம் வந்து வாழ்வதற்காய் உன்
சுகம் என்றும் தங்கிடவே பொல்லா
இகம் விட்டு என்னிடம் ஏகிடவே என் மகனே

46. உடை தந்தேன் ஊண் உறக்கம்
நடை நடந்து வந்திடவே என்
படைபலம் உன்னிடமே பார்த்திபன் நான்
சடைசடையாய் தந்திடுவேன்–உன்
நடைகுறையும் காலத்திலே–நான்
புடைசூழ்ந்து தாங்கிடுவேன்–என்
விடை கொடுத்தேன் உந்தனுக்கே வித்தகனாம் என்மகனே

47. புண்களெல்லாம் மாற்றிடுவேன் மனக்
கண்களெல்லாம் காத்திடுவேன்–உன்
எண்ணமெல்லாம் நான்தானே–என்
விண்ணகத்தில் வாழ்வாய் நீயே என்மகனே

48. பண்புடன் நான் பழகிடுவேன் என்
தண் மயமாம் குணமுடனே–இந்த
மண்மயம் உன்னை தொட்டிடாமல்
விண்மயமாய் மாற்றிடுவேன் என்மகனே

49. எழுந்திடுவாய் விழிப்புடனே
விழுந்திடாமல் எழுந்து நிற்பாய்
அழுந்திடாமல் இப் பூவுதனில் நீயும்
கொழு கொழுவென வாழ்ந்திடுவாய்

50. கொழுத்துப் போனாய் என்று சொல்வார் (1988 : 50-56)
கொழுந்தெழும் உன்னைப் பார்த்தே
மழுங்கிப்போவார் என்மொழியால் அவர்
சுழுங்கி வீழ்வார் என்மகனே

51. பயம் வேண்டாம் உந்தனுக்கே
நயம் உன்னிடம் தானே உண்டு
சுயம் கொண்டெழும் மாந்தரெல்லாம்
புயம் குலுங்கி விழுந்து போவார்

52. என் பெலன் என்னில் இல்லையப்பா
உன் பெலன் தாரும் என்றழுதாய்
நன்மொழி சொல்ல நான் எழுந்தேன்
பொன் மொழி சொல்ல நான் வந்தேன்

53. இளக்கரிக்காதே இளவேனில் உனக்குண்டு
இளங்காளையாய் நீ இருப்பாயோ
சுளகினால் புடைக்கப்படும் வேளையில்
மளமள வென்றுன்னைக் காப்பேன்—நானே

54. வீசிடும் புயல்கள் உனக்குண்டு
தூசிகள் உன்னை விட்டகன்றிடவே
நாசிகள் சுவாசம் என்கையிலல்லோ
வாசியாய் உன்பக்கம் நானிருப்பேன்

55. மேசியா நானல்லோ உந்தனுக்கே
காசினியில் காத்திடுவேன் கண்மணிபோல்
பாசியில் சிக்காமல் பார்த்திடுவேன்
பேசிடுவேன் உன்னிடமே என் ஆவல்களை

56. காலம் இன்னும் உண்டே கருத்துடனே (1989 : 56-62)
பாலம் உனக்குண்டு என்னில் நீ வந்திடவே

சூலம் அத்தனையும் சுமந்தேன் நான்—அதன்
மூலம் உனக்குண்டு விடுதலையே

57. கருத்தாய் காத்திடுவேன் உந்தனையே
கருத்தாய் நடந்திடுவாய் எந்தனுக்காய்
கருத்தாய் தந்திடுவேன் தூதர்களை
கருத்தாய் கவனித்திடுவார் தேவைகளை

58. சுருக்கமாய் இல்லாமல் ஆசீர்களை
பெருக்கமாகவே தந்திடுவேன்
சுருக்காம் கண்ணிகள் அறுந்திடவே
செருக்குடன் வந்திடுவேன் உன்னிடமே

59. ஏன் இந்தக் கேள்விகள் உள்ளமதில்
தேன் மொழிகள் என்னிடம் உண்டல்லோ
மேன் மகனாய் வளர்ந்திடுவாய் மாநிலமே
ஏன் என்னும் கேள்வி கேட்பாய் மாற்றானையே

60. சூதுகள் போக்கிடுவாய் சுகம் பெறவே
வாதுகள் நீக்கிடுவாய் வளம் பெறவே
போதும் என நிரம்பிடுவாய் புத்தியிலே
தூதுகள் தினம் கொடுக்க தேவையல்லோ

61. கண்டேன் நான் உன்னையே என்மகனே
கொண்டேன் என் இரத்தத்தால் உந்தனையே
மண்டலம் மீதிலே மாண்புடனே
சண்டாளன் சாத்தானை வென்றிடுவாய்

62. இரத்தமெல்லாம் கழுவினேன் உன்
தரத்தை எனக்காகக் கொண்டிடவே
இரத்தால் வெற்றிதான் உன்வாழ்விலே என்
வரத்தாலே வென்றிடுவாய் சாவுதனை

63. என் முகம் பாரப்பா என் மகனே (1990 : 63-67)
என் சுகம் சேரப்பா உன்னிடமே
பொன்முகமாய் மாறுவாய் என் நாளிலே
என் வருகை வந்திடுதே வேகமதில்

64. சொல்லுவாய் என் நாமம் என்றென்றும்
வெல்லுவாய் அந்தகார அஞ்ஞானங்கள்
நல்லுலகாய் மாறிடுமே இவ்வுலகம்
மெல்லுவாய் என் கனிகள் நித்தியமாய்

65. சோறு தின்னும் நாட்கள்
சோம்பலெல்லாம் மாறிடவே
வீறு கொண்டெழுப்புவாய்
வீம்பு கொள்ளும் மக்களையே

தாறு மாறாக்கும் தாரணியை நீ மகனே
மாறு பட வைத்திடவே மனந்திரும்ப கண்டிடவே
சாறுள்ள என் மொழிகள் உரைத்திடுவாய் பொன் மொழியாய்
நாறுகின்ற இவ்வுலகை மாற்றிடுவேன் நகரமாய் பரலோகமாய்

66. சோதனை நாட்கள் சோர்ந்திடாதே
சாதனைகள் பல புரிய உன்னை நான் உபயோகிப்பேன்
வேதனைகளால் வாடிடும் என்மக்களை
போதனை செய்து நலன் செய்வாய் என்மகனே

67. பொல்லாங்கன் எப்போதும் போதனை செய்யவே
நல்லாரை ஏமாற்றி நலன் கெடச் செய்யவே
இல்லாத காரியங்கள் ஏராளம் செய்திடுவான்
செல்லாது போய்விடவே வென்றிடுவாய் என்மகனே

68. திரும்பிப் பாராதே திருக்கான உலகமதை (1991 : 68-73)
விரும்பிப்தேடாதே வீணான காரியங்கள்

அருந்திடுவாய் எப்போது ஜீவதேவபால்தனையே
பொருந்தி போய்விடவே பரலோக வாழ்வதிலே

69. எனக்கென்று வாழ்ந்திடுவாய் என்னோடு நடந்திடுவாய்
உனக்கென்று வாழாதே உபயோகமுள்ளவனாய்
மனக்கலக்கம் மாற்றிடுவேன் மார்புடனே அணைத்திடுவேன்
மனக்கண்கள் திறந்திடுவேன் மறைப்படி நடத்திடுவேன்

70. விக்கினம் உனக்கு ஏன் விதிவிலக்கு உனக்கல்லோ
துக்கங்களை நீக்கிடவே துக்கமானேன் உனக்காக
திக்குகளெல்லாம் என் நாமம் சிறப்பித்திடுவாய் என்மகனே
பக்கிகள் போல் பறந்துபோம் பாரங்களெல்லாம் விலகிப்போம்

71. பட்டங்களைக் கட்டிக்கொள்வார் பரலோகம் சேர்வதற்காய்
சட்டங்களைக் கைக்கொள்வார் நீதியுடன் வாழுவதற்காய்–எந்தக்
கட்டங்கள் வந்தாலும் நிம்மதி நிம்மதியே
திட்டமாய் மணந்திடுவேன் திருநாமம் தந்திடுவேன்

72. விட்டேன் நான் என்பது வெறும் வார்த்தை தானல்லோ
விட்டுவிட்டுப் போகமாட்டேன் விண்ணில் கொண்டு
சேர்த்திடுவேன் நீ
பட்டப்பாடுகளெல்லாம் வீண் என்பார் அத்தனையும்
மட்டமாய் வாழ்ந்தவர்தான் மனம் கொண்டு திகைக்கவேண்டாம்

73. சொல் ஒன்று சொல்லிவிட்டேன் சுதந்திரமாக்க
நல்லது சொல்லிவிட்டேன் நலம் பெற்று வாழ்ந்திடுவாய்
இல்லை என்று சொல்லவேண்டாம் எல்லாம் உனக்குத்
தந்துவிட்டேன்
பொல்லாத மாந்தரெல்லாம் புறங்கூறித்திரிந்திட்டாலும்
வல்லவர் நான் உனக்குண்டு வஞ்சகர்கள் மாய்ந்திடுவார்
புல்லுகள்போல் புகைந்திடுவார் பூமியிலே அழிந்திடுவார்
வில்லுகளால் தாக்கிடுவேன் என் வீரமதால் தாக்கிடுவேன்

நல்லவர் நான் உனக்குண்டு நன்மை எல்லாம் செய்திடுவேன்
வில்லவன் போல் உன்னோடு உன் விருப்பப்படி செய்திடுவேன்
தொல்லைகளைத் தீர்த்திடுவேன் சுகம் கொடுத்து நடத்திடுவேன்
மல்யுத்தம் செய்யவேண்டாம் மாந்தரை நீ பகைக்க வேண்டாம்—என்
சொல்வன்மையால் சுகம்பெறுவாய் சுந்தரமாய்
என்நாட்டில் வாழ்வாய்

74. ஊரையும் உலகத்தையும் ஏமாற்றும் உள்ளம் (1991 : 74-80)
பேரைக்கெடுத்து பெரும் நரகத்தில் சேர்க்கும்
சாரை சாரையாய் சற்குருவை நாடினால்
தாரை தாரையாய் பரம் சோதியில் சேரலாம்

75. வல்லமை உன்னிலிருந்து பாயட்டும் வளம் பெறவே
மாந்தரை ஆளட்டும்
மெல்லவே சோதனைகள் ஒழியட்டும்
நல்லவை எல்லாம் வந்து நிறையட்டும்
தொல்லைகளெல்லாம் ஒழிந்து போகட்டும்

76. ஊற்றுத் தண்ணீர் உன்னதத்திலிருந்து இறங்கட்டும்
மாற்றமில்லா தேவ அன்பு உன்னில் பெருகட்டும்
வீற்றிருக்கும் ரோகமெல்லாம் நீங்கிப்போகட்டும்
சாற்றிடவே சாட்சிகள் எங்கும் நிறையட்டும்

77. பொருளும் உனக்குண்டு ஆத்ம வளமும் உனக்குண்டு
பெருகிடுவாய் பூமிதனில் இடம் கொண்டு வளர்ந்திடுவாய்
பொறுமையுடன் கண்டிடுவாய் என் பெருமை எல்லாம்
உன் கண்களால்
பொருள் பெருக்காம் நாடுதனில் பேரருளால் வாழ்ந்திடுவாய்

78. சுகம் கொடுப்பேன் உன் ஜெபம் கேட்டு
அகம் வருவேன் உன் உபதேசம் கேட்பவரின்
தாகமானேன் சிலுவைதனில் ஆத்மாக்கள் என் தேவை
பாகமாய் தந்திடுவேன் பரலோகம் வாழ்வதற்காய்

79. மெத்தனமாய் இருக்கவேண்டாம் வீண் ஆசை கொள்ள
வேண்டாம்
மெத்தவே உன்னை நான் வீரமுடன் எழுப்பிடுவேன்
மொத்தமாக உனக்கு ஈந்தேன் என்கிருபை வரங்களெல்லாம்
மெத்தைகளில் இளைப்பாறி விண்ணுகம் வந்துசேர
மெத்தும் சுத்தவார்த்தைகளை மேதினியில் தூவிடுவாய்

80. ஆம் என்று எழுதிவிட்டேன் ஆலோசனை அத்தனையும்
ஆம் என்று சொல்லிவிடு ஆடவர் செவி கேட்டிடவே
ஆம் என்று நானிருப்பேன் அலையும் மாந்தர்
இடங்களெல்லாம்
ஆம் என்று முடிந்திடுமே அனைத்து லோக பாக்கியங்கள்–பின்
ஆம் என்று தோன்றிடுதே ஆசீாவாத நாடுதனில்
ஆம் என்று இருந்திடுமே அனைத்து வாழ்நாள் காலத்துமே

81. நிந்தை சுமந்தேன் நானல்லவோ உன் **(1992 : 81-86)**
அந்தம் மகிழ் கொண்டிடவே நான்
சந்ததம் உன் நாதன் அல்லவோ நம்
பந்தம் பாசம் அழிந்திடுமோ எம்
சொந்தம் என்றும் உனக்குண்டல்லோ–பெரும்
பந்தம்போல் என் ஒளி உன்னிலே
தந்தேன் நான் என் மயமாய் நீ வாழ்ந்திடவே

82. தொல்லை ஒன்றும் இல்லையப்பா
வல்லவன் நான் உனக்கில்லையோ
கல்லைக்கரைப்பார் உன்னைக் கரையார்
கல்மலைபோல் உண்டல்லவோ நான்
வெல்லம்போல் ருசித்திடுவாய் நீ
மெல்ல மெல்ல இனித்திடுவேன் பெரும்
சொல்லதிகாரமே தந்திடுவேன் நீயும்
அல்லல் இல்லா நாட்டில் வாழ்ந்திடவே

83. சோதனைகளால் சோர்ந்திடாதே
வேதனைகளை நான் சகித்தேன்
போதனைகளைத் தந்திடுவேன் பெரும்
சாதனைகளைப் புரிந்திடுவாய்
நாதனாய் நான் உன்னுடனே வாழ்ந்து
பாதகங்களைப் பண்பாய் மாற்றி
வேதவார்த்தைகளால் வெற்றி தந்திடுவேன்

84. புத்தியில்லை என்று சொல்லுவார் உன்னில்
புத்தியினைக் கண்டிடுவார் வெறும்
கத்தி துதி பாடி மகிழ்வார் அந்திசந்தி
மத்தியான வேளைகளில் அரும்பொருளைத்
துத்தியம் துதி பாடி மகிழ்வாய் என்
புத்திரனே நான் உன்னோடுண்டு—புகழ்
சத்தியமாய் உனக்கு உண்டு பண்ணி
நித்தியமாய் உன்னைப் புகழ் பாடவைத்தேன்
எத்திசையாரும் உன்னை கண்டு பார்க்க
இத்தரையில் ஓடி வருவார்—நல்ல
வித்தகனாய் உன்னோடே நான் வந்து புத்தம் புதியக்
காரியங்களை பூவில்
நித்தம் நித்தம் செய்திடவே உன்னை
உத்தமன் என்று போற்றிடவே நானும்
சத்தியம் சொல்லி நடந்திடுவேன்

85. பெரிய பெரிய கற்கள் போல பாரங்கள் என்மேல் விழுந்தன
உரிய காலம் வந்தபோது கற்களெல்லாம் பறந்தன
சரியான காரியங்கள் சகலமும் என்மேல் வந்தன
மரியாதையாக வாழ்ந்திட மனமும் திறந்து பாடுகிறேன்

86. சிறப்பு தரும் நாட்டிலே செல்வமுள்ள வீட்டிலே
இறப்பு இல்லா வாழ்வுக்காய் இயேசுநாதர் தான் உண்டு

துறப்பு செய்து வாழ்ந்தால் தான் தூயவனை நாடுவாய்
பிறப்பு கொண்டு வந்ததால் பேரின்பம் பெற்று வாழ்வாயே

87. மழை பெய்ய மக்கள் காத்திருப்பார் (1993 : 87-95)
மழையும் பொய்த்துப் போகுமே—பரலோக
மழை பெய்து மக்களை பரமண்டல வாழ்வு செய்திட
மழை பெய்யா நாட்டிலே மன்னனோடு வாழச்செய்வேனே

88. சுகம் இல்லை என்பார் பலர் உண்டு
சுகம் பெற்று வாழ நானுண்டு
இகம் வாழ் மக்களெல்லாம் தூயவர்
அகம் வந்து வாழ செய்குவேன்

89. பயப்படுவார் பரலோகம் போக மாட்டார்
நயமான லோக வார்த்தைகளால் நானிலமே கெட்டு
வாழ்ந்திடுவார்
புயலென எண்ணித் திகைப்போரெல்லாம்—பாவ
மயமான வாழ்வில் அழிந்திடுவார் ஆனால்
சுயமாக என்னிடம் வந்தோரெல்லாம்
கயவனை வென்று வாழ்ந்திடுவார் நான்
புயமாயிருப்பேன் அவர்களுக்கே—நல்ல
தூயவராக வாழ வழி செய்வேனே

90. இன்பம் உண்டு உன் வாழ்விலே எல்லா
துன்பமும் நீங்க வழி செய்வேன் எந்தன்
அன்பின் வழியே வாழ்வோரெல்லாம் தாமே
பொன் மயமாய் மாறி வந்து சேர்வார்

91. குரல் எனக்குக் கொடுத்திடுவார் தங்கள்
உரல் போல் எனக்கு உதவிடுவார் பாவ
ஊரல்கள் நீங்கி சுகம் பெறுவார் வெகு
தூரமான நாட்டில் வந்து சேர்வார்

92. புத்திரர்களைப் பெற்றிடுவாய்
சத்திரங்களைக் கட்டி எழுப்பிடுவாய் உலக
சாத்திரங்களை வென்றிடுவாய் தூய
சத்திய வேத வாக்கின்படியே

93. ஜீவ விதைதான் சிறந்த விதையாம்
பாவ வழிகளைத் திருப்பும் விதையாம்
பாவலர்களை எழுப்பும் விதையாம்
தேவர்களாயவர்களை மாற்றும் விதையாம்—அது
தேவனிடமிருந்து உதிர்ந்த விதையாம்

94. சிலுவையில் சென்றேன் நான் அங்கே
சலுகைகளை உனக்குச் சம்பாதித்தேன்
வலுக்கட்டாயமாய் வந்திடுவாய் என்
கொலு வெல்லாம் நீயும் கொண்டாடிடவே

95. வேகமாக உயிர்த்தெழுந்தேன் நான் **(1994 : 96-112)**
தாகம் கொண்டு தேடிச்சென்றேன் என்
மேகம் போன்ற சாட்சிகளைக் கூட்டிடவே
மோகம் கொண்டு வந்தார் அவர் என்னை
மேகம் ஏறக் கண்டு சென்றார்

96. காத்திருந்தார் காத்திருந்தார் பக்தரெல்லாம் ஒன்றுசேர்ந்தே
பத்து நாட்கள் காத்திருந்தார் பரலோகம் திறந்ததுமே
சுத்தமாக்கப்பட்டோரெல்லாம் சுகமான ஆவி பெற்றார்
எத்திசையும் கொண்டு சென்றார் இயேசு நாமம் மகிமைப்பட
மாத்திரமே சபை சபையாய் எழுந்ததுவே தேவ சபை நாடெங்குமே
புத்தியுள்ள கன்னியராய் பூவீதனிலே மக்கள் தோன்றி
சத்திய வழியில் வாழ்கின்றாரே சர்வவல்லவர் சந்ததியாய்

97. இரட்சணிய சபையும் தோன்ற இயேசு நாதர் எழும்பி வந்தார்
இரட்சிப்பினை சுதந்தரித்தோர் ஏகமாக எழுந்து வந்தார்

புரட்சி ஒன்றைச் செய்துவிட்டார் புதிய சபையாய் தோன்றி
விட்டார்
கரம் பிடித்து நடத்துகின்றார் கர்த்தன் இயேசு தேவன் தாமே
வரம் கொடுத்துத் தாங்குகின்றார் வளம் பெறவே
சபைகளெல்லாம்
உரம் பெற்று செழித்திடவே உன்னதன் தம் வாக்கு தந்தார்
நரர்படும் அவதிகளில் நல்லவைகள் செய்து தந்தார்
இரக்கமெல்லாம் நிறைந்த இயேசு வந்தவரைக்கொண்டு செல்வார்

98. எண்ணங்களெல்லாம் சிறையே செய்வார்
உண்மைகள் உலகில் விளக்கிடுவார்
வண்ணம் பலவாய் அழகு செய்வார்
திண்ணமாய் வந்து உதவி செய்வார்
மண்மயமாம் மானிலத்தில்
விண்மய வாழ்வு வாழச் செய்வார்
புண்ணியங்கள் பல செய்திடுவார்
தண்ணென்றுள்ள அனுபவத்தை
புண்ணென்றெண்ணும் வேதனையை
அண்மையில் வந்து அகற்றிடுவார்

99. உண்ணும் உணவு தந்திடுவார்
கண்களெல்லாம் கர்த்தனைக் கண்டிடவே
நண்பகலென தம்மைக் காட்டிடுவார்
பண்புடன் பரலோகம் வாழச் செய்வார்

100. நூறாக வந்து பேசுகிறேன் பல
வாறாக எண்ணம் கொள்ள வேண்டாம்
மாறாக என்னை எண்ண வேண்டாம்
நாறாத நாட்டில் நலம் பெறுவாய்

101. வருகின்ற நாட்கள் அத்தனையும்
தருகின்ற எல்லா வார்த்தைகளும்

உருகின்ற தங்கக் கட்டிகளே
பருகின்ற பானம் பாலதுதானே
விரும்புவாய் எந்தன் வார்த்தைகளை
கரும்பிலும் இனிய சுவையாக
இரும்பிலும் பலமான பொருளாக
அரும் பொருளாம் ஆசைப் பொருளாக
ஆரும் தந்திடா வார்த்தையாக
சாரும் துணையாம் இணையாக
மருவிவிடும் சாபவழியையும்
உருவின பட்டயம் போல் அழிக்கும்
இருளின் அதிகாரம் அத்தனையும்
ஒரேநாளில் ஒழிந்து போயிடுமே

102. தங்க வார்த்தைகள் தந்துவிட்டேன்
பங்கம் வாராதுன்னைத் தாங்கிடவே
சங்கம் கூட்டிச் சொல்லி விடு இவைகள்
தங்கச் செய்வேன் அவர் உள்ளங்களில்

103. சுறு சுறுப்பாய் செயல்படுவாய்
விறு விறுப்பாய் வீரத்துடன்
நறுமணம் வீச நாடுதனில் குணம் வீச
அறுத்து வென்றிடு அந்தரங்கமெல்லாம் போக
மறு மறுவாழ்வில் வானகம் காண்பதற்காய்

104. மலைபோல் வரும் வினைகளெல்லாம்
குலைந்தோடிப் போகுதே சூரியன் முன்
வலை விரிந்தே எழுந்தாலும் அதுவெல்லாம் பனிபோல
நிலைகுலைந்தே போகுதையா உம்
கலைகளால் ஆடிப்பாடிடுவேன் உம்
விலையான இரத்தம் தந்ததினால்

105. எத்திசையிலிருந்தும் இடர்கள் வந்தாலும்
வித்தகன் நான் உனக்குண்டல்லோ
சொத்துக்கள் எல்லாம் உனக்கு நான் தானே
சத்துள்ளவனாகத் தாங்கிடுவேனே
மெத்தனம் என்பதுனக்கு வேண்டாம்
உத்தமனாய் உன் கடமை செய்வாயே

106. வரம் தரும் வல்லவன் நான் தானே உனக்கு
கரம் கொடுத்து நடத்துவேனே–கெட்ட
மரம்போல் நடக்கும் மனிதர்கள் என்
தீரம் வந்தடைந்தால் விடுதலையே

107. கடல் என பரந்துள்ளது என் வார்த்தைகள்
மடல் என எழுதி தந்த அவைகளைக்கை
விடல் என்பது வியாகுலம் தருமே அதை
நாடல் உன் உள்ளத்தில் விடுதலை தருமே

108. வீரன் நான் இருக்கின்றேன் விடுதலை தரவே
தீரன் நான் இருக்கின்றேன் நடு நிலை செய்யவே
சூரன் அவன் வந்தாலும் வீறிட்டுப் போய்விடுவான்
கீரனாய்குழைத்திடுவான் நீ குணமடைவாய் என்மகனே

109. உன்னோடு பேசும் நான் விலகாது காத்திடுவேன்
என்னோடு வாழ்ந்திடவே என் சாயலடைந்திடவே
அன்போடு தந்திடுவேன் ஆவிவரம் அத்தனையும்
இன்போடு இகமதிலே இயேசு நாமம் ஓங்கிடுமே

110. தேடி வருவார் உன்னையே என் நாமம் கண்டு மகிழ்ந்திடுவார்
நாடி வந்தோர் பக்கமெல்லாம் நலமடையச் செய்திடுவார்
கோடி கொண்டு தந்திடுவார் பல நாளும் நல்கிடுவார்
மாடிக்கணக்காய் மலிந்திடவே உன் ஊழியம் உணர்ந்து
வளர்ந்திடுமே

111. சொன்னேன் என் உண்மையை உன் மனதில்
செய்வேன் என் காலத்தில் கணக்காகவே
உண்வாய் என் வழிகளில் ஊக்கமாக நீயுமே
மெய்யாகவே கண்டிடுவாய் என் பெலனே என் மகனே

112. ஸ்தோத்ரம் தேவா துதிக்கிறேன் தேவா
பாத்திரர் நீரே பரிசுத்த தேவா (2 தடவை)
ஸ்தோத்திரம் தேவா

துங்கவன் உம்மையே துதிக்கிறேன் தேவா
பங்கமெல்லாம் மாற்றும் பரிசுத்த தேவா
சங்கமாய் கூடினோம் சர்வதிகாரா
இங்கமர்ந்திடுமே என் நேசராம் தீபா

என் ஆசை விசுவாசம் ஜெபமும் வீணாகுமோ
பொன்னடி தொழுகிறேன் புகழ்ந்தும்மைத் துதிக்கிறேன்
நன்மைகள் தருவீரே நலம் பெறக் காப்பீரே
மன்னவா உம்மையே மகிழ்ந்துநான் போற்றுவேன்

பொன் உள்ளம் என்னிலே புகுத்திடும் இயேசுவே
இன்னிலம்விட்டு நான் இனிமையாய் வாழுவேன்
நன்னில நாட்டிலே நலமுடன் வாழுவேன்
வன்மையை அருளிடும் நல்வாக்கை அருளியே

113. நான் உம்மை நம்பி இருக்கிறேன் (1995 : 113-123)
வெட்கப்பட்டு போவதில்லையே
நான் உம்மைப் பின்பற்றுகிறேன்
பங்கப்பட்டுப் போவதில்லையே

114. உந்தனுக்காய் வாழுகிறேன் நான்
பந்தம் உம்மோடென்றும் கொண்டேன் அல்லோ
விந்தைக்கோலம் கொண்டு வந்தீரே என்
சொந்தம் உம்மில் என்றும் வைப்பேனே—நான்

115. பாவம் என்னை விட்டுப்போனதே—உம்
இரத்தம் என்னைக் கழுவிக்கொண்டதே
சாபம் யாவும் சிதைந்து போனதே—நான்
தாகமானேன் என்றும் உம்மிலே—நான்

116. உம் நேசம் என்மேல் பறக்கும் கொடியோ
உம் பாசம் என்னை இணைக்கும் கொடியோ
உம் வாசம் என்மேல் தவழும் பொடியோ
உம்தாசன் ஆனேன் இன்றும் என்றுமே—நான்

117. அல்லேலூயா பாடி வாழ்த்துவேன்
அல்லல் நீங்க ஆண்டருள்வீரே
தொல்லைகள் என்றும் நீங்கி வாழுவேன்
பொல்லா உலகம் வென்று வாழுவேன்—நான்

118. எந்தன் ஜெபம் கேட்ட நாயகா
உந்தன் கரம் என்மேலல்லவோ
சாய்வேன் உன் மார்பாம் அன்பிலே
தூய்மையாவேன் என்றும் இன்றுமே—நான்
எல்லாம் நேசரே எனக்கெல்லாம் நேசரே
அல்லல் தூவும் அகிலம் முற்றும் எல்லாம் இயேசுவே

119. சுகமும் பெலமும் என் இயேசுவே
பண்பும் பாசமும் என் இயேசுவே
சொத்துக்கள் அத்தனையும் என் இயேசுவே
மெத்தவே நான் என் உத்தமத்திலே—எல்லாம்

120. ஆறுதல் அவரே என் கவலையில்
தேறுதல் இயேசுவே என் கண்ணீரினில்
ஊறுகள் விளைவிக்கும் அத்தனையிலும்
மாறுதல் தருவீர் என் இயேசுவே

121. கைகள் கால்கள் களைப்படையாமல்
வைக்கும் பொருள்கள் குறைபடாமல்
தைக்கும் முட்கள் முரண்படாமல்—என்
மெய்க்கு சமாதானம் நீர் அல்லவோ

122. கண்மணிபோல் காப்பேன் என்றீர்
பண்புடனே என்னை அணைப்பேன் என்றீர்
பாசத்தால் என்னை சுமப்பேன் என்றீர்
நேசத்தால் நான் சோகமடைந்தேன் என்றீர்

123. ஜீவனுள்ள தேவா உம் ஜீவன் தந்தீர் எனக்கே
பாவங்களை நீக்கியே பரவசமாக்கினீர்
பரிசுத்தாவியின் வரங்களால் நிரப்பினீர்
உரிமையோடு வாழுவேன் உந்தன் சேவையதிலே

124. அக்கினிப் பிரகாசம் உள்ள தேவா (1996 :124-125)
இக்கரையில் என்னைக் காணவே
அக்கரைவிட்டு இறங்கினீர்
சுக்கான் இல்லா கப்பலில் சுழன்றடிக்கும் புயல்வேளை
சிக்கித் தவிக்கும் என்னையே
தூக்கி எடுக்க வந்தீரே
விக்கி விக்கிப் பேசினேன் வீரம் இழந்த வேளையில்
சுக்கு நூறு துண்டாக என் கப்பல் உடையும் வேளையில்
திக்கெல்லாம் சென்றிட நான் பலம் கொண்டு எழும்பவே
பக்கமெல்லாம் பார்த்தேன் என் தவிப்புகளால்
சொக்கிப் போனவர் எல்லாம்
என் சுகம் கண்டார் ஆச்சரியமே

125. காலம் இனி குறுகியே உளதென்று
காதினிலே கேட்டதொனி கற்பனையோ
காலம் நீண்டு வந்ததென்று

காலம் கூடி கொண்டு வந்தால் என்
காலமெல்லாம் வந்ததனாலே
காப்பாய்க் கொள்வேன் என் காதலனாய்
                    காக்கவைக்கொள்வேன் நான்

725. சுகம் எப்போது வரும் என்று காலமும் (1997 : 126-127)
        தூரம் காத்திருந்தோர்
சுகம் கொடுக்கும் இயேசுவிடம் சென்று
        வந்தார் கலந்தோரே
சுகம் பெற காத்திருந்த நீண்டதொரு
        முப்பத்தெட்டு ஆண்டுகளாய்
சுகம் பெறாத காரணத்தால் பெலன்
        இழந்தார் திடன் இழந்தார்
சுகம் கொடுக்கும் இயேசு வந்தார் வியப்புடன்
        கேள்வி கேட்டார்—நன்
சுகம் தேட யாருமில்லை என்ற பதில்
        கேட்டதுமே
சுகம் தந்தேன் படுக்கையுடன் நடந்துபோ
        என்றுரைத்த வார்த்தையாலே
சுகமடைந்தான் அப்போதே வீரமுடன்
        நடந்து சென்றான்—அது
சுகமல்ல ஓய்வுநாளை மீறுகிறாய் என்று
        கேட்ட வார்த்தையாலே—என்
சுகம் தந்தோர் தந்த மொழி இப்படியே
        நடந்துசெல்வேன் என்றுரைத்தான் அவன்
சுகம் பெலனாய் மாறினது ஆலயத்தில்
        அன்னியப்பாய் இயேசுவிடம் ஆத்தும
சுகம் என்ற பாக்கியத்தைப் பெற்றான்
        அப்படியே இப்போதும் எனக்கு

சகம் வந்து பெலன் கொள்ள எழுந்துவிட்டேன்
எழுந்துவிட்டேன்

127. சிந்தித்தேன் இப்போதே சீர்குலைக்கும்
காரணத்தை
நொந்து கொண்டேன் காரணத்தால் சகம்
பெறும் வழியும் கண்டேன்
பெந்துஜனம் அத்தனையும் பிழைக்கவழி
செய்திடவே
எந்தன் உள்ளில் இயேசுவந்தார் என்
எலும்புகளை எண்ணிவிட்டார்
சந்ததம் அவர் என்னோடே இருந்துகொண்டார்
எந்தன் நரம்புகளை
விந்தையுடன் அளந்துபார்த்தார் வீரமுடன்
அலசிப்பார்த்தார்
சொந்தமானேன் உன்னிடமே உதறிவிட்டேன்
உன்நோய்களெல்லாம்
கந்தையென எறிந்துவிட்டேன் காசினியில்
வாழ்வதற்காய்
சந்தையின் சரக்குகள்போல் எந்தனிடம்
சேர்ந்துவந்த
முந்தைய பாவங்களெல்லாம் முற்றிலும்
நீங்கினவே
தந்தையாய் இயேசு நின்று சர்வமும்
தாங்கினாரே
நொந்துவிட்டார் சாத்தானை சாபமெல்லாம்
ஒழிந்திடவே
இந்தநாள் எந்தன் நல்லநாளே இத்தரையில்
இனியும் வாழ

வந்துவிட்டார் எந்தனுக்காய் இயேசுவின்
நாமம் ஓங்கிடவே
சொந்தமானேன் அவருக்கே என் வாழ்
நாள் காலமெல்லாம்
பந்தம் பாசம் கொண்டேன் பாரினில்
பலம் கொண்டு வாழ
சுந்தரன் அவர்தான் என் அன்பின்
நேசத்தாலே
காந்தன் அவர்தான் என் சோகம்
பாசத்தாலே
மைந்தன் அவர்தான் தேவமைந்தனாய்
இருந்துவிட்டார்
இந்தக்காலத்திலும் என்பக்கம் அவர்
தான் எனக்கு உண்டு
அந்தக் காலத்துக்காய் ஆத்திரமாகாமல்
அவர்வரும் நாளுக்காய்
அந்தம் மட்டும் காத்திருக்க ஆவலான
ஆசீர்பெற்றேன்–தேவ
சுந்தரன் நான் எப்போதும் சுகம்
பெற்று வாழ்வேனே

128. திரவியம் எனக்குத் தேவை இல்லை
திவ்விய தேவனாய் எனக்கு நீர் இருக்க
திரண்ட ஆஸ்தி செல்வங்கள் சிறப்பாய்
திரட்சியாய் நீர் உண்டல்லோ
திறமையுடன் என்னை தாங்கும்–உம்
திருக்கரத்தாலே என்னை நடத்தும்
அதுவே போதும் எனக்கெல்லா நாளும்
புதுவழி அதுவே எனக்கெல்லா நாளும்

இதுவே என் தேவை எல்லாநாளும்
சூதும் வாதும் தொலைந்து போகுமே

129. இயேசு தேவா என்னோடிருப்பீர்
நாசங்கள் அணுகா அரணாயிருப்பீர்
கோசங்கள் இயேசு இயேசு என்றே
நேசமுடன் குரல் கொடுப்பேன் நானே
வீசும் கமழ் கொண்ட இயேசு தேவா
மாசுகளெல்லாம் மருகிப்போகுமே
காசுகளெல்லாம் உம்கைவசமுண்டே
கூசுதென் மனமே உம்மை குறைசொல்லவே

130. எல்லாம் நிறைந்த இயேசு தேவா
தொல்லைகள் போக்கும் உண்மையாம் தேவா
பொல்லா உலகில் வேதனையில்லாமல் உம்
வல்லமையாலென் உடமதைக் காத்தீரே
சொல்லொண்ணா தீமைகள் தீண்டிடவந்தே
எல்லை இல்லா கருணை என்மேல் பாய்ந்ததே
நல்லவராம் இயேசுவே நல்லவை செய்வீரே

131. தேவனே உம்மைத் தேடுகிறேன்
வேதனை எல்லாம் நீங்கிடவே
போதனை செய்திடும் எந்தனுக்கே
நாதனே நீரல்லால் யாருமில்லை
சூரியன் காலையில் உதித்தாலும்
வீரியம் உம்மிடம்தான் உண்டெனக்கு
காரியங்களெல்லாம் கருத்தில் கொண்டேன்
கோரிய நன்மைகள் தினம் தாருமேன்
குணமுள்ள தேவனே இக்குவலயத்தில் உம்
மணம் வீச நாடுகிறேன் நானிலத்தில்

பணமெல்லாம் தந்திடுவீர் பாரும் நன்மைபெற
சணமே வந்திடுவீர் சரணமையா உம்பாதமே

132. தினமும் தந்திடுவீர் திருஅருள் எந்தனுக்கே
மனமும் வரவேண்டும் மாவல்ல காரியங்கள்
கனமுடன் செய்திடவே கர்த்தனே உம் அருள் வேண்டும்
தனமுடன் நான் நடக்க தற்பாரா உம் அன்பு வேண்டும்
வனமான வாழ்வினின்று வண்ணமான வாழ்வு வாழ உம்
இனமாக நான்வாழவே இசைந்து களிகூர்ந்திடுவோம்
ஈனமான யாவற்றையும் உதறியே தள்ளிடுவேன்
மானமாக வாழ்ந்து இன்ப லோகம் சென்று சேர்ந்திடுவேன்

133. நஷ்டம் எனக்கு வேண்டாம் என் யேசு பொன்யேசுவே
கஷ்டம் எனக்கு வர விடாதிரும் என் யேசுவே
இஷ்டம் போல் போய்விடாமல் உம் வல்ல நல் ஆவியாலே
புஷ்பமாய் மலர்ந்திடவே புண்ணிய வரங்கள் எல்லாம்
அஷ்டதிக்கும் அன்பினால் ஆர்வம் காட்டி வாழவே

134. என்மேல் பறக்கும் கொடி
என் இயேசுவின் தூய அன்பே
இன்மையான விருந்துசாலை
அன்பர் மார்பில் சாய்ந்து செல்வேல்

135. உத்தமர் கூடாரமே உயர்மரங்களால் ஆனதுவே
இத்தரையில் அவர் மட்டுமே என்பக்கம் சாய்ந்துவந்தார்
சத்தியமாய் நான் செல்லுவேன் எந்தன் இயேசு பாதையிலே

136. புறப்பட்டு வருகிறார் புண்ணியனாம் என் இயேசுவே
பறந்து வருகுதையா புண்ணியர்களைச் சேர்த்திடவே
மணக்குதே அவர் மேதினி வெள்ளைப் போளவாசனையால்
வணக்கம் தந்தே வந்துவிட்டேன் வள்ளலாம் என் ராஜாவே

கணக்குகளெல்லாம் முடித்திட்டேன் காதலா நீர்
தந்ததெல்லாம்
சுணக்கமின்றி செய்து தீர்த்தேன்
மறந்து நான் இருந்ததில்லை மன்னவா இயேசுதேவா
சிறந்த இடம் தந்திடுவீர் சீர்பெறவே செய்திடுவீர்

137. நம்பிக்கையோடிருக்கின்றேன்
உம்மிடம் என் பங்குண்டல்லோ
செம்மையானோர் சங்கத்திலே
செம்மல்லாம் என் இயேசுவோடே
செம்மையாய் இருந்திடுவேன்
சீர் சிறந்த தேசத்திலே (1998 : 138-149)

138. தொட்டேன் நான் இயேசுவே
சுகமானேன் அவராலே
விட்டேன் என் பாவங்கள்
விண்மகிமையில் சேர்ந்தேனே
வஸ்திரம் தொட்டேன் இயேசுவின்
வழியினில் வந்தேன் அழைத்த அவர் பாதம்
அமர்ந்து நான் வாழ்வேனே

ஒருவராலும் சொஸ்தமாக்கப்படவில்லை
இயேசுவாலே சுகம் பெற்று வாழ்கிறேன் நான்

வல்லமை புறப்பட்டு வந்ததெனக்காய்
வல்லவரால் சுகமானேன் வாழ்ந்திடவே நான்

மறைந்திடாமல் இயேசுவே நான்
உம் மனம் காண வந்துவிட்டேன் உம்மண்டையே

உம் வார்த்தையால் திடம் கொண்டேனே
இரட்சிப்பின் சமாதானம் எனக்குத் தந்தீர்
துதிக்கிறேன் தேவனே உம் நாமத்தையே

ஸ்தோத்திரம் சொல்லுவேன் என் நாளுமே
மதிக்கிறேன் தேவனே உன் அன்பதையே
ஸ்தோத்திரம் என்றென்றும் என் இயேசு தேவனே

139. ஆகாய விமானம் ஏறணம்
ஆண்டவர் ராஜியம் போகணம்
ஆகானின் வழியை வெறுக்கணம்
ஆண்டவர் வரும்போது ஏகணம்

140. இருதய சிகிட்சை செய்ய வேண்டும் என்ற
இருமனமெல்லாம் மாறவேண்டும்
திரு இருதயப்படி நடக்கவேண்டும் – உன்
விருப்பங்களெல்லாம் விலகவேண்டும்

141. தானியேலின் தேவனே தேவன்
என்னை என்றும் நடத்திடுவார்
மேதினியில் உள்ள நாளெல்லாம் அவர்
வேதனைகள் விலக்கிடுவார். – நான்

142. இயேசு என் துணை இதற்கு நிகர் வேறில்லையே
பாசம் காட்டும் அவரிடம் பரிவு காட்டும் அன்புண்டே
நேசகரம் அவரிடமே தோசம் எதுவுமில்லையே
வீசுகின்ற மணமே அவர் கருணை உள்ளம் அதுதானே

143. ஏன்தான் காலதாமதமோ
சான்றுகள் தான் தேடுவாரோ
ஊன்றுகோலாய் அவர் இருக்க
தோன்றும் அவர் பாசம்தான் போதாதோ

144. புது இருதயம் தந்திடுவேன்
புனிதனாக வாழ்வதற்காய்
புத்தம் புதிய வழிகளிலே–இப்
புவிதனில் நீண்டு வாழ்ந்திடுவாய்

145. பொன் போன்ற சோதனைகளா
நன்மனம் உன்னில் வந்திடவே
பன்மனம் உனக்கு வேண்டாம் தானே
என்மனம் கண்டு வாழ்ந்திடுவாய்

146. பாடுகள் எழுந்து வரும்போதும்
பதட்டங்கள் மனதில் கொள்ள வேண்டாம்
கோடுகள் போட்டு அவைகளைக்
குறிப்பிட்ட எல்லைக்குள் நிறுத்திடுவேன்
மேடுகள் பள்ளங்கள் தாண்டிடுவாய்
மேதினியில் பலமாய் நின்றிடுவாய்
வீடுகள் பலதும் பரலோகத்தில்–நல்ல
வீடொன்றை உனக்காய் நான் தந்திடுவேன்
கூடுவிட்டேகும் நாட்கள் வரை இங்கே
குதுகலத்தோடே வாழ்ந்திடுவாய்
சூடான வார்த்தைகள் வரும்போது மிக
சாடாது பணிவாய் நடந்திடுவாய்
மாடாக மக்கள் மருண்டெழுந்தாலும்
நாடெல்லாம் நறுமணம் வீசச் செய்வேன்

147. நான் உன் தேவன்
என் சகாயம் உனக்கே உண்டு
என் சுகம் உன் நாளங்களெல்லாம்
என் பெலன் உன் நாடிகளிலெல்லாம்
என் சொற்படி செல்கின்றனவே
நானே உன் சகாயர்
நானே உன் பெலனானவர்
என் வழியில் நடத்திடுவேன்
உன் பெலன் குறைக்க எவருமில்லை
வன்மனம் கொண்டு எழுபவரெல்லாம்

என் சொல்வன்மையால் தகர்ந்து போவார்
நானே இதைச் சொல்லும் தேவன்
நானே நடத்தி இதைக் காட்டிடுவேன்
விரைவில் வரும் நாளொன்றிலே
அறிந்து கொள்வாய் இதை நீயே
கரை கடந்து உன்னிடம் வருபவர்
சுருங்கி நின்று போய் விடுவார்
மறுமொழி உனக்குக் கூறுகிறேன்
மறைபொருள் உனக்கு இல்லையப்பா
குறைச் சொல்லிக் கூறி நிற்போரெல்லாம்
நிறமெல்லாம் மாறிப்போய்விடுவார்
கறையுண்டென்று உன்னைக் காண்போரெல்லாம்
கரைபுரண்டவராய் ஒதுங்கிடுவார்

148. சிந்தனையால் சிறிதும் கலங்காதே
சிறப்புடன் நின்று நான் நடத்திடுவேன்
சிறிதும் பெரிதும் உன்னில் காண்போர்–அவர்
சிரம் கனிந்து வணங்கி சென்றிடுவார்
சினம் கொண்டு நீ எதுவும் செய்வேண்டாம்
சிறிதும் பெரிதும் நானே செய்து
சிதறிப்போகப் பண்ணிடுவேன்
சித்தம் எது என்னுடையது என்பதைச்
சிந்தனை செய்யா மாந்தரெல்லாம் சீக்கிரம்
சிகரம் இழந்திடுவார் மறைந்திடுவார்
சிதையும் வழியில் சிக்கிடுவார்
சினம் பலன் அடையத்தீண்டிடுவார்
சிந்தனையால் சிறிதும் கலங்காதே
சிறுவர் உன்னிடம் எழுந்து வந்து
சின்ன சின்ன காரியங்களை

சிதைந்து போலக் காண்பித்து நின்றிடுவார்
சிற்பம் போகும் செயல்களை
சிறை வைத்து உன்னை உயர்த்திடுவார்
சிந்திப்போன செயல்களையெல்லாம்
சிறிதும் தளராமல் அழித்திடுவார்
சினேகம் காண்பித்து உன்னோடு சேர்ந்து நின்று
சிறப்புடன் உன்காரியம் நடத்திடுவார்
சிப்பிக்குள் இருக்கும் முத்துப்போல
சிதறாமல் உன்னைக் காத்திடுவார்

149. ஏனப்பா உனக்கு இவ்வெண்ணங்கள்
யேசு நாதராய் நான் இருக்கிறேனே
ஏகனாய் நான் உன்னைக் காணவில்லை
எப்போதும் உன்னோடு நான் உண்டல்லவோ
ஏழை நீ என எண்ண வேண்டாம்
எதுக்கும் நீ அழுது புலம்ப வேண்டாம்
ஏசுவோர் எத்தனை எழும்பினாலும்
எவ்வளவும் கரையாமல் உன்னைக் காப்பேன்
எத்தனை பெலன் உனக்களித்தேன்
எண்ணங்களையெல்லாம் சிறை செய்தேன்
என்றென்றும் உன்துணை நான் தானே
என்னை நீ பாராமல் எவரை நீ பார்க்கிறாய்
எண்ணினேன் உன்னையே என் தலை தாங்கி
என் வழியில் உன்னை நான் நடத்திடுவேன்
என்ஜீவப் பாதையில் நித்தம் மகிழச்செய்வேன்
ஏன் நீ கலங்கவேண்டும் ஏக்கம் ஏன் கொள்ள வேண்டும்
எந்தன் பாதை உந்தனுக்கே எப்போதும் உண்டல்லவோ
என் வாக்கு உந்தனுக்கே எகமாய் வந்ததல்லோ
என் முகமே பார்த்திடுவாய் ஏக்கமெல்லாம் ஏகிடுமே

150. ஆசைப்பட்டேன் உம்மையே என் (1999 : 150-155)
நேசக்கரம் கொண்டணைத்திடவே
பாசத்தால் பிணைபட்டுவிட்டேன் உம்
வீசும் கமழ் கொள்ளும் அன்பினாலே

கொஞ்சும் அடியானுக்கு உம் பரந்த
நெஞ்சம் எனைத்தாங்கும் சுமைதாங்கியோ
மிஞ்சும் எல்லா வேகமும் அதி வேகமாய்
தஞ்சம் புகுந்திட இங்கு வந்ததையோ

தூசியாம் உம் அடிமை நானே
வீசிடும் வெளிச்சத்தில் வந்தணைந்தேன்
பூசிடும் என்னில் உம் தூய அன்பையே
மாசில்லாமல் பெற்றேன் நான் வாழ்ந்திடவே

வந்தேனையா உம் பிரசன்னம் இன்று
தந்தேனையா என் உள்ளம் உம் வீடதாக
சிந்தனை சிதறாமல் என்னைக் காப்பீரே
சுந்தரன் நான் உன் பாதம் வந்தேன்

என்றென்றும் என்னில் நிலைத்திடுவீர்
என்றென்றும் உம்மில் நான் வாழ்ந்திடவே
என்றென்றும் பாமாலைப் பாடிப்புகழ்ந்தே
என்றும் மகிழ்ந்தும்மை ஆராதிப்பேனே

வீட்டிலிருக்கின்றேன் வேதானந்த பூமானே
நாட்டிலிருக்கின்ற சங்கடங்கள் மாற்றுமே
பூட்டிவைத்தெம்மை புனிதமாகக் காத்திடுமே
சூட்டி உம் கிரீடத்தால் கிருபைப் பொழியவே

151. ஏண்டா நீ என் வழியில் இப்போ
வேண்டா வெறுப்புடன் வெகுளியுடன் செல்லுகின்றாய்—பாவத்

தீண்டாமை உனக்கு வேண்டும் பாவவழியில் போக வேண்டாம்
மாண்டார் எழும்பும்போது நீயும் பறந்திடுவாய் மேகத்திலே

152. உக்கிரம் கொள்ளாதே உடனிருப்பேன் எப்போதும்
விக்கினம் உனக்கில்லையே வீட்டுவாழ்வு உனக்கல்லவோ
சிக்கெல்லாம் சிதைந்திடுமே உன் இயேசு நானிருக்க
திக்கெல்லாம் முழங்கிடுதே திருஇயேசு நாமம் என்றே
மிக்கவே வந்திடுவோர் உன் பக்கமெல்லாம் தேவ பக்தரெல்லாம்

153. மறுவாழ்வு தேவை என மாந்தரெல்லாம் ஓடிவந்து
சறுக்கலான பாதை விட்டு சரணாக என் வசமே
முறுமுறுப்பில்லாமல் முன்தலையில் என்னைவைத்து
விறுவிறுப்பாக தவம் செய்து வீண்காலம் போக்கிடாமல்
சுறுசுறுப்பாய் சுகம் தேடி சுந்தரனாம் என் பாதம் வந்து
மறுபிறப்பு பெற்றவராய் மனந்திறந்து வாழ்வீரானால்
பொறுத்திருந்து புண்ணியங்களைப் புகழ் பெறவே செலுத்துவீரேல்
நறுமணமாம் நாதர் இயேசு நற்செய்கை தன்னில் கண்டு
தேறுதல் தன்னில் கண்டு தெய்வீகம் மனதில்கண்டு
நீறுதல் தன் பாவத்தில் கண்டு நித்தம் நல் சுகம் கண்டு
நூறு நூறாம் நலம் கண்டு நீண்டகாலம் வாழ்வீரன்றோ

154. வல்லமை தேவனுடையது தான்
எல்லையில்லா நன்மைகள் அதிலுண்டே
சொல்லொண்ணா சந்தோஷம் நிறைந்து வழியுமே
வெல்லுவாய் லோகத்தை அதன் ஆயுதம்
செல்லுவாய் சொற்லோகம் அதன் பாக்கியம்
நல்லவை செய்யவே நானிலம் வந்தீர்–உம்
வல்லமை தேவனுடையதே

155. வாலவயதின் குமாரர் உன் வலபக்கம் வருவார்
ஞாலமீதினை நற்பயனுள்ளதாக்குவார்

கோலமெல்லாம் செய்வோர் குணம் மாறியே நிற்பார்
சூலம் கொண்டு வந்தவன் சுறுசுறுப்பாய் ஓடுவான்
பாலங்களைத் தாண்டி அவன் பாதாளத்தில் விழுவான்
பயம் உனக்குத் தேவை இல்லை
நயமான வாழ்நாள் உன் காலமெல்லாம் உண்டல்லவோ
புயமதாய் நானிருப்பேன் புண்ணியம் பல செய்திடவே
குயவனாய் இருந்திடுவேன் குணமுள்ள கலயமதாய்
சுயமெல்லாம் மாற்றி சுகம் தந்து காத்திடுவேன்
வயலோரம் வந்தவர் தம் வழியில் கண்ட மணிகளையே என்
பயமில்லாமற் பறித்தனர் பதம் பார்த்து உண்டனர்
கயவர் கண்ணில்பட்டபோது கண்டபடி பேசினார்கள்–நானோ
தயவான வாக்கு கூறி என்
தூய பக்கம் சேர்த்தேனல்லோ (2000 ம் வருடம்)

156. திருமறை ஏந்தித் தெருக்களெல்லாம் நடந்தால்
வரும் வினைகள் மாய்ந்தே மாந்தர் யாவரும் சேர்வார்
பெரும் தீமைகள் பிறரிடம் ஒன்றுமே காணாமல்
தரும் பதவிகள் யாவும் பறிபோய்விடுமே
மருவி நிற்கும் மகிழ்ச்சி அழியுமே
கருத்துடன் வேதம் கைக்கொள்ளுவீரே

157. சார்ந்தேன் யேசுவே உம்பாதம் வீழ்ந்து
சோர்ந்து போன என் இதயம் தன்னையே
நேர்ந்து கொண்ட என் வாழ்வை எண்ணியே
தேர்ந்து நின்றிட அருளுவாய் பரனே

158. இயேசுவின் இரத்தம் எந்தன் உடலில்
இயேசுவின் இரத்தம் எந்தன் தோல்களில்
இயேசுவின் இரத்தம் எந்தன் இருதயம்
இயேசுவின் இரத்தம் எந்தன் நரம்பில்
இயேசுவின் இரத்தம் எந்தன் முட்டுகளில்

இயேசுவின் இரத்தம் எந்தன் எலும்புகளில்
இயேசுவின் இரத்தம் எந்தன் உள்ளம்
இயேசுவின் இரத்தம் என் மூளை எங்கிலும்
இருந்தே உறவாடி என்னை கண்பார்க்குதே

159. சலனம் செய்து சாபமிடும் மக்களெல்லாம்
வலப்பக்கம் நிற்கமாட்டார் இடபக்கம் சேர்ந்திடுவார்
பலகாலம் பேசினவர்கள் வேகமுடன் மறைந்திடவே
விலகிப்போவார் அவர் வீணருடன் சேர்ந்து நின்றே
புலமை இல்லா பூவுலகோர் தவறியவர் தம் வழியின்
நிலமை மாறி மறைந்திடுவார்
நிலம் ஏதுமில்லாமல் நிற்கதியாய் போய்விடுவார்
வலம் வந்த மாந்தரெல்லாம் மன மகிழ்ந்து பூரிப்புடன்
நலமுடன் பேசிடுவார் நாதன் இயேசு நாமத்திலே

160. தீர்த்திடுவார் நோய்களைப்
பார்த்திடுவாய் அவர் அற்புதம்
சேர்த்திடுவாய் அவர் மக்களை
பூர்த்தி செய்திடுவார் பரலோகிற்காய்

161. உன் பிறப்பை நானறிவேன்
உன் பூர்வீகம் என் உள்ளத்தில் உள்ளதே
உன் பூர்வப் பிதாக்களை நான் கண்டறிந்தேன்
உன் சர்வாங்கமும் என் மனதின் தோற்றமே

162. ஏன் பிறந்தாய் என் மகனே
நான் பிறந்த காரணமறிவேன்
வான் அறிந்த உண்மையல்லோ
நான் பிறந்த நாளதினிலே

163. உன் சுற்றம் பல வழியில்
உன் உற்றார் தம் வழியில்

உன் நண்பர் என் வழிகளில்
உன் நண்பன் நான் உதித்தேன் அல்லோ

164. சகோதரப் பாசத்தால் நான் வந்தேன்
சோதரர் சோர்ந்து போய் தூற்றி நின்றார்
வேதகர் வித்தெல்லாம் மாளவிட்டார்
காத்கர் என்னைக் கண்விட்டொழிந்தார்.

165. உன் நினைவு எனக்கு ஏன்
உன் கனவில் ஏன் நினைவோ
உன் கண்ணில் நான் தோன்றுவேன்
உன் மண்ணில் நான் தோன்றியே

166. வேண்டாம் வெறுப்பு வேண்டாம்
மாண்டார் வருவார் திண்ணம்
பூண்டார் என் அழகதனையே
மீண்டார் கண் வருவேன் திண்ணம்

167. எத்தனை நாட்களாய் உனைத் தேடினேன்
எத்தன் என்றுன்னைத் தள்ளாமலே
வித்தகண் பாதம் வருவாய் என்றே
அத்தனை துன்பமும் பட்டேன் நானே

168. செய்தி உனக்கொன்று சொல்லுகிறேன்
மெய்யாய் உனக்கதைப் புகட்டிடவே
உய்யும் வழி நான்தான் உந்தன்
பொய்யாம் பாதைவிட்டகன்றிடவே

169. இயேசு என்னும் நாமத்தில் நான் வந்தேன்
பேசும் உன் மொழி கேட்டுப் பார்க்கின்றேன்
வீசும் மணத்துடன் வாழ்ந்தேன் அன்றோ

170. எத்தனைத் துன்பங்கள் என் அங்கமதில்
அத்தனையும் உன் மேல் வைத்த ஆசைதானே

புத்தனாய் உன்னை மாற்ற அவை வேண்டுமே
சுத்தனாய் வாழ்ந்திடச் செய்திடுவேன்

171. சோகம் ஏன் என் மகனே
சோர்ந்து நீ போக வேண்டாம்
சோதனைகளத்தனையும் நான் தோன்றி வென்றிடுவேன்
வேதனைகள் அணுகாமல் தினமும் உன்னை நான் காப்பேன்

172. ஏன் இப்பாடுகள் என்றெண்ணிப்போகாதே
வான் தேவன் உன்னை என்றும் வாழவைப்பார்
மான்போன்ற தாகமெல்லாம்
கான் மழையால் அகற்றிடுவேன்

173. கடல் கடந்து சென்று வந்தாய்
கடந்தவைகள் பழமையாய் மாறிடவே
வடகடல் பார்த்து வந்தாய்
சடலம் மறுரூபமாய் மாறி விட்டாய்

174. கேட்போர் பலர் பலப்பலப் பேசுவார்
மீட்பர் நான் என்பதைக் கவனியாமல்
நாட்கள் அதைக் காணச் செய்திடுமே
தட்பம் வெட்பம் அறியாமல் வாழ்ந்திடுவாய்

175. பக்கத்தில் நான் உண்டு அகலாமல் காத்திடவே
அக்கம் பக்கம் பார்த்திடாதே ஆசையான என்மகனே
சக்கந்தக்காரர் வந்து உன்னை மோசம் போக்கி
தக்கவைக்க வந்திட்டாலும் என் பாசம் உன்னைக் காக்குமே

176. எட்டிப் பார் என் முகத்தை கருணையுடன் நிற்கிறேன்
கெட்டியாய் என் கரம் பிடித்தே முத்தமிட்டு வழ்வாயே
வெட்டியாக வாழ மாட்டாய் உன் பக்கம் நானும் உண்டே
முட்டி நின்று போகமாட்டாய் முழுவதும் மகிழ்ந்திடுவாய்

177. கற்றுத்தந்த என் உண்மையை
கற்றுக்கொடு என் மகனே
வெற்றியுடன் நடந்திடுவேன்
சுற்றிநிற்போர் நலம் பெறவே

178. வெற்றி வழி காண்பித்தேன்
முற்றிலும் வளர்ந்திடவே
நெற்றிப் பட்டம் வைத்திடுவேன்
நெடுந்தூரமாய் நடந்திடுவேன்

179. விசாலமான வழிதனிலே
விசாலமாய் சென்றிடவே
விசாலமான சேவை தந்தேன்
விசாலமாகச் செய்திடுவாய்

180. கேள்வி கேட்டு நடக்க வேண்டாம்
வேள்வித் தீ வைக்க வேண்டாம்
நள்ளிரவும் காத்திடுவேன் – உன்
முள்ளின் வாழ்வில் தோன்றிடுவேன்

181. விசுவாசம் வேண்டுமப்பா வீரமாய் நடப்பதற்கு
காசில்லாமல் நடக்க வேண்டும் கர்த்தர் வழி காண்பதற்கு
பசுவைப்போல் பழகவேண்டும் என்பாலுண்டு வாழ்வதற்கு
கொசுவில்லாமல் போகவேண்டும் என்குவலயத்தில்
சேர்வதற்கே

182. கண்டேன் உன்னை அன்றைக்கே
கண்காணா நாட்களிலே
விண் மகனாய் அழைத்தேன் அன்றே
மண்ணில் நீ வரும்முன்னே

183. வந்திடுமே போதனைகள் புனிதமதைக் காத்திடுவாய்
தந்திடுவார் மனம் நிறைவாய் பூர்வ வழி திறந்திடவே

பந்துக்கள் பறந்திடுவார் பாசம் விட்டு நேசம் கொண்டு
சொந்தம் எதுவும் பேசவேண்டாம் என் சொந்த மகனாய்
வாழ்ந்திடவே

184. என்று உன்னைக் கண்டேனோ
அன்றே உன்னைக் கண்டெடுத்தேன்
என்று உன்முன் எழுந்தேனே
அன்றே உன்னில் வாழ்ந்தேனே

185. நினைக்கவேண்டாம் முந்தினவைகளை
நனைக்கவேண்டாம் உன்கண் நீரினாலே
வனைக்க உன்னைத் தெரிந்தெடுத்தேன்
வான் மகனாய்க் கண்டெடுத்தேன்

186. பலர் வருவார் உன்னைக் காண
சிலர் சேர்வார் உன்பக்கம்
மலர் வளயம் வைப்பவர்கள்
கலர் கண்டு விலகிடுவாய்

187. விலகிடுவார் விரைந்திடுவார்
மலமிளக்கும் மருந்தைப்போல
குலமறிந்து அணைத்திடுவாய்
புலமையுடன் புரிந்திடுவாய்

188. உணர்ந்திடுவேன் உண்மையுடன்
கணப் பொழுதில் கண்டறிவாய்
பணப் பெருமையுடயவர்கள்
சணப்பொழுதில் மறைந்திடுவார்

189. தன் ஆசை கொண்டவர்கள்
உன்னை விட்டு விலகிடுவார்
மண் ஆசை கொண்டவர்கள்

உன் மண்ணையும் கேட்டிடுவார் – ஆனால்
புன்னகையுடன் திரும்பிடுவார்

190. வருகுது வருகுது பெருமை வருகுது
உருளும் பந்து போல நெகிழ்ந்து வருகுது
பெரிதாய் வருகுது பண்பால் மாறுது
சிறிதாய் சிதைந்தபின் சிறப்பாய் வருகுது

191. குணமெல்லாம் கூழுக்காக அடகு வைத்தவன்
மணமெல்லாம் மாயையாக காணக் கூடாதவன்
பணமெல்லாம் பஞ்சாகப் பறந்து
பிணமாய் மாயுமுன் வந்து சேருவான்

192. நிழலின் நம்பிக்கை நிகண்டுகள் கடந்தபின்
சுழலில் அகப்பட்டு சொகுசெல்லாம் இழந்தபின்
மழலை மொழிக்கும் மானம் இழந்தபின்
தழல் குளிர்ந்து தானாக இறங்கி வந்திடுவான்

193. உயர்த்துவேன் உன்னையே தூணாக
உணர்ந்திடவே உன்னத மாளிகைக்கு
உயரமாய் எழும்பிடவே
உயரமாம் மலையின்மேல் மகிமையாய் உயரவே

194. எண்ணம் எதுவும் வேண்டாம்
திண்ணம் என் தீர்மானமே
விண்ணவர் வேதங்கள் வீரமாய் முழங்கிடவே
மண்ணாம் மாநிலத்தில் வெளிப்பட்டு எழும்பிடுவாய்

195. வேண்டுமே என்ற கலக்கம் ஏன்
வேண்டாதவைகள் என்ற தியக்கம் ஏன்
வேண்டுதல்கள் நான் கேட்டேன் – உன்
வேண்டுதல்கள் அருள் செய்வேன்

196. என் விண்ணப்பம் கேளும் தேவா
என் ஜெபத்தை ஏற்றுக்கொள்ளும்
என் குறையினால் ஏதும் ஏழா – இயேசுவே
என் வேண்டுதல் அருள் செய்யுமே

197. ஏழைகளைக் கவர்ந்திடவே
கோழைகளைக் கூப்பிடவே
ஈழை இருமல் நீங்கிடவே
சூழையில் விழாமல் காத்திடவே – என் விண்ணப்பம்
கேளும் தேவா

198. பாவிகளை மீட்டிடவே
கூவி வந்தேன் இயேசு தேவா
தாவி வந்து அணைத்திடவே
காவி வேடம் களைந்திடவே என் விண்ணப்பம் கேளும் தேவா

199. சாத்தானை அடக்கிடவே
மாத்தானை மயக்கிடவே
தோத்தானை துரத்திடவே
நாத்தானைப் பரம் சேர்த்திடவே–என் விண்ணப்பம்
கேளும் தேவா

நாத்தான் – கொடுப்போன்

200. பணம் எனக்கு வேண்டும் தேவா
பிணங்களெல்லாம் எழுப்பிடவே
வணங்காமாந்தர் உம்பாதம் வந்து வணங்கி நின்று
வாழ்ந்திடவே – என் விண்ணப்பம் கேளும் தேவா

201. வடநாடு மாநிலங்கள் மங்களமாய் மாறவேண்டும்
குடநாட்டுக்கோத்திரங்கள் கொல்கொதாவைப் பார்க்கவேண்டும்
மடங்கொண்ட மாந்தரெல்லாம் மகிபனண்டை வரவேண்டும்

வடங்கொண்டு இழுப்போரெல்லாம் உமதன்பால் இழுபடவே
என் விண்ணப்பம் கேளும் தேவா

202. சூத்திரங்கள் கூறுவோரும் குணப்பட்டு வரவேண்டும்
சாத்திரங்கள் பார்ப்பவரும் சரணடைந்து வர வேண்டும்
பாத்திரங்கள் சுமப்போரெல்லாம் பரமனண்டை வரவேண்டும்
நேத்திரமாய் பாதைகளில் சிறப்புடனே சேரவேண்டும்
என் விண்ணப்பம் கேளும் தேவா

203. ஒளிந்து கொண்டு கிடப்போரெல்லாம் உன்னதனையடைய வேண்டும்
ஒளிமங்கி இருப்போரெல்லாம் நற்சுடராய் உதிப்பதினால்
ஒளிபெற்று வாழவேண்டும் உள்ள இருள்மாறிடவே சுடர்
ஒளியாய் ஒளி வீசி வாழ்ந்திடப் பரம சேர்ந்திட
என் விண்ணப்பம் கேளும் தேவா

204. இன்று நான் கூப்பிட்டேன் எல்லா வார்த்தை கேளும் தேவா
என்றும் நான் கூப்பிடுவேன் பதில் தந்து அருளும் தேவா
நன்று என்று கண்டவைகள் என் அருகில் அமையும் தேவா
வென்று என்றும் வாழ்ந்திடவே வேதனைகளை அகற்றிடவே
என் விண்ணப்பம் கேளும் தேவா

205. நல்ல நாள் வந்ததுவே
நல்ல பலன் கிடைத்ததுவே
வல்ல வழியில் வந்தடைந்தேன்
வல்லவனே கருணை கூர்வாய்

206. பொல்லாங்கன் வருகிறான் என்னிடம் ஒன்றுமில்லை
நல்லவனாய் வாழவிடான் படுநியாயம் செய்திடுவான்
சொல்லெல்லாம் கெடுத்திடுவான் துணை எதுவும் செய்யமாட்டான்
மல்லாக்காய் விழுந்திடுவான் நல் இயேசு நாமத்தினால்

207. குறை கண்டீர் எந்தனிடம்
மறைநெறிக்குப் பாதகமாய்—நானோ
நிறைபெற்று வாழ்ந்திடவே
முறைப்படியே காத்திடுவீர் !

208. வேடம் போட்டு வருகின்றான்
மாடம் கட்டி வாழுபவன்
சூடம் போட்டால் ஓடமாட்டான்
நாடகம் போட்டு ஓட்டிடுமே

209. மக்களின் எண்ணம் மாறுபட்டுள்ளது
மக்களின் மனதை மாற்றம் நீ செய்திடுவாய்
மயக்கம் நீங்கி தெளிவடைந்திடவே
தயக்கமின்றிப் பேசிடுவாயே

210. கூட்டு ஊழியர் குணமுடன் வருவார்
நாட்டு மக்கள் நலம்பெற வருவார்
வீட்டுப் பெண்கள் வீரமாய் எழுவார்—வேறு
நாட்டம் கொண்டவர் நழுவிப் போவாரே

211. நழுவிப் போவாரால் நலம் கெட்டும் போகாதே
வழுவிப் போவோரை வளம் பெறவொட்டாதே
தழுவி நிற்போரை தயை கொடுத்து வாழ வை
அழுகிப் போவோர்கள் அகம் சிரித்து வந்திடுவார்

212. கொல்கொதா நேசத்தை எங்கும் பரப்பி
அல்லல் படுவோரை அகம் கொண்டு நேசி
தொல்லை கொடுப்போரை கவலையில் எடாதே
பல்லைக்கடித்துக் கர்த்தரை கனம்பண்ணு

213. ஐக்கிய அமைப்புகள் சிக்கலில் விழாமல்
மக்கிய வழிகளை மாற்றியே அமைத்திடு

தொக்கிய பேர்களெல்லாம் தொல்லை கொடுக்காமலே
முக்கியமானோரை முகம் கண்டு செயல்படு (1995–டிசம்பர் 31)

214. பலநிறம் சேர்ந்தது ஒரு புது நிறமாகிடும்
சில பலம் சேர்ந்தது ஒரு பெரும் பெலமாகிடும்
வல புறம் வந்தவர் வாசனைத்திரவியங்கள்
புலன் நெறியடைந்தவர் உன் பக்கம் இருக்கட்டும்

215. காலை எழுந்தவுடன் கர்த்தரை நாடினேன்
வேலைகள் யாவுக்கும் விழிப்புடன் இருந்திடவே
மாலைவேளையில் மகிபனோடு நடந்துசென்றேன்
இலையசையா இரவுதனில் இதயமவர் தாங்கினாரே

216. வலை போட்டுத் தேடி நின்றேன்
மலையாமல் நிற்பவரை
கலையெல்லாம் கற்றவரை
விலை கொடுத்து மீட்டு விட்டார் என இதயமதில்
தங்கிவிட்டார்

217. குலை போட்ட வாழை நட்டார்
குலை போடும் தேங்காய் கண்டார்
தலைமுறையாய் தயங்கமாட்டார்
நிலைகுலைந்து ஓயமாட்டார்

218. மலைபோல் எழும்பி நின்றார் மார்க்கமொன்றை ஆரம்பித்தார்
குலையாமனம் கொண்டெழுந்தார்
தொலையாம் ஆண்டை முடித்து விட்டார்
பாலைவனம் விட்டுப்பரன் பாதம் சேர்ந்தே மறைந்து விட்டார்

219. கோலாகல நாட்களெல்லாம் குவலயத்தில் கொண்டு வந்தார்
வாலாகாமல் தலையாகவே வாழ்நாளெல்லாம் வாழ்ந்து வந்தார்
மேலால் அவை நடந்திடவே வாழ்த்தி அதைச் செய்து வைத்தார்
பாலாய் ஓடும் பரலோகத்தில் பரனின் பாதம் சேர்ந்து விட்டார்

220. விட்டுப்போனார் விலையாம் மலைபோல் பாதைதனை
வீட்டிலுள்ளோர் பெற்றுக்கொண்டார் வீரமுடன் தொடர்ந்திடவே
நாட்டில் இரு தங்கைமார்கள் தோள்கொடுக்க எழுந்து வந்தார்
காட்டில் நிற்போர் என்றிராமல் கரம் கொடுத்து தாங்கிக்
கொண்டார்

221. வந்தேன் இயேசுதேவனே நான் கைகளையும் கால்களையும்
தந்தேன் உம் சேவைக்காக தொட்டு ஜெபம் செய்திடவே
நொந்து போனாலும் நடந்து சென்றே அணைத்திடுவேன்
அன்பர்களை
வெந்த உள்ளங்கள் உமது சரண் அடைந்திடவே

222. நேசிக்கிறேன் இயேசுவே உம் தாழ்பணிந்து அர்ப்பணித்தே
வாசிக்கிறேன் உம் வார்த்தைகளை பொருள் கண்டு அறிந்திடவே
பூசிக்கிறேன் உம் சமுகம் தன்னை புனிதம் பெற்று வாழ்ந்திடவே
யாசிக்கிறேன் மக்களிடம் உம் சபைகள் எங்கும்
அமைந்திடவே

223. படகில் அசைந்து பரம செய்தி கொடுத்தவரே
கடலில் கரையேற்றி வந்தவரை
வடவைத்தீயில் அழிந்திடாமல் எங்கள்
மடமை மைந்தரை அன்புடன் அணையுமே

224. நொந்து நிற்கும் மைந்தனே
சிந்தையினால் சிதறிடாதே
விந்தையொன்று செய்திடுவேன்
நிந்தை யெல்லாம் அகன்றிடவே

225. எட்டிப் பார்க்கிறேன் உன்னை யாரும்
தட்டிச் செல்லாமல் தடம்பார்த்து நிற்கிறேன்
சுட்டிக்கொண்டு போகலாம் என்பவன்தானே
தட்டி வீழ்ந்து தடுமாறிப்போவான் தாமே

226. மேன்மையடைய உனக்காய் ஜெபிப்பவர் பலர்
புன்னகையுடன் பூரிப்பவர் எல்லாம் எதிராய்
சன்னதம் பண்ணுவோரை வீழ்த்திவிடுவார்
உன்னதமாம் வாழ்வுதானே உனக்காய் இருக்குதே

227. பதற்றம் வேண்டாம் என் மகனே உன் பாரிசமாய்
நானுண்டல்லோ
பதற்றத்தோடு வாழ்வோரை நீ பக்தர்களாய் மாற்றிடுவாய்
பதற்றம் உள்ள காலத்தில் நான் தேவமகனாய் தோன்றியன்றோ
பதற்றம் உருவாக்கி யூத மார்க்கமதில் வெற்றி கண்டேன்

228. பதறவேண்டாம் என்மகனே பார்தனில் நீ இருக்க
கதறியழும் மக்களெல்லாம் கர்த்தர் என்னை உணர்ந்திடுவர்
உதறித்தள்ளு உலகமதை உன் உள்ளத்தில் வைக்க வேண்டாம்
இடறி விழும் மாந்தரால் உன் கண்கலங்க விடமாட்டேன்

229. அழுவோரெல்லாம் அன்பர் அல்ல அகம் கண்டால்
அறிந்திடுவாய்
விழுவோரெல்லாம் தடம் புரண்டோரல்ல புதிதாய் தடம்
வந்தவர்கள்
வழுவிடுவார் கண்டபின் உன்பக்கம் நானிருக்க
புழுகிப் போவார் புறம் நோக்கி ஓடும் வழி கண்டறிந்தே

230. மன்னிப்பாய் எப்போதும் பிறர் புரியும் தீமைகளை
உன்னிப்பாய் கவனித்திடு உத்தமர் குணங்களையே
சென்னி நீர் பாய்ந்தல்லோ நான் உன் தவறு அத்தனையும்
மன்னித்தேன் அதை உணர்ந்து அயலார் தீதை மன்னிப்பாயே

231. சாபம் போடவேண்டாம் சாரமில்லாமல் போய்விடுவார்
கோபம் கொள்ள வேண்டாம் குணம் கெட்டுப்போய்விடுவார்
தாபமாய் இருந்திடுவாய் தாமதமாய் திரும்பிடுவார்
பாபம் பல செய்தவரும் பக்கமதாய் வந்திடுவார்

232. தூரத்தாதே துரத்தாதே துரிதமாய் வரமாட்டார்
விரத்தராய் வாழ்ந்தவர்கள் வீரம்கெட்டுப் போய்விட்டாலும்
கரத்தினால் அணைத்திடுவாய் திரும்பி வந்து பாதம் சேர்ந்தால்
உரத்துக்காய் இருந்திடுவார் என் சபைதான் கனிகொடுக்க

233. பள்ளமெல்லாம் நிரம்பிவிடும்
பக்கபெலம் வந்து சேரும்
உள்ளமெல்லாம் உறுதி பெற்று
ஊக்கமுடன் எழுந்து நிற்கும்
மெள்ள மெள்ள உயர்ந்துவரும்
ஊரெல்லாம் நிரம்பிநிற்கும்—நீ
துள்ளி நின்று பார்த்திடுவாய் என் வீரச்
செயல் அன்று கண்டே

234. கலங்கரை விளக்காம் கர்த்தாவே
கலங்காதிருக்க அருள் புரிவீர்
வலங்கரம் கொண்டு அணைத்திடுமே
நலங்களால் நான் நிறைந்திடவே
துலங்கிநின்று தூக்கிடுமே
விலங்கினங்களால் விதி ஏகிடாமல்
தலங்களில் வந்தென்னைக் காத்திடுமே

235. சோதனையால் சோர்ந்துபோய் விடாதே
சாதனைகள் பல நீ செய்தாகணும்
தூதனைத் தந்துன்னைக் காத்திடுவேன்
வேதனைகள் உன்னை தாக்கிடாமல்
போதனை பல புரிந்து பாதுகாத்திடுவேன்
நாதனைத் தேடிவந்தாய் நலமுடனே

236. விதிகளின் விளையாட்டு
மதியினால் மாய்ந்துபோகும்
துதி சொல்லி நின்றிடாதே

கதிகலங்கி நின்றிடாதே
சதி செய்வோர் சமர்த்தர் அல்ல
கொதி கொள்வாய் என் பலத்தின்மேலே

237. ஏன் இவைகள் என்றா கேட்கிறாய்
நான் ஒன்றும் அறியவில்லை என்றெண்ணியே
வான் விட்டு தேடி வந்தேன் வான்மதில் நான்
சென்றிட்டாலும்
மான்போல் பார்த்து மயங்கிடாதே
கான் மழைபோல பொழிந்திடுவேன் பொன்போல் பல
நன்மைகளை

238. விண்ணின் விளையாட்டு இப்போதெல்லாம்
மண்ணுக்கு பைத்தியமே
மண்ணின் மாந்தரெல்லாம் பரமபதம் பார்த்துப்
விண்நோக்கி மன்றாட நேரமாயிற்றே காலம் கடருதே
பண்பான பாசத்தோடே பார்த்து நான் நிற்கிறேன்—உன்னை
கண்ணின் மணிபோல காத்திடுவேன் நித்தமுமே

239. எத்தனை காலங்கள் இப்படி தேவா
அத்தனை பிழைகளும் ஆளவிடாமல்
இத்தனை களைகளும் நீங்கி என்னையே
எத்தனை செய்வோரை விலக்கி வாழ்வியுமே
சுத்தனாய் நான் நிற்க சித்தம் அருள் பரனே
வித்தகன் உம்மைப்போல் விளங்கிடச் செய்யவே
புத்தனாம் உம் செயல் விரைவினில் செய்யுமே

240. காட்டிடுவேன் விரைவில் செய்து
மாட்டி வைப்பேன் உன் எதிரிகளை
வீட்டில் வாழ விடமாட்டேன்
காட்டில் சென்றும் கடத்திடுவேன் (1998–ம் வருடம் 214–240)

போட்டி போட்டு வந்திடுவார்
கூட்டிச் சேர்ப்பாய் என் வழியே
நாட்டிவைப்பேன் நான் நாள் ஒன்றில்
சூட்டிடுவார் உன் பெயர்தனுக்கே
கோட்டி இல்லா வாழ்த்துக்களைச்
சாட்டி வைப்பார் என் நாம மகிமைக்கே

241. சிந்திக்கிறார் சீரபெறவே
நிந்தை செய்து வந்தோரெல்லாம்
விந்தை யொன்று நடைபெறவே
கந்தையான மொழிகளின் களை கழைந்தே நின்றிடுவார்
மந்தையினில் வந்து சேர்வார் காலம் ஆகும் கவலை
வேண்டாம்
சொந்த பந்தம் பாராமல் சுத்தமுடன் வந்திடுவார்
வந்து நீயும் மனம் மகிழ்வாய்—உன்
சொந்தமாய் மாறிடுவார்

242. கேட்கிறார் உன்னிடம் பணம் வேண்டும் என்றுதான்
வேட்கிறார் பலரிடம் உன் நாமம் குறைகூறி
மீட்கிறார் பாவிகளை மீட்பராம் இயேசுவினால்
நாட்களாய் காத்திருப்போர் கவலை நீங்கி சுகம் பெறுவார்

243. மனக்கவலைபட வேண்டாம் மாந்தரை நீ நம்ப வேண்டாம்
தனக்கவலைப்பட வேண்டாம் தாயகத்தில் வந்து (எல்லாம்) சேரும்
உனக்கென நீ வாழவில்லை உலகமறியும் உண்மைதானே
இனக்கவலை உனக்கும் இல்லை உலகம் அதை
அறியவேணும்
எனக்கெனவென்று வாழ்வோரெல்லாம் எதிலும் மாறா
சிந்தையுள்ளோர்
கனக்குதென்று போட்டிடுவார் கனம் நிறைந்த சபை மாந்தரை

244. விலக்கவேண்டாம் வினை செய்வோரை
பலக்கமாட்டார் பயணம்தான் செய்திடுவார்
புலக்கவைப்பேன் புத்துயிர் நீ பெற்றிடுவாய்
பலர், கருணையுடன் மலர்ந்திடுவாய்

245. வந்திடும் ஓர் நாள்தனிலே
தந்திடுவேன் உன் வேண்டல்படி
உந்து ஒன்று வந்து சேரும்
நொந்த உந்தன் உடலைக் கண்டேன்
சொந்தம் கொண்டு வந்து சொன்னேன்
விந்தை என்றெண்ணி வெகுழ வேண்டாம்
நிந்தை எதுவும் வந்திடாது—என்று
சிந்தையில் எண்ணி சிரமம் வேண்டாம்
கந்தை கட்டும் காசில்லோரை—என்
பந்தபாசம் காட்டி மகிழ்வேன்
சிந்திப்பாய் என் செயல்களெல்லாம்
மந்தையதில் மதிபோல் சொல்வாய்
எந்தை நான் என்பதால் இதமாய் சொன்னேன்
தந்தை உனக்கு நான் எப்போதுமே

246. பார் போற்றும் வேந்தனே நான்
சீர் சிறக்கச் சிறப்பாய் செய்வேன்
போர் நிறுத்தம் உனக்கு வரும்
கார் மேகம்போல் கலைந்து போவார்—எதிராய்
சார்ந்தவரெல்லாம் சரிந்துபோவார்
ஊர்ந்து போவார் உதிக்கமாட்டார்
நேர்ந்து கொண்ட உன் தியாகங்களெல்லாம்
சேர்ந்து நின்று வணங்குதென்னை—அதால்
மார்பில் சேர்த்தேன் என் வசதியுடனே

247. ஒதுக்கிலே ஓடவேண்டாம்
ஒதுங்கி எங்கும் நிற்கவேண்டாம்
அதுக்கு என்று ஏங்கவேண்டாம்
இதுக்கு என்று சொல்ல வேண்டாம்
எதுக்கு என்று கேட்க வேண்டாம்
சதுக்கத்துக்குள் சேரவேண்டாம்
பதுக்கல் காரர்களோடே
பதுங்கி எங்கும் ஒளிக்க வேண்டாம்
முதுக்கு முதுக்கு என்று பாரம் சுமக்க வேண்டாம்
புதுப்புதுக் காரியங்கள்
மெதுவாக வந்து சேரும்
போதுமென்ற மனதுடனே உன்மேல்
மோதுவோரை வெறுக்க வேண்டாம்
மாதுபோல மயங்கிடாமல்
கோதுகளைச் சேர்த்திடாமல்
காது கேட்க கர்த்தரோடே
சூது இன்றி பேசிடுவாய்
வாது நீங்கி நிற்கக் காண்பாய்
பொதுவாக வந்தவரெல்லாம்
கைது செய்யப்பட்டவர்போல்
வைது கொண்டு சென்றிடுவார்
தாதுப்பொருள்கள் உனக்குத்தேவை
சாது நான் அதை தந்திடுவேன்
பாதுகாப்பாய் நான் இருப்பேன்
தீதுகளின்றி நான் காப்பேன்
வீதிகளின் வழிகளிலே
விதம் விதமாய் நடத்துவேனே

248. வருகிறார் ஒன்று சேர
தருகிறார் பல் வாக்குகளை

மருவி நிற்பார் மாறிப்போகார்
தருணம் இதுவே நழுவ விடவேண்டாம்
சுருதிதனைத் தெளிவுடன் சொல்வாய்
பெருகி வருவார் பேரின்பம் கொள்வார்
பருகி உந்தன் வார்த்தைகளைத்தான்
கருதிவந்தோர் காலமெல்லாம் நின்றே
பொருது செய்வார் போராட்டம் மாறவே
பொருந்திப் போவார் பொன் அரும் வாக்கினால்
இருந்து தாங்குவார் சபை பெயர் கொள்வார்
தருவார் உன் தேவை எதுவென கேட்டே
புருவம் விரிப்பார் புண்ணியங்கள் கண்டுமே

249. "தேவபிதா எந்தன் மேய்ப்பனல்லோ" என்ற மெட்டு
பேசும் தேவா உம் சித்தம் அறிந்து நான்
கூசாமல் உம் வழி சென்றிடவே
நேசமுடன் உம்வாய் திறந்தே
பாசமாய் உம்பின்னே ஓடிடவே

1. எம்மாவூர் சிஷரை நீர் விட்ட வேளையிலே
எம்மோடு வாழுமென்று அழைத்த நேரம்
சம்மதம் கூறிச் சென்று கண்திறந்தீர்
தம்மையே அறிந்திட வழி திறந்தே–பேசும்

2. வாதில்களை அடைத்துக்கொண்டார் பயந்தவராய்
ஜோதியாய் நடுவில் தோன்றி சமாதானம் என்றே
புதியதோற்றத்துடன் எழுந்து நின்றீர்
மதிகலங்கும் வேளையில் நான் அருள்பெறவே–பேசும்

3. வாழ்கவெனும் வார்த்தை அன்றுபோல
தாழ்ந்துபோகும் எனக்கில்லையோ
மூழ்கின பேதுரு கேட்ட வார்த்தைபோல்
வாழ்ந்து வளம்பெறவே என்னோடும்–பேசும்

4. பேசும் பேசும் ஏழை பெலன் பெறவே
மாசெல்லாம் மறைந்தொளி தோன்றிடவே
தோஷமும் பாரமும் ஒழிந்திடவே
வீசும் மூச்சென்மேல் உயிர்தரவே—பேசும்

250. 1. காண்பியும் தேவா உம்முன்னே
மாண்புமிக மகிமை நான் பெற
வீண் பழிகளெல்லாம் மாய்ந்திடவே
காண்பவரை நான் கண்டுமகிழவே

மகிழுவேன் மகிழுவேன் கண்டு மகிழுவேன்
புகழுவேன் புகழுவேன் என் நேசர்மேல் சாய்ந்தே

2. ஏங்குதே இயேசுவே உம் வருகைக்காய்
பொங்குதே என் உள்ளம் களிப்புடனே
சங்கை செய்திட சாரோனின் ராஜாவ
கங்குல் பகலாய் புகழ்ந்து பாடவே

3. அல்லேலூயா என்னும் போதெல்லாம்—என்
தொல்லைகள் நீங்கி பாடுகிறேன்
அல்லேலூயா அல்லேலூயா கீதமே
வல்லவர் சமுகத்தில் பேரின்பமே

251. நேசரின் தோட்டம் மகா செழிப்பாய்
மேட்டின் மேல் இருக்கக் காண்கிறேன்
அது வேலியுடன் கற்களில்லாமல்
நற்குல திராட்சைச் செடியாய் தோன்றுதே

ஆலையும் கோபுரம் நடுவில் உண்டு
மாலையில் மன்னரும் காத்திருக்கிறார்
வேலைநேரம் நான் வேலை செய்கிறேன்
காலை வந்ததும் கனி கொடுக்கிறேன்

எனக்காய் யாவையும் கர்த்தர் செய்தார்
இனி அவர் செய்ய வேலையுமில்லை
சொந்த ஜீவனைத் தந்த நாதரே
உந்தனுக்காக நான் கனி கொடுக்கிறேன்

வாரும் நேசரே என் தோட்டமதிலே
சார்ந்திடுவேன் உம் மார்புதனிலே
தாரும் உம் ஜீவ கனிகளை நாம்
சேர்ந்தே புசித்து மகிழ்ந்திடவே

252. என் பெயர் ஜீவ புஸ்தகத்தில்
எழுதப்பட்டிருக்கக் காண்கிறேன்
உன் பெயர் உண்டோ சொல் மனமே
நம் பெயரெல்லாம் மின்னித் தோன்றுதே

சபையில் தரித்திருப்போர் பரிசுத்தவான்கள்
ஜீவனுக்கென்று பெயர் எழுதப்பட்டவர்கள்
சீயோனில் மீதியாய் இருப்பவர் இவரே
சேர்த்துக்கொள்ளவே எம் நேசர் வருகிறார்

மேகமும் புகையும் சபையின்மேல்
அக்கினிப்பிரகாசம் இராக்காலம்
மகிமையின் காவல் எல்லா நாளும்
கொழுந்துவிட்டெழும்பும் சபையின்மேல்

வெயிலுக்கு நிழலாம் என் நேசரே
மழைக்கு குடையான சிநேகிதர்
காற்றுக்கு மறைவிடம் நீர்தானே
கூடாரத்தில் தங்கும் சபை நாமே

என் போதனை

பெற்றோரின் ஒப்புக்கொடுத்தலை தேவன் ஏற்றுக்கொள்ளுகிறார். முற்பிதாக்களைப் போலவே இக்காலமும் எக்காலமும் பெற்றோர் தங்கள் பிள்ளைகளை தேவனுடைய ஊழியத்துக்காகத் தீர்மானம் செய்கிறார்கள். அது மேலானது. இதனால் குடும்பத்தில் தேவனுடைய கவனமும் ஆசீர்வாதமும் தாராளமாயிருக்கும். பிள்ளைகள் பிறக்கும் முந்தியே பெற்றோர் அவர்களை தேவனுக்காக ஒப்புக்கொடுக்கிறார்கள். ஏற்றகாலம் வரும்போது தேவன் அப்பிள்ளைகளைச் சந்தித்து, தமக்கென்று அழைத்து, தெரிந்து கொண்டு, உபயோகப்படுத்துகிறார். விசேஷமாக பிறக்கின்ற எந்த முதற்பேறும் தேவனுக்குச் சொந்தமானது.

வாலிப வயதில் தங்கள் சொந்த கோணலான வழிகளில் நடப்பது சரியல்ல. நான் ஏன் இவ்வுலகத்தில் பிறந்தேன். என்னைப் பற்றிய தேவனுடைய திட்டம் என்ன? என் பெற்றோரின் நோக்கம் என்ன. எப்படி வாழ்ந்தால் தேவனுக்கு மகிமையாகவும், என் பெற்றோருக்கு சமாதானமாகவும் கண்ணியமாகவும், என் இன ஜன பெந்துக்களுக்க நற்பெயர் கொடுப்பதாகவும், என் தேசம் தெய்வீக அறிவில் பிரகாசமுடையதாகவும் இருக்கும் என்பதை சிந்திக்க வேண்டும். நல்ல யோசனை செய்து வாழ்க்கையை பரிசுத்தமும் வளமுடையதாக்க வேண்டும். "வாலிபனே, வாலிபப் பிராயத்தில் உன் சிருஷ்டிகரை நினை" என்று வேதம் போதிக்கிறது.

சிறு வயது முதல் வேதாகம வசனங்களை நன்கு வாசிக்கவேண்டும். "சிறுமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்பர். கற்றுக்கொள்ளும் வசனங்களை மறுபடியும் வாலிபன் தன் மனதில் கொண்டு வரவேண்டும். நன்மை செய்தால் மேன்மை உண்டு. வாலிப வயதில் பக்தியில் பழக வேண்டும். தேவபக்தி, குருபக்தி, பெற்றோர் பக்தி, தேசபக்தி இவைகளில் தேர்ச்சி பெற வேண்டும். எல்லா

பக்தியோடும் தேவபக்தியைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். தேவபக்தி இல்லாத வாழ்க்கை வெறும் சூன்யம்.

உலகில் இரு சக்திகள் இருக்கின்றன. ஆண் பெண் - பகல் இரவு,- உயர்வு தாழ்வு, என்றிருப்பது போலவே, தேவன் என்றும் சாத்தான் என்றும் இரு வல்லமைகள் இருக்கின்றன. இவைகளில் ஆண், பகல், உயர்வு இவைகளைச் சார்ந்தே தேவன் இருக்கிறார். எப்போதும் உணர்வானவைகளின் பக்கமே தன் எண்ணங்களை உயிராக எண்ண வேண்டும். தன் வாழ்க்கையின் தூரப்பார்வையில் தேவனுடைய கிருபை தன்னோடிருக்கிறது என்பதை உணர்வதே மேன்மை. உள்ளம் இருளடையாமல் வெளிச்சமாயிருப்பதே அறிவு. தேவபக்தியுடன் கூடின ஆண் தத்துவமே வாழ்க்கைக்கு நம்பிக்கையான பெலன். என் உயிருக்கும், மேன்மைக்கும், அறிவுக்கும், பெலனுக்கும் காரணம் இதுவே, சுகபோகமான வாழ்க்கை பிண வாழ்க்கை. தேவனுக்காகவும், பிறருடைய தெய்வீக நலனுக்காகவும் வாழும் சுய வெறுப்பும் தியாகமுமே வெற்றி நடைபோடச் செய்யும் உன்னத வாழ்க்கை. நான் என்னையும் என்னுடையவைகளான பெலன், சுகம், தனம் எல்லாவற்றையும் தேவனுக்காகவும், தேவனுடைய மக்களுக்காகவும் பொதுவில் சமற்பணம் செய்து வாழும் வழியை தேவன் எனக்குத் தற்ததற்காக தேவனைத் துதிக்கிறேன்.

ஒருவர் தேவனிடமிருந்து தன் பண்பிலும் அறிவிலும் பெற்றுக்கொள்ளும் எதையும் மறைத்து வைப்பது அநீதி. எவைகளைப் பெற்றுக் கொண்டாலும் பிறருடைய ஆவிக்குரிய சரீர நன்மைகளுக்காகச் செலவிடுவதே தேவநீதி, மனிதர் எவரும் எதையும் கொண்டு வந்தவர்கள் அல்ல. தேவன் தந்தவைகளே மனிதனிடம் உண்டு. ஒருவனுக்கு கொடுக்கப்பட்ட தாலந்து ஐந்து. மற்றவனுக்கு இரண்டு. இன்னொருவனுக்கு ஒன்று இவைகளைப் பரம ஏஜமானிடம் இலாபமான கணக்கு ஒப்புவிக்கும்படி வாழ்பவனே சிறந்த மனிதன். மனித நம்பிக்கை வீண்போகாது. அதற்காக தேவ நம்பிக்கையுடன்

வாழ்வதே சாலச் சிறந்தது. கொடுப்பதால் குறைந்து போகாது. சேர்த்து வைப்பதனால் தீமைகள் பெருகும். இறைத்த கிணறு ஊறும். ஊறாவிட்டால் அதை உடையவன் ஊறவைப்பான்.

கொடுப்பதை வாங்க மக்கள் கூட்டம் கூடும். கூடும் கூட்டத்துக்கு கொடுக்காமலிருந்தால் அவர்கள் மனம் வாடும். பெற்றுக் கொள்ளும் மக்களும் கொடுக்கப் பழக வேண்டும். சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான். பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான். இதனால் கொடுக்கிறவர்களும் வாங்குகிறவர்களும் ஒருமித்து சந்தோஷப்படுவார்கள். எப்போதும் கையேந்திக்கொண்டே வாழ நாம் தரித்திரமுடைய பிள்ளைகள் அல்ல. நம்மை ஐசுவரியவான் களாக மாற்றுவதற்காக, இயேசுகிறிஸ்து, தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே தாழ்த்தி அடிமையின் ரூபமெடுத்து மனித சாயலானார். அவர் மனித ரூபமாய் காணப்பட்டு, மரண பரியந்தம் அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் தம்மைத்தாமே தாழ்த்தினார். இதனால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தினார். இதனால் அவர் மேலான பெயர் பெற்றார். இனி நீங்கள் தரித்திரர் அல்ல. கொடுக்கவேண்டிய தேவனுடைய பிள்ளைகள். கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும். நான் தேவனுக்கும் தேவனுடைய இராஜ்யம் பூமியில் ஆரம்பிக்கப்படவும் கொடுப்பதினால் எனக்கு ஒரு குறைவும் இல்லை. கொடுப்பதினால் பெற்றுக் கொள்ளுகிறேன். பெற்றுக்கொள்ளுவதினால் கொடுக்கிறேன். இயேசுகிறிஸ்துவிடம் ஐந்து அப்பமும் இரண்டு சிறு மீன்களும் கொடுத்த சிறவன் ஐயாயிரம் ஆண்களுக்கும் ஏராளமான பெண்களுக்கும், அநேகம் பிள்ளைகளுக்கும் உணவு கொடுத்தான் என்ற நற்சாட்சியைப் பெற்றான். "தரித்திரனுக்குக் கொடுக்கிறவன் தாழ்ச்சியடையான்" என்பது திருவசனம்.

அறிவை அடக்குவது சரியல்ல. தேவனிடமிருந்து பெற்றுக்கொண்ட அறிவைப் பகர்ந்து கொடுப்பதுவே ஞானம். நான்

உபவாசத்தோடும் ஜெபத்தோடும் தேவ சமுகத்திலிருந்து தேவனுடைய ஞானத்தைப் பெற்றுக்கொண்டேன். நான் பெற்றுக்கொண்ட அறிவை மற்றவர்களிடம் ஒப்படைத்தேன். மிகவும் சிறிய எளிமையான வேதாகமக் கல்வித் திட்டங்களை அமைத்து அவைகளை, தேவனுடைய ஊழியத்துக்காகத் தங்களை ஒப்புவித்த ஆண்களுக்கும் பெண்களுக்கும் திண்ணைப்பாடமாகக் கற்பித்தேன். தேவன் இந்த திட்டத்தை ஆசீர்வதித்தார். இது வர வர பிரகாசத்துடன் வளர்ந்தது. இதை நான் எழுதுகிற நாளில் "யேகோவா நிசி வேத கலாசாலை" என்னும் பெயரில் Diploma in Theology, Bachelor in Theology என்னும் பட்டப் படிப்புகளுடனே தேவனுடைய ஊழியர்களைப் படிப்பித்து, பயிற்சி கொடுத்து வெளியே அனுப்பும் ஸ்தாபனமாக இது விளங்குகிறது. தொடர்ந்து மேற்பட்டப் படிப்புகளையும் ஆரம்பிக்க வேண்டும் என்னும் தேவ தரிசனமும் என் முன் நிற்பதைக் காண்கிறேன். அறிவைப் பரப்புவதால் அறிவு குறைந்துவிடாது. அறிவு கனிகொடுக்கும். தம்மைபோல வளரும் தன்மை உடையது. ஆனால் அவ்வறிவு வெறும் உலக அளவில் மட்டுமே நிற்குமானால் அது பட்டுப்போகும் அல்லது படர்ந்து முறிந்துவிழும். அறிவை தெய்வீகத்தோடு குழைத்துப் பரப்பினால் நற்பொலிவுடனே என்றென்றும் வளர்ந்து கனி கொடுத்துக்கொண்டே இருக்கும். எத்தனையோ அறிவுகள் ஆண்டவர் அருள் இல்லாமையால் பிந்தி எழுந்த அறிவாற்றல்களால் அடக்கம் பண்ணப்பட்டுப் போயின. விஞ்ஞான அறிவிலும், மெய்ஞான அறிவிலும் தெய்வீகத்தோடு இணைந்து போகாதவைகள் எல்லாம் மாய்ந்து மறைந்து கொண்டிருக்கின்றன. "பரிசுத்தரை அறிகிறதே அறிவு" என வேதம் போதிக்கிறது. தேவனுக்கு பயப்படுவதே ஞானத்தின் ஆரம்பம். இயேசுகிறிஸ்துவே ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார். அறிவில் தேற ஆண்டவரின் கிருபை வேண்டும்.

சிறுவர்களையும் வாலிபர்களையும் அற்பமாக எண்ணக் கூடாது. நான் சிறுவனாயிருந்தேன். வாலிபனானேன், வயோதிப காலத்தில்

இதை இன்னும் அதிகமாக அறிந்து கொண்டேன். மாயையின் காலத்தில் சிறுவர்களும், வாலிபர்களும் வாழுகிறார்கள். இம்மாயையில் சிக்கிப் போகாமல் அவர்களை காப்பாற்ற வேண்டும். மாயையில் மனம் போக விடாமல் அவர்களை மாயையின் வல்லமையிலிருந்து விடுவிப்பது என்ன? அதுவே மாயமில்லாத தேவாமிர்தமான திருவசன சத்தியங்களை அவர்களைப் படிக்க வைப்பதும் சிறுபிராயம் முதல் வேத எழுத்துக்களையும் பரிசுத்த வேதாகம உண்மை வரலாறுகளையும் எளிதாக இளைஞர் புரிந்துகொள்ள புத்தகங்களை எழுதி அவைகளைக் கற்பிக்கும்படி ஓய்வுநாள் வேதபாட ஆசிரியர்களிடமும் வேதகலாசாலை ஆசிரியர்களிடமும் ஒப்படைத்தேன். அதன் வளர்ச்சிக்காக உற்சாகமூட்டும் பரிசுகளையும் கொடுத்தேன். இவ்வூழியத்தில் வாலிபர்களும், கன்னிகைகளும் உற்சாகமுடன் செயல்பட்டு இதை வளர்த்திக் கொண்டிருக்கிறார்கள். இவ்விதமான நற்காரியங்கள் வீட்டுக்கும் சபைக்கும், நாட்டுக்கும் நன்மை விளைவிக்கின்றது.

மெய்தேவ வழிபாடே மனிதரின் மகிமையான வாழ்க்கை செய்ய ஏற்றது. ஒவ்வொரு கிராமங்களிலும் ஜெபாலயங்கள் எழுப்பப்படுவது சிறந்தது. ஒவ்வொரு ஜெபாலயங்களிலும் மக்கள் கூடி ஆவியோடும் உண்மையோடும் ஆராதிக்க வேண்டும். இவ் ஆராதனைகளை நடத்தும்படி பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்படுகின்ற தேவஊழியர்கள் வேண்டும். பண்போடும் பாசத்தோடும் மெய்தேவ நம்பிக்கையில் மக்கள் வாழ வேண்டும். பெயரளவில் மட்டுமில்லாமல், பரிசுத்த வேதாகமத்தின் சகல சத்தியங்களையும் அங்கீகரித்து, கைக்கொண்டு பிறருக்குப் போதிக்கும் தேவ ஊழியர்களாயிருக்க வேண்டும். சில தேவ ஊழியர்கள் பொது மக்கள் ஆச்சரியப்படத்தக்கதாகவும், சபை மக்கள் பிரமிக்கத்தக்கதாகவும் சில செயல் முறைகளோடே நடந்து கொள்ளுகிறார்கள். ஆனாலும் உலகத்தாரைப் போல உண்பதும், உடுப்பதும், தங்களை அலங்கரிப்பதும் இவர்களிடம் தங்கி இருக்கின்றது. சீமானாகிய ஆபிரகாமின் மனைவியாகிய சாராளைப் போலவும், முற்கால பரிசுத்த ஸ்திரிகளைப் போலவும், அப்போஸ்தலனான

பேதுருவின் மனைவியைப்போலவும், இவர்கள் இருக்க விரும்புவதில்லை. மயிரைப் பின்னி, பொன் ஆபரணங்களை அணிந்து, விலையேறின வஸ்திரங்களை உடுத்தித் தங்களை அலங்கரித்துக்கொள்ளுவதை இவர்கள் விட்டுவிடவில்லை. இது தேவனுடைய பார்வையில் சீ, என்று வெறுக்கத்தக்கதாயிருக்கிறது என்பதை இவர்கள் அறிந்து கொள்ளுவதில்லை. இவர்களுக்குள் வாசம் பண்ணுகிற ஆவி, இவர்களுடைய அறிவையும் மனச்சாட்சியையும் வஞ்சித்து வைத்திருப்பதை இவர்கள் அறியாமலிருக்கிறார்கள். ஆனால் சத்தியத்தைக் கைக்கொண்டுவருகிற பரிசுத்தவான்களின் கூட்டமோ, தங்கள் ஆவியும், ஆத்துமாவும், சரீரமும் தேவனுக்கு முன்பாகக் குற்றமற்றதாக இருக்க வேண்டும் என விரும்புகிறார்கள். தங்கள் சரீரம் தங்களில் ஜீவன் இருக்கும்வரை, தேவனுடைய ஆலயமாக இருப்பதால், தங்கள் சரீரம் உலகத்தாலும், உலகத்தின் பாரம்பரிய பழக்கவளங்கங்களாலும் தீட்டுப்படலாகாது என்று அதை காக்கிறார்கள். உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியுமிருக்கிற பரிசுத்த ஆவியின் ஆலயமாயிருக்கிற தென்றும் நீங்கள் உங்களுடையவர்கள் அல்லவென்றும் அறியீர்களா என்ற தேவனுடைய வார்த்தைக்குப் பயப்படுகிறார்கள். ஆனால் சில தேவ ஊழியர்கள் என்னப்படுகிறவர்களுக்கு இந்த தேவ பயம் இல்லை. தங்கள் நிஷ்டையினாலும், சன்னதம் பண்ணுதலினாலும் தங்களில் உருவான வல்லமையை மட்டும் நம்பி, பரிசுத்தத்துக்கடுத்த மேலான உபதேசங்களை அற்பமாக எண்ணி மனுஷரை மோசம் போக்குகிறார்கள். இவர்கள் ஆவிக்குரிய சபைக்கும் சபையின் பரிசுத்தமாகுதலின் உபதேசத்துக்கும் அந்நியராயிருக்கிறார்கள். தேவனுடைய வசனங்கள் அவர்களை நியாயம் தீர்க்கும் காலத்தில் இவர்கள் எப்படித் தப்பிக்கொள்ளுவார்கள்? கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியின் அளவுக்கு எற்றபடி பூரணப்படும்வரை, களங்கமில்லாத ஞானப்பாலாகிய உபதேசத்தால் மக்கள் வளர்க்கப்படவேண்டும். இம்மைக்காக மாத்திரம்—அதாவது, உடல் சுகம், உணவு, உடை, வீடு, உத்தியோகம், பணம்,

பொருள் போன்ற இவைகளுக்காக மாத்திரம், கிறிஸ்துவிடத்தில் நம்பிக்கையுடையவர்களாக இருந்தால், கிறிஸ்து வெளிப்படும்போது, மற்ற மனிதர்களைப்பார்க்கிலும் இவர்கள், பரிதவிக்கப்படத்தக்க வர்களாயிருப்பார்கள். அஸ்திபார உபதேசங்களை அக்கரையோடே கடைபிடிக்க வேண்டும். இப்படிப்பட்ட பைத்தியமாக எண்ணப்படுகின்ற உபதேசங்களினாலே இரட்சிக்கப்படுகிறவர்களை மகிமைக்கு ஆயத்தப்படுத்துவது தேவனுடைய சித்தமாயிருக்கிறது.

பாடுகள் பரிசுத்தவான்களின் அபிஷேகத்தில் சேர்ந்திருக்கிறது. அன்றைய அபிஷேகத்தைலத்தில் நான்கு பொருள்கள் சம அளவாகச் சேர்க்கப்பட்டன. இது தேவனுடைய நியமனம். சாதாரண விவசாயியாயிருந்த சவுல் அபிஷேகம் பண்ணப்பட்டபின்பு பெலிஸ்திய ரோடும் அமலேக்கியரோடும் யுத்தம் பண்ண நிர்பந்திக்கப்பட்டான். தாவீது அபிஷேகம் பண்ணப்பட்டபின்பு சவுலினாலும், புறஜாதி அரசர்களாலும் துன்பங்கள் பல அனுபவித்தார். பவுல் தேவ ஆவியின் அபிஷேகத்துக்குப்பின்பு கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் நிந்தைகளை யும், அடிகளையும் இன்னும் பற்பலவிதமான பாடுகளையும் அனுபவித்தார். இன்றைய மக்களிலும் பரிசுத்தாவியின் அபிஷேகம் பெற்ற மக்கள் எப்போதும் கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் பாடுகளைச் சந்தித்துக்கொண்டேயிருக்கிறார்கள். என்னுடைய ஊழியத்தின் பாதையில் பாடுகளின் பாதையிலேதான் கடந்து கொண்டிருக்கிறதே னென்றால், அது அதிசயமானதல்ல. இக்காலத்துப்பாடுகள், பின்னால் வெளிப்படப்போகிற மகிமைக்கு விதைவிதைப்பதாயிருக்கிறது. அவருடனே பாடுகளை சகிக்கிறோமானால் அவருடனே ஆளுகையும் செய்வோம் என்பது உண்மை. தேவனுடைய இராஜ்யம் பூமியில் நிறுவப்பட எந்தப் பாடுகளையும் சந்திக்க ஆயத்தமாயிருப்போமாக. கர்த்தர் நல்லவர். தீமைக்கு ஒப்புக்கொடுப்பவர் அல்ல.

நமது பிரயாணம் பரம சீயோனுக்கு நேரானது. இங்கு தேவனுடைய காரியமாகச் செய்யும் எந்த பிரயாணமும் மிகவும்

சிறப்புடையதே. நற்செய்தியுடன் பிரயாணம் செய்யும் பிரயாணியின் கால்களின் அழகை தேவன் பார்த்து ரசிக்கிறார். அவனுடைய கால்களைச் சிக்கி கொள்ளாதபடிக் காப்பது அவருடைய வேலை. சீயோன் பிரயாணிகளின் கால்களை மான்களின் கால்களைப் போலாக்குகிறார். அவர்களுடைய கால்கள் பாடுகளான கற்களில் அடிபட்டுக் காயப்படாதபடி இருக்கவேண்டுமென்பதே அவர் விருப்பம். பரிசுத்தவான்களுடைய ஊழியங்களை தேவன் ஊக்குவிக்கிறார். பூலோகமெங்குமுள்ள சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டும் என்பது அவருடைய கட்டளை. இக்கட்டளையை நிறைவேற்றும்படி புறப்பட்டுப் போய் சகல ஜாதிகளையும் சீஷர்களாக்கி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுக்க வேண்டியது தேவ ஊழியருடைய கடமை. ஆபிரகாம், ஈசாக்கு, இஸ்ரவேலர், பவுல் முதலான அத்தனைபேரும் பிரயாணக்காரர்களாகவே இருந்தார்கள். தேவனுடைய சுவிசேஷ வசனங்களோடே இடம் விட்டு இடம் மாறுவது தேவனுடைய இராஜ்யம் விரிவடைய வழி உண்டுபண்ணுவதாகும். ஒவ்வொரு தேவ ஊழியராலும் தேவனுடைய ராஜ்யம் விரிவடைய வேண்டும். இதற்காக ஒரு தேசத்தில் பல நாடுகளும், நாடுகளில் பல மாவட்டங்களும், மாவட்டங்களில் பல தொகுதிகளும், தொகுதிகளில் பஞ்சாயத்துக்களும் இருப்பது போல தேவன் தமது ஆதீனத்தின் கீழ் பற்பல சங்கங்களும், சபைகளும் தோன்ற இடமளிக்கிறார். தேசத்தின் உயர்ந்த தாழ்ந்த அதிகாரிகளைப் போலவும், அதிபதிகளைப்போலவும், சங்கங்களிலும் சபைகளிலும் சேவை செய்ய தமது ஊழியக்காரர்களை அழைத்து ஏற்படுத்துகின்றார். தேசம் தன் ஒற்றுமையைக் காத்துக்கொள்ள வேண்டியது போலவே, சங்கங்களும் சபைகளும் பகைமையின்றி தங்கள் ஆவிக்குரிய ஒற்றுமையைக் காத்துக்கொள்ள வேண்டும். தேவன் ஒருவரே சர்வாதிகாரியாகவும், மேலான அதிபதியாகவும் இருக்கிறார். என்னுடைய தேவ ஊழியத்தின் பிரயாணங்கள் எனக்காகவே சம்பாதிக்கும் வியாபாரப் போக்குடையதாயிராமல், சங்கம் விஸ்தாரப்படவும், சபைகள்

வளர்ந்தோங்கவும், அதற்காக தேவ ஊழியக்காரர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தவும் ஏதுவாக இருக்கிறது. நான் பெற்ற தெய்வீகச் சிறப்பு அம்சங்களை இவ்வுலகம் பெறவேண்டும் என்பதே என் சிந்தனை.

திருப்திப்படுதல் என்பது எளிதானதல்ல. எந்த மனிதனும் எதினாலும் திருப்தியடைவதில்லை. போதும் என்னும் மனம் உண்டாவது கடினம். ஆனால் இதை எளிமையுடையதாக்க வேண்டும். பணப்பிரியன் பணத்தினாலும், செல்வப்பிரியன் செல்வத்தினாலும் திருப்தியடைவதில்லை. ஆனால் சோம்பேறியும், தைரிய நெஞ்சில்லாத வனும் தங்கள் கோழைத்தனத்தினால் திருப்தியடைந்தவர்களைப்போலிருப்பார்கள். திருப்தி இல்லாதவன் அதிருப்தி என்னும் நோயினால் கட்டப்பட்டிருக்கிறான். திருப்தியடைந்தவனோ, தேன்கூட்டையும் மிதிப்பான்.

முதலாவது தன் பிள்ளைகள் திருப்தியடையட்டும் என்று தேவன் கொடுத்துக்கொண்டேயிருக்கிறார். அவர்கள் திருப்தியடைய வேண்டும் என்பதே அவருடைய விருப்பம், தேவனுடைய கிருபைதான் எதிலும் மனிதன் திருப்திப்பட உதவி செய்கிறது. கிருபையினால் இருதயமாகிய மனம் ஸ்திரப்படும். நன்மைகளினால் உன் உணவையும் வார்த்தைகளையும் தேவன் திருப்திப்படுத்துவார். தேவ ஊழியர்களும் சபைமக்களும் சபைகளில் புத்திரப்பாக்கியங்களைக் கண்டு திருப்தியடையலாம். வெறும் ஜெபாலயங்களை வைத்து, திருப்திப்பட்டுக் கொண்டிருக்கக்கூடாது. தங்களிடம் ஆத்துமாக்களை ஆதாயப்படுத்து வதற்கான வரங்கள், வல்லமை, ஞானம், அறிவு, அனுபவம் ஆகிய இவைகளாலே திருப்தியடைய வேண்டும். தேவ ஊழியக்காரர் களின் கிரியைகளின் பலன் ஆத்துமாக்களை தேவனுடைய இராஜ்யத்துக்காக ஆதாயப்படுத்துதல். நீ திருப்தியடைந்தபின்பு உன் பிள்ளைகளைத் திருப்திப்படுத்து என தேவன் கட்டளையிட்டிருக்கிறார். திருப்தியடைந்தவர்கள் பாக்கியவான்கள். எனக்கு தேவனுடைய ஊழியத்தில் இன்னமும் திருப்தி உண்டாகவில்லை. என்னுடைய திருப்தி பூரணமானபின்பு தேவன் என்னை எடுத்துக்கொள்ளுவார் என நம்புகிறேன்.

இன்னமும் ஆத்துமாக்களை ஆதாயம் செய்யவேண்டும். திரளான தேவ ஊழியக்காரர்களையும் ஏராளமான கிளைச் சபைகளையும் எழுப்ப வேண்டும் என்ற எண்ணம் நாள்தோறும் என் மனதில் தோன்றி கொண்டே இருக்கிறது. அதற்காக ஒத்துழைப்புத்தர என்னிடமுள்ள மக்கள் தொகையில் எனக்கு திருப்தி இல்லை. சிலர் ஒத்துழைப்புத்தர எழும்பினாலும் அதுவும் போதுமானதாக இல்லை என்றே காண்கிறேன். என் சொந்தத் தேவைகள் அதிகம் இல்லை. அவைகளெல்லாம் சந்திக்கப்படுகின்றன. ஆனால் என்னால் சந்திக்கப்படவேண்டிய பிறருடைய தேவைகள் எனக்குத் திருப்தியுண்டாகும்படி சந்திக்கப் படவில்லை. இதனால் நான் பல சமயங்களில் ஆத்திரப்படுகிறேன். தேவனோ நான் பொறுமையாக இருந்து, அதில் விளங்கும் தேவச்செயல்களைக் கண்டு நான் திருப்தியடைய வேண்டுமென்று விரும்புகிறார். தேவனுடைய ஊழியத்தில் நிதானமாகவும், ஞானமாகவும் உழைக்கிறவர்கள், தாங்கள் திருப்தியடையும்படி நன்மைகளைப் பெறுவார்கள். ஜீவியத்திலும் ஊழியத்திலும் பின் வாங்குகிறவர்கள் தங்கள் திருப்தியில் தோல்வியைத் தழுவுவார்கள். வாஞ்சையுடையவர்களை தேவன் தமது நன்மைகளால் திருப்தியாக்குவார்.

எனக்கும் ஒரு எதிர்பார்ப்பு உண்டு. வயதுக்கும், இனத்துக்கும், குடும்பத்துக்கும், அறிவுக்கும், நடைமுறைக்கும் தகுந்தாற்போல் அந்த எதிர்பார்ப்பு இருக்கிறது. தேவனுடைய பிள்ளைகளைக் கேட்டால், திடீரென என் எதிர்பார்ப்பு கிறிஸ்துவின் வருகை அல்லது பரலோகக் குடியிருப்பு என்று சொல்லுகிறார்கள். சற்று நிதானித்து இந்த வார்த்தையைக் கூறலாம். நமது எதிர்பார்ப்பு இயேசுவின் வருகையாயிருந்து, அதன்படி இயேசு இந்நாள் வந்துவிட்டால் பூர்த்தியடையாத நமது வேலையை அவர் காண்கிறவராயிருப்பார். நமது வேலை என்ன? சகல ஜாதிகளையும் சீஷர்களாக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினால் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, தேவன் கற்பித்தவைகளைக் கைக்கொள்ளும்படி அவர்களுக்குக் கற்பிப்பது அல்லவா? இவ்வேலை இன்னும் பூரணப்

டவில்லையே. இவ்வேலையில் எவ்வளவு பங்கை நீ நிறைவேற்றி யிருக்கிறாய்? தமிழ் நாட்டின் ஜாதிகள் எத்தனை? இந்திய மாநிலத்தின் ஜாதிகள் எத்தனை? ஆசியாமுழுவதிலுள்ள ஜாதிகளும் ஐரோப்பா முழுவதிலுமுள்ள ஜாதிகள் எத்தனை? அவைகளில் எத்தனை ஜாதி மக்களை ஞானஸ்நானம் பெற வழிநடத்தியிருக்கிறாய்? எத்தனை ஜாதிகளுக்கு கிறிஸ்துவின் ஒரே சரீரமாகிய சபையாயிருக்கும்படி கற்பித்திருக்கிறாய். பரலோகத்தின் அத்தனை ஜாதிகளும் கிறிஸ்துவுக்குள் பரிசுத்தவான்கள் என்னும் ஒரே ஜாதியாராக மாறுவதற்காக எவ்வளவுதூரம் உன் தேவ ஊழியம் நடந்திருக்கிறது. இவ்வேலை தான் உன் எதிர்பார்ப்பு. கிறிஸ்துவின் வருகையை நீ எதிர்பார்த்தாலும் பார்க்காவிட்டாலும் கிறிஸ்து வருவார். ஆனால் கிறிஸ்துவுக்குள் சகல ஜாதிகளையும் ஒன்றாகக் கூட்டிச் சேர்க்க வேண்டும் என்று நீ விரும்பாவிட்டால், ஜாதிகள் தேவனுடைய நீதியையும் தேவனுடைய மகிமையையும் காண்பதில்லை. தேவன் இந்த நல்ல ஊழியத்துக்காக அழைத்துத் தெரிந்துகொண்டதற்காக தேவனைத்துதிக்கிறேன். ஜாதிகள் தேவனுடைய மகிமையைக் காண்பதற்காக தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். சர்வ வல்லவர் என் சொந்தமானதற்காக அவரைப் போற்றுகிறேன். ஜாதி, மொழி, இனம், தேசம் வித்தியாசமில்லாமல் ஆத்துமாக்கள் ஆதாயம் பண்ணப்பட வேண்டும் என்பதே என் எதிர்பார்ப்பு. இதற்கு தேவன் எனக்குத் துணையாக இருக்கிறார். எல்லா மனிதருடைய ஆத்துமாவும் தேவனுடையது. உலகமோ, சாத்தானோ எந்த ஆத்துமாவையும் கொள்ளை கொண்டு போகக் கூடாது. இதற்காகவே இயேசுகிறிஸ்து பூமியில் மனிதனாகத் தோன்றினார். நம் எல்லாருடைய பாவங்களையும், சாபங்களையும், துக்கங்களையும், பலவீனங்களையும், நோய்களையும் தமது மேல் ஏற்றுக்கொண்டு, அத்தனையையும், தாம் சிலுவையிலறையப்பட்டதால் அழித்துப்போட்டார். அவர் சிந்தின அவருடைய இரத்தத்தினால் அவ்வளவும் கரைந்து ஒன்றுமில்லாமல் மாறிப்போய்விட்டன. சந்தோஷம், சமாதானம், திருப்தி, நிம்மதி, ஆறுதல்,

நிச்சயம், உண்மை, சுகம், பெலன், மன நிறைவு முதலானவைகளால் அவைகளெல்லாம் விழுங்கப்பட்டுப்போனது.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே ஜெயம் கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்

நான் இன்னும் தேவனுடைய ஊழியத்தில் ஆசையாய்த் தொடருகிறேன். எனக்காகவும் ஊழியத்தின் தேவைகள் சந்திக்கப்படவும் ஜெபியுங்கள்.

YOUTH CAMP

YOUTH, V.B.S. DIRECTORS